Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 24
நவம்பர் 15 - 21, 2012
ரூபா 30.00

# வாரமலர் தினமுரசு

முரசு 988
THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY




## வெலிக்கடை தாக்குதலில் வெடித்தன மர்மங்கள்

## மாகாண சபைகளில் மாற்றம்! வருமோ ஏமாற்றம்?

## பட்ஜெட் 2013 யாருக்காக?

தீபத் திருநாளில் குதூகலித்திருக்கும் வாசக நெஞ்சங்களோடு முரசும் இணைந்து கொள்கின்றது.



## ஆலயம் என்பது...

"ஆலயம் தொழுவது சாலமும் நன்று..." எமது மூதாதையர்கள் கூறியது போன்று நாளெல்லாம் இறைவன் எழுந்தருளியிருக்கும் திருக்கோவில்களுக்குச் சென்று வழிபடுதல் மனதுக்கு மகிழ்வு தரும் விடயமாகும்.

ஆனால், ஆலயங்கள் என்பது களியாட்டங்கள் நிழ்த்துவதற்கும், காசுபணம் தேடுவதற்குமான ஒரு கருவியாகச் செயற்படுத்தக் கூடாது.

ஆலயமானது அதன் திருவிழாக்காலங்களில் எல்லாச் சமூகத்தினரையும், எல்லாச் சமயத்தவர்களையும் உள் வாங்கும் ஒரு காலமாகும். அதுவும் தேர்த்திருவிழாக் காலங்களில் தேரின் வடத்தைப் பிடிப்பதற்கு மக்கள் தங்கள் பகைமையுணர்வுகள், வேற்றுமை மனப்பாங்குகள் எல்லாவற்றையும் மறந்தவர்களாய் ஒற்றுமையுடன்கூடி வடம் பிடித்து மகிழ்வார்கள்.

ஆலயம் என்பது ஆண்டவன் எழுந்தருளியிருக்கும் இடம் என்பதற்கும் அப்பால் அன்புணர்வையும் இறைவன் மீது பயபக்தியையும் ஏற்படுத்தும் ஒரு புண்ணிய இடமாக விளங்குகிறது.

-அனந்த நாராயணன், கைவேல்.

## ஆன்மீகம்

## துயரினின்று விடுதலை

இன்றைய உலக வாழ்க்கையைக் கூர்ந்து நோக்கும் போது மனிதர்களில் அநேகமானவர்களுக்கு தெய்வபயம் இல்லை என்பது வெளிப்படையாகத் தெரியவருகிறது.

இவர்கள் எந்த அக்கிரமமான காரியங்களையும் துணிந்து செயற் படுத்தக் கூடியவர்களாகவும் தோற்றம் பெற்று இருக்கின்றார்கள்.

கொலை, கொள்ளை, களவு, வழிப்பறி, வல்லுறவு போன்ற கர்த்தருக்கு அருவருப்பான காரியங்களில் ஈடுபடுவோர்கள் என்றோ ஒரு நாள் சட்டத்தின் பிடிகளில் அகப்படும்போது, அவமானத்துக்கும் சமூகத்தின் பார்வையில் அருவருப்புக்கும் ஆளாகி துயர் சுமக்க ஆயத்தமாகிறார்கள்.

ஆனால், இதற்கு எதிர்மாறான கொள்ளையுடையோருக்கு எழும் துயரானது நீக்கப்படுகிறது. ஏனெனில் அவர்கள் நீதிமான்களாக வாழ்வதாலேயாகும்.

"கர்த்தருக்கு அஞ்சி நடப்போர் துயரினின்று விடுவிக்கப்படுவர்.

(நீதி மொழிகள் - 10:8)" எனும் வேதவசனம் இதை விரிவாக எடுத்துரைக்கிறது.

சாமுவேல், புதுக்குடியிருப்பு.

## வள்ளல் நபியின் போதனை

இன்று மனிதன் நிம்மதியிழந்து கவலையில் புரண்டு, பீதியடைந்து, அமைதி குலைந்து அவன் வாழ்கின்றானே இது ஏன் தெரியுமா? அவனிடம் உள்ள பணம்தான் இதற்குக் காரணம். இந்தப் பணம் அவனை அடிமை விலங்கிட்டு அவனது மனச்சாட்சியையும் சாகடித்து அவனுடைய மனிதப் பண்புகளையும் மரிக்கச்செய்து விடுகிறது.

இதற்கு இவன் என்ன செய்ய வேண்டும். திருமறையின் பக்கம் திருப்ப வேண்டும். அருள் நபி அருகில் வர வேண்டும். அப்போதுதான் அவன் தேடிய பணம் அவனை நிம்மதியாக வாழவிடும்.

பணம் நல்லதொரு பணியாளன். அதனை நம் ஏவலாளாக வைத்திருக்கும்வரை அது எம்முடன் இருந்து நன்றாகப் பணியாற்றும்.

பணத்தைத் தேடுவது மட்டும் திறமையல்ல. தேடிய பணத்தை நாம் செலவிடுவது இருக்கிறதே அதுவும் திறமையான செயலாகும்.

பணம் எல்லாம் ஒரு பக்கமே சேர்ந்து ஒரு சிலர் பெரும் பணக்காரராகவும் பலர் வறியவர்களாகவும் வாழ்வது ஓர் உயிர் பிரச்சினை. செல்வந்தர்களிடம் இருந்து பணத்தை வசூலித்து வறியவர்களுக்கு வழங்க வேண்டுமென்பது வள்ளல் நபியின் போதனை.

எம்.சி. கலீல், கல்முனை - 05.

## கவிதைப்போட்டி இல 985



**பாராட்டுக்குரியது**

### பிணமா? படமா?

துப்பாக்கியினால்
நீ சுடப்போகும் உடல்
புழுத்துப் போகும் 'பிணம்'
கெமராவினால்
நான் 'சுட'ப்போகும் உடல்
நிலைத்து நிற்கப் போகும்
'படம்'.

அ.சந்தியாகோ,
கண்டி.

### கடைசி மூச்சிலும் கடமை

நீ என்னைச் சுட்டுப்
பொசிக்கிடினும்
என் இலட்சியம்
தடைப்படாது.
மரணம் எனைத் தழுவுமுன்
கமராவுள் உனை நான்
அமுக்கிவிட வேண்டும்.
நாளைய செய்தியில்
நானும் நீயும்
இடம்பெற
இது என் கட்டாயக் கடமை.

V.A.ஜெஹ"னஸ்,
மட்டக்களப்பு.

## கவிதைப் போட்டி இல 988



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 26.11.2012

கவிதைப் போட்டி இல. 988 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### முடிந்தால் சுடு!

துஷ்டனே! நீ
சுட்டாலுங்- குண்டு
துளைக்காது
இந்தப்
பத்திரிகா -தரும
பத்தினியின் மகன்
தலையை!
உங்களின்
படுகொலைக் கலையை - இந்த
உலகிற்கே -படம்
பிடித்துக் காட்டுவோம்
முடிந்தால் சுடு!

பாண்டியூர்
பொன் நவநீதன்

### விபரீதத்திற்குள்...

விபரீத சிந்தனைகள் கொண்ட
வேண்டப்படாத உலகில்
தன் தொழிலை
விபரீதத்திற்குள்
புதைத்த ஒருவன் இவன்.

நிலவன்,
அச்சுவேலி.

### சுதந்திரமில்லை

எங்கள் ஜனநாயக
நாட்டில் இன்று
புகைப்படம்
எடுக்கவும்
எமக்கு சுதந்திரம்
இல்லையா?



சு.ஜெயரூபன்,
பருத்தித்துறை.



### கடமை?

பேனா முனையை
உடைக்க உன்
துப்பாக்கி முனையைக்
காட்டுகிறாயே
இதுவா உன்
கடமை?

அ,ப்தீன் மு.அஸாம்
கிண்ணியா -05.

## உங்கள் பக்கம்

### பாரா முகம் ஏன்?

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள சிராட்டிக்குளம் என்னும் கிராமத்திற்குமான போக்குவரத்துக்கள் சீராக இல்லாமையால் குறித்த பிரதேச மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

சுமார் நூறு குடும்பங்கள் வரையில் வாழ்ந்து வருகின்ற இக்கிராமத்தில் போக்குவரத்து வசதிகள் எவையும் ஏற்படுத்தப்படவில்லை.

அத்தோடு மருத்துவ வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. இதனால் இங்குள்ள மக்கள் தமது தேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு சுமார் ஏழு கிலோ மீற்றருக்கும் அப்பாலுள்ள பாண்டியன் குளத்துக்கோ அல்லது 15கிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பாலுள்ள மல்லாவி நகருக்கோ செல்ல வேண்டியநிலை காணப்படுகின்றது.

ஆனால், நகரங்களுக்குச் செல்வதற்கான பிரதான வீதிகள் நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாது குன்றும் குழியுமாக சிதைவடைந்து காணப்படுகின்றது. அத்துடன் இக்கிராமத்துக்கான பிரதான வீதியைக் குறுக்கறுத்துச் செல்லும் பறங்கி ஆறு பருவமழை காலங்களில் பெருக்கெடுக்கும் பொழுது போக்குவரத்து முற்றாகத் துண்டிப்படும் சூழலும் காணப்படுகின்றது.

இவ்வாறான காலப்பகுதிகளில் அவசர தேவைகளுக்குக் கூட வெளித்தொடர்புகளைப் பெற்றுக் கொள்ள முடியாது இக்கிராம மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

எனினும் இந்த மக்களின் அவலங்கள் அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற அதிகார மட்டத்தினரின் கண்களுக்குப் படாமலிருப்பது வேதனையான விடயமாகும் என்பதால் முரசின் உங்கள் பக்கம் ஊடாக உரியவர்களின் கவனத்திற்குச் சமர்ப்பிக்கின்றேன்.

க.பாலசுப்பிரமணியம்
சிராட்டிக்குளம்.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலை நகல்
(Fax): 0212221811
ஈ-மெயில்:
(E-mail):-
thinamurasu@live.com
விளம்பரத் தொடர்புகளுக்கு:-
0212220188





### பாராட்டு!

அன்பு முரசே!
முரசு தரும் செய்திகள் யாவும் தித்திப்பானவை. சினி விசிட் பகுதியில் வெளியான சூடான சினிமாச் செய்திகளும் அருமையான தகவல்களும் கிளுகிளுப்பூட்டுகின்றன. மேலும் விளையாட்டுப் பக்கம் பிரமாதமாக இருக்கின்றது. பலதரப்பட்டவர்களையும் கவருவதற்காக முரசு மேற்கொள்ளும் ஒவ்வொரு முயற்சிகளும் வெற்றி முரசங்களாக மாறுவது பாராட்டுக்குரியது.

கே.றொசான், மன்னார்.

## வாசகர் சாலை



### என்னைக் கவர்ந்தவை!

தேன் சொட்டும் எனது பொன் முரசே! பூலானின் புதுமைப் தொடர், வலிகளின் சன்மானம், சே குவேரா வின் வாழ்க்கைப் பதிவுகள் என அசத்துகின்றது உன் பக்கங்கள். சிந்தியாவின் சுவாரசியமான கருத்தாளம் மிக்க பதில்கள் மிரமிக்க வைக்கின்றது.

மற்றும் உன்னில் தவழ்ந்து வரும் உணர்வுபூர்வமான தேன்கிண்ணம் என்று எல்லாமே சிறப்பாக சிறுவர் முதல் பெரியோர் முதல் எல்லோரையும் கவர்ந்து நிற்கின்றது.

எம்.தர்மேந்திரா, வவுனியா.

புலிகளின் வீழ்ச்சி புதைந்து கிடந்த பல மறுமங்களை எமக்குப் புரிய வைக்கின்றது. அண்மைய வாரங்களாக கிட்டுவுக்கு நிகழ்ந்த விஷ்லாங்கங்களை விலாவாரியாக எடுத்துரைத்த முரசுக்குப் பாராட்டுக்கள்.

985 ஆவது முரசில் 13 ஆவது சட்டத் திருத்தமும் தமிழர்களுக்கான தீர்வும் என்ற தலைப்பில் எக்ஸ்ரே ரிப்போர்ட்டின் அலசல் அற்புதம். தொடரும் முரசின் துணிச்சலும் சொல்லவேண்டியதை சொல்ல வேண்டிய நேரத்தில் சொல்லுகின்ற சாமர்த்தியமும் பாராட்டத்தக்கது.

எஸ்.அஸ்வினி, அராலி.

### சுவடுபதித்த அற்புதனே!

நடராஜா அற்புதராஜா
நாமமோ வினோதம் ராஜா
பாரை விட்டு நீ மறைந்து
பதின்மூன்று ஆண்டுகள்
ஓடி மறைந்தாலும்
ஓயாது மனக்கவலை
அற்புதராஜாவே!
அறிவாயா நற்செய்தி
திக்கெட்டும் செல்கிறது
தினமுரசு வாரமலர்
வாசகர் இதனை
வாசித்து
வாழ்த்துக்கள் பரிமாறல்
முரசை நேசிப்போர்
முதலில் நினைப்பது
சூடு, சுவை, சுவாரசிய
சுவடு பதித்த அற்புதனே!

எம்.சி.கலீல்- கல்முனை-05.

# பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தியிருந்தால்

# கலவரத்தை தவிர்த்திருக்கலாம்

**-இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆணையாளர் டீ.ஈ.ஆனந்தராஜா**

**இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஏற்கனவே முன் வைத்திருந்த பரிந்துரைகளை அதிகாரிகள் நடைமுறைப்படுத்தியிருந்தால் வெலிக்கடை சிறைச்சாலை கலவரத்தை தவிர்த்திருக்கலாம் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆணையாளர் டீ.ஈ.ஆனந்தராஜா தெரிவித்துள்ளார்.**

மூன்று மாதங்களுக்கு முன்னர் வெலிக்கடை சிறைச்சாலைக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்த தமது குழுவினர் சமர்பித்த அறிக்கை தொடர்பில் உரிய அதிகாரிகளிடமிருந்து பதில் நடவடிக்கைகளை எதிர்பார்த்து காத்திருந்த நிலையில் இந்த கலவரம் நடந்தது துரதிஷ்டவசமானது என்றும் அவர் ஊடகம் ஒன்றிற்கு கூறியுள்ளார்.

தொடர்ந்து அவர் கருத்துரைக்கையில், இந்த கலவரம் தொடர்பில் அடுத்துவரும் நாட்களில் மனித உரிமைகள் ஆணைக்குழு வெலிக்கடை சிறைச்சாலைக்குச் சென்று விசாரணை நடத்தும் என்றும், அப்போது கலவரத்துக்கான காரணங்கள் மற்றும் அவற்றின் பின்னணி குறித்து ஆராய்ந்து அரசாங்கத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் என்றும் தெரிவித்தார்.

மேலும், இலங்கையில் சிறையில் நடக்கும் வன்முறைகளுக்கு சிறைச்சாலைகளில் காணப்படும் இடப்பற்றாக்குறையே முக்கிய காரணம் என்றும் சிறைகளில் போதைப்பொருள் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள், மரண தண்டனைக் கைதிகள், ஆயுட்தண்டனைக் கைதிகள், தடுப்புக் காவல் கைதிகள் என பல தரப்பினரையும் ஒரே வளாகத்தில் வைத்திருப்பது ஆபத்தானது என்பதை அதிகாரிகளிடம் தமது ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## செதில்களை கடத்திய இந்தியர் சிக்கினார்

அழிவின் விளிம்பிலுள்ள அரிய வகையான அழுங்கு செதில்களை கடத்துவதற்கு முயன்ற இந்திய பிரஜை ஒருவரை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் சுங்க பிரிவினர் கைது செய்துள்ளனர்.

இவரிடமிருந்து இரண்டு கிலோகிராம் அழுங்கு செதில்கள் கைப்பற்றப்பட்டன. பயணப்பொதியில் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைத்து கடத்துவதற்கு முயற்சித்த வேளையிலேயே இவரை கைது செய்துள்ளதாக சுங்க பிரிவினர் அறிவித்துள்ளனர்.

இவரிடம் மேற்கொண்ட விசாரணைகளில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் கடந்த இரண்டு வருடங்களில் 100 தடவைகள் அவர் பயணித்ததாக தெரிவிக்கப்படுகின்றது. சர்வதேச வர்த்தக உடன்படிக்கையின் பிரகாரம் அருகிவரும் உயிரினங்கள் மற்றும் ஆபத்தான விலங்குகள் வர்த்தகம் செய்வதற்கு தடைச்செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## கிழக்கின் கல்வித்துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு

தயட்ட கிருள்ள தேசிய அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாணத்தின் கல்வித் துறைக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் அதிகளவிலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன என கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட தேசிய பாடசாலையான டீ.எஸ். சேனநாயக்கா வித்தியாலயத்தில் நடைபெற்ற அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான சகவாழ்வு நற்புறவு சந்திப்பு நிகழ்வில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொலைத்தொடர்பு அமைச்சரும் தயட்ட கிருள்ள திட்டத்தின் தலைவருமான ரஞ்சித் சியம்பலாபிட்டிய தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை, மாகாண கல்வி அமைச்சர் விமலவீர திசானாயக, அம்பாரை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சரத் வீரசேகர, பி.எச். பியசேன, ஸ்ரீறியானி விஜய விக்ரம, மாவட்ட செயலாளர் நீல் டீ அல்விஸ் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## அதிநவீன தொழில்நுட்பங்களுடன புதிய சிறைச்சாலை

அமெரிக்காவைப் போன்று அதிநவீன தொழில்நுட்பங்களுடன் கொழும்பிற்கு வெளியே சிறைச்சாலை ஒன்றை அமைப்பது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெலிக்கடைச் சிறைக் கைதிகளின் நடவடிக்கைகள் மற்றும் அவர்களை பார்வையிட செல்வோர் தொடர்பில் கண்காணிக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது.

சிறைச்சாலையில் அதிகளவு சனநெரிசல் நிலவுவதனால் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிக்கல் நிலைமை ஏற்படுவதால், கைதிகளை சந்திக்க செல்வோரை வீடியோ பதிவு செய்யக்கூடிய வகை யில் சிறைச்சாலை அமைக்கப்பட உள்ளது.

இந்த அதி நவீன சிறைச் சாலையை அமைப்பதற்கு 500 மில்லியன் ரூபா செலவாகும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

தற்போதைய நிலைமையின் காரணமாக வெளிநாட்டுக் கைதிகளுடன் உள்நாட்டுக் கைதிகள் தொடர்புகளைப் பேணக் கூடிய சந்தர்ப்பம் காணப்படுகின்றது என பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அண்மையில் வெலிக கடைச் சிறைச்சாலையில் ஏற்பட்ட கலவரத்தினையடுத்தே அரசு இவ்வாறனதொரு முயற்சிக்கு திட்டம் தீட்டியுள்ளது என மேலும் அச்செய்தி தெரிவித் துள்ளது.

# பட்ஜெட் 2013 யாருக்கு?

**அமலன்**

**2013** ஆம் வருடத்துக்கான இலங்கையின் வரவுசெலவுத் திட்டம் கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.இந்த வரவுசெலவுத்திட்டம், சமர்ப்பிக்கப்படும் முன்னரே, அதன் வடிவம் தொடர்பில் கருத்துக்களும் விமர்சனங்களும் வெளியிடப்பட்டு வந்தன. இதன்படி வரவுசெலவுத்திட்டத்தில் அரச பணியாளர்களின் சம்பள உயர்வு விடயத்திலோ அல்லது நிவாரணங்களிலோ சாதகமான விடயங் களை எதிர்பார்க்கமுடியாது என்றுகருத்துக்கள் முன்வைக்கப்பட்டன இதற்கு கட்டியம் கூறுவதைப்போல அமைச்சர் பசில் ராஜபக்ஷவும் வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படும் முன்னரே, அரச பணியாளர்களின் சம்பளத்தில் பாரிய உயர்வை எதிர்பார்க்கமுடியாது என்ற தகவலை வெளிப்படுத்தியிருந்தார்.

இவ்வாறான சூழ்நிலையிலும் கூட, வரவுசெலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படுவதை இலங்கைமக்கள் ஆவலுடன் எதிர்பார்த்தனர். இறுதிநேரத்திலாவது ஏதாவது நன்மைகள் தமக்கு கிடைக்குமா? என்று அவர்கள் பார்த்தனர். எனினும் அவர்களுக்கு சாதகமாக எதுவும் நடக்கவில்லை. குறிப்பாக அரச பணியாளர்கள் 13 ஆயிரம் ரூபா வரையில் தமது சம்பள உயர்வை எதிர்பார்த்திருந்தனர். இலங்கையின் வாழ்க்கை செலவுப்புள்ளியை அடிப்படையாகக் கொண்டே இந்த எதிர்ப்பார்ப்பு கோரிக்கையும் விடுக்கப்பட்டிருந்தது. ஆனால் அவர்களுக்கு வரவுசெலவுத்திட்டத்தில் கூறப்பட்ட சம்பள உயர்வு 1500 ரூபாவாகும். அதுவும் அது சம்பள உயர்வாக இல்லாமல் மேலதிக கொடுப்பனவாகவே வழங்கப்படுகிறது.எனவே அரசப்பணியாளர்களின் அடிப்படைச் சம்பளத்தில் இந்த உயர்வு எவ்விதநன்மையையும் தரப்போவதில்லை. இந்தநிலையில், தாம், இந்த வரவு செலவுத் திட்டத்தில் ஏமாற்றப்பட்டுள்ளதாக அரச பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனை ஆட்சேபித்து தாம் போராட்டங்களை நடத்தப்போவதாக அரச பணியாளர்களின் பல்வேறு தொழிற்சங்கங்களும் எச்சரிக்கை விடுத்துள்ளன. எனினும் அரசாங்கம் இதனை பாரிய சவாலாக ஏற்றுக்கொள்ளவில்லை என்றே தெரிகிறது. ஏனெனில், ஏற்கனவே திட்டமிட்ட அடிப்படையிலேயே இந்த வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதன்போது எதிர்ப்புகளுக்கு முகங்கொடுக்கும் தன்மைகளும் நிச்சயமாக ஆராயப்பட்ட பின்னரே வரவுசெலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும். எனவே வரவு செலவுத்திட்டத்தின் பின்னர் அது சார்ந்து வருகின்ற எந்த எதிர்ப்புகளுக்கும் அரசாங்கம் முகங்கொடுக்க தயாராகவே இருக்கும் என்பது நிச்சயம்.

**வரவுசெலவுத்திட்டத்தில் அரச பணியாளர்களின் சம்பள உயர்வு விடயத்திலோ அல்லது நிவாரணங்களிலோ சாதகமான விடயங் களை எதிர்பார்க்கமுடியாது என்று கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன இவ்வாறான சூழ்நிலையிலும் கூட, வரவுசெலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படுவதை இலங்கைமக்கள் ஆவலுடன் எதிர்பார்த்தனர். இறுதிநேரத்திலாவது ஏதாவது நன்மைகள் தமக்கு கிடைக்குமா? என்று அவர்கள் பார்த்த னர். எனினும் அவர்களுக்கு சாதகமாக எதுவும் நடக்கவில்லை. குறிப்பாக அரச பணியாளர்கள் 13 ஆயிரம் ரூபா வரையில் தமது சம்பள உயர்வை எதிர்பார்த்திருந்தனர். இலங்கையின் வாழ்க்கை செலவுப்புள்ளியை அடிப்படையாகக் கொண்டே இந்த எதிர்ப்பார்ப்பு கோரிக்கையும் விடுக்கப்பட்டிருந்தது. ஆனால் அவர்களுக்கு வரவுசெலவுத்திட்டத்தில் கூறப்பட்ட சம்பள உயர்வு 1500 ரூபாவாகும். அதுவும் அது சம்பள உயர்வாக இல்லாமல் மேலதிக கொடுப்பனவாகவே வழங்கப்படுகிறது. எனவே அரசப்பணியாளர்களின் அடிப்படை சம்பளத்தில் இந்த உயர்வு எவ்வித நன்மையையும் தரப்போவதில்லை. இந்தநிலையில், தாம், இந்த வரவு செலவுத் திட்டத்தில் ஏமாற்றப்பட்டுள்ளதாக அரச பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.**

இதனைத் தவிர வடக்குகிழக்கில் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு இந்த வரவுசெலவுத்திட்டத்தில் எவ்வித நன்மைகளும் அறிவிக்கப்படவில்லை. குறிப்பாக மீள்குடியேறிய மக்களுக்கான நன்மையான திட்டங்கள், கணவன்மாரை இழந்தபெண்களுக்கான நல்வாழ்வுத்திட்டங்கள், பெற்றோரை இழந்த சிறார்களுக்கான நன்மையான திட்டங்கள் எதுவும் வரவுசெலவுத்திட்டத்தில் இல்லை. இந்த நிலையில் போரின் பின்னர் வடக்குகிழக்கு பகுதிகளில் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படுகின்றபோதும் அங்குள்ள மக்களின் வாழ்வாதார அபிவிருத்திகளுக்கு போதிய அனுகூலங்கள் எதனையும் இந்த வரவுசெலவுத்திட்டம் கொண்டு வ்ரவில்லை என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதனைதவிர, பெருந்தோட்டத் துறையில் வாழும் பல இலட்சம் தமிழ் மற்றும் சிங்களதொழிலாளர்களுக்கு இந்த வரவு செலவுத்திட்டத்தில் நன்மைகள் எதுவும் இல்லை என்பது வழமையான ஒன்றாக இருக்கிறது. பெருந்தோட்டத்துறையின் நிறுவனங்களுக்கு கடன்திட்டங்கள் குறித்து வரவு செலவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டபோதும். அந்தநிறுவனங்களின் செயற்பாட்டுக்கு உந்துதலை அளிக்கும் பெருந்தோட்டத் துறையின் மூலம் இலங்கையின் பொருளாதாரத்துக்கு காத்திரமான பங்கை வழங்கும் பெருந்தோட்டதொழிலாளர்களுக்கு எவ்வித நன்மைகளும் வரவுசெலவுத்திட்டத்தில் குறிப்பிடப்படவில்லை.

எனவே அந்த மக்கள் மீண்டும் தேசிய வரவுசெலவுத்திட்ட உரையில் இருந்து விலக்கிவிடப்பட்டுள்ளனர். இது என்று பெருந்தோட்ட தொழிலாளர்கள் தனியார் நிறுவனங்களுக்கு தாரைவார்க்கப்பட்டார்களோ அன்றில் இருந்தே தேசிய வரவுசெலவுத் திட்டத்தில் இருந்து பெருந்தோட்டத் தொழிலாளர்கள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கிடையில் மீன்பிடி மற்றும் பாரம்பரிய தொழில்களில் ஈடுபடுவோருக்கும் இந்த வரவுசெலவுத் திட்டத்தில் எதிர்ப்பார்த்த நன்மைகள் கிடைக்கவில்லை என்றே கூறப்படுகிறது. மொத்தத்தில் 2013 ஆம் வருடத்துக்கான வரவுசெலவுத்திட்டம் என்று ஒன்று சமர்ப்பிக்கப்பட்டு விட்டது என்பது மாத்திரம் உண்மை.

வாரமலர்
தினமுரசு
த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

# பார்வையாளர்களாகவே!

தீபத் திருநாளைக் கொண்டாடி மகிழ்ந்த அனைவருக்கும் இதயம் நிறைந்த வாழ்த்துக்கள்.

2013ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம், வழமையான சம்பிரதாயங்களுடன் விவாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. நிச்சயமாக அல்லது வாஸ்த்துப்பிரகாரம் சுமூகமாக நிறைவேறும் அல்லது நிறைவேற்றப்படும்.

இலங்கையர்களிடம் அதிகம் விவாதத்துக்குரிய விடயமாக இருக்கப்படப்போவது 19ஆவது திருத்தம் கொண்டுவரப்போவதாகவும், அதற்கு கட்சிகளின் ஆதரவைத் திரட்டும் முயற்சிகளும் திரைக்குப் பின்னாலும், முன்னாலும் தீவிரப் படுத்தப்பட்டிருக்கின்றது.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பயனாகக் கிடைத்த "வடக்கு கிழக்கு இணைந்த மாகாணம்" என்ற வரம் சிதைக்கப்பட்டதற்கு முதன்மைக் காரண கர்த்தாக்களாக இருந்தவர்களே இப்போது 13ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாமல் செய்து, மாகாண சபை முறைமையை ஒழித்துக்கட்டுவதை நோக்கமாக கொண்டு முயற்சிகளை செய்து கொண்டிருக்கின்றார்கள்.

இந்த முயற்சி தனியே இவர்களுடையது அல்ல, அதன் இயக்குநர்கள் வட்டம் மிகப் பலமானதாகவும், பலரை உள்ளடக்கியதாகவும் இருப்பதையும் உணர்ந்து கொள்ளமுடிகின்றது.

13ஆவது திருத்தச் சட்டத்தை அரசியல் அமைப்பிலிருந்து நீக்குவதற்கு தற்போது அரசில் இருக்கும் முக்கியமான அமைச்சர்களே இணாங்காத நிலைமை உள்ளது. இன்றைய வாய்ப்புகளுக்காக அல்லாமல் இலங்கையின் எதிர்கால ஐக்கியத்தையும், நலனையும் மனதில் கொண்டு தற்போதைய தீர்மானங்களாக இருக்கவேண்டுமென்று சிந்திக்கின்ற முற்போக்கு சக்திகளாக அவர்கள் இருக்கின்றனர்.

தற்போதைய இலங்கையின் அரசியல் சூழலில் முற்போக்குச் சக்திகளின் குரல்களும், உறுதியும் தாக்குப்பிடிக்க முடியாத நிலைமையே உள்ளது. எனவே மாகாணசபை முறைமையை மாற்றி, நாட்டுக்கு உகந்த சட்ட திருத்தம் ஒன்றைக் கொண்டுவருவதாக மக்களிடம் பரப்புரை செய்யப்படும்.

13ஆவது திருத்தத்தைப் பாதுகாப்பதற்காக கொடுக்கப்படுகின்ற குரல்களின் வலிமையை விடவும், 13ஆவது திருத்தத்தை ஒழித்துக்கட்டி 19ஆவது திருத்தச் சட்டத்தை கொண்டுவர வேண்டுமென்று கொடுக்கப்படுகின்ற குரல்கள் பலம் பொருந்தியதாக இருப்பதையும் மறுக்கமுடியாது.

வரவு செலவுத்திட்ட சடங்குகள் முடிந்த பின்னர், சட்டதிருத்தம் தொடர்பான வாதங்களும், பிரதிவாதங்களுமாக அரசியல் அரங்கு சலசலக்கும்.

தென் இலங்கையின் இந்த நாடகங்களில் மாற்றத்தையோ, சேர்க்கையையோ செய்ய திராணியற்று தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்பவர்கள், பார்வையாளர்களாக இருக்கப் போகின்றார்கள்.

சுய நினைவு திரும்புகின்ற சமயங்களில் மட்டும் ஒரு அறிக்கையை விடுவார்கள். நம்மையும் மீறியபடி எல்லாமும் நடந்து முடியவே செய்யும்.

வலிமையற்றவர்கள் அல்லது தெளிவான தீர்மானத்தை எடுக்கத் தெரியாதவர்கள் பார்வையாளர்களாக இருப்பதைத் தவிர வேறு எதைச் சாதித்துவிட முடியும். ஒரு வேளை சர்வதேசத்தின் துணையோடு உரிமையைப் பெறுவோம் என்று வீரம் பேசுமோ?

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

---

**இருபத்தைந்து வருட காலம் மாகாண சபையை நிராகரித்ததன் மூலமும் தனிநாட்டு நிகழ்ச்சி நிரலை ஏற்றுச் செயற்பட்டதன் மூலமும் பதின்மூன்றாவது திருத்தத்தை அரசாங்கம் நிராகரிப்பதற்குச் சாதகமான சூழ்நிலையைத் தமிழ் தலைவர்கள் ஏற்படுத்தியதை ஒரு கணம் மறந்துவிட்டுப் பார்ப்போம். பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்குவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது என்பது தெரிந்த பின்னராவது, அதைத் தடுப்பதற்கான எந்தெந்த முயற்சியிலாவது கூட்டமைப்பு ஈடுபட்டதா? ஒரு முயற்சியிலும் ஈடுபடவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சியில் அமர்த்தும் இலக்குடன் செயற்படுகின்ற மனோ கணேசன், சிறிதுங்க ஜயசூரிய, விக்கிரமபாகு கருணாரட்ண ஆகியோருடன் சேர்ந்து ஊடகவியலாளர் மாநாடொன்றைக் கூட்டி அரச எதிர்ப்புப் பிரசாரம் செய்தார்கள். இது பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்கும் ஆலோசனையை முன்வைத்து அரசியல் இலாபம் தேடுவதற்கான முயற்சியே ஒழியத் திருத்தத்தை நீக்கும் முயற்சியைத் தடுப்பதற்கான செயற்பாடல்ல.**



# மாகாண சபைகளில் மாற்றம் வருமோ ஏமாற்றம்?

**தமிழ்** அரசியல் இன்று முக்கியமான ஒரு கட்டத்தை அடைந்திருக்கின்றது. சுருக்கமாகக் கூறுவதானால் தமிழ் மக்களின் அரசியலுக்கு இதுவரை ஏற்பட்டிருக்காத சோதனை இப்போது ஏற்பட்டிருக்கின்றது. கடந்த காலங்களில் தமிழ் மக்கள் பல நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கின்றார்கள். ஆனால் அறுபத்தைந்து வருட அரசியல் வரலாற்றில் அவர்கள் பெற்ற ஒரேயொரு வெற்றியும் கைதவறிப் போகும் துர்ப்பாக்கிய நிலை இப்போது ஏற்பட்டிருக்கின்றது.

பதின்மூன்றாவது திருத்தம் ஒரு சாதனையா அல்லது வெற்றியா என்று விமர்சகர்கள் விவாதிக்கலாம். எவ்வாறாயினும் அறுபத்தைந்து வருட அரசியலில் அதுதான் தமிழ்மக்களுக்குக் கிடைத்த ஒரேயொரு நன்மை. தங்களுடைய முயற்சியினால்தான் இந்த நன்மை கிடைத்தது என்று தமிழ்த் தலைவர்கள் இன்று உரிமை கோரலாம். இந்தத் தலைவர்களின் செயற்பாடுகள் தான் பதின்மூன்றாவது திருத்தம் கை நழுவிப் போகும் நிலையை இப்போது ஏற்படுத்தியிருக்கின்றது என்ற உண்மையை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும்.

மாகாண சபையை நீக்க வேண்டும் என்று இன்று கூறுகின்றவர்கள் எல்லோரும் ஒரே-யொரு குற்றச்சாட்டையே முன்வைக்கின்றார்கள். மாகாணசபை பிரிவினைக்கு இட்டுச் செல்லும் என்பதே அக்குற்றச்சாட்டு. இந்தக் குற்றச்சாட்டில் சிறிதளவும் உண்மை இல்லை. ஆனால் பெரும் பாலான சிங்கள மக்கள் இக் குற்றச்சாட்டை நம்பும் வகையில் தமிழ்த் தலைவர்கள் செயற்பட்டிருக்கின்றார்கள். இருபத்தைந்து வருட காலமாக மாகாண சபையை நிராகரித்ததன் மூலமும் புலிகளுடன் கூட்டுச்சேர்ந்து தனிநாட்டு நிகழ்ச்சி நிரலின் கீழ் செயற்பட்டதன் மூலமும் இந்த நிலைமையை இத்தலைவர்கள் ஏற்படுத்தியிருக்கின்றார்கள். சுருக்கமாகக் கூறுவதானால் பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்க வேண்டும் என்ற பேரினவாதிகளின் நோக்கம் நிறைவேறுவதற்கு ஒத்துழைப்பு வழங்கியிருக்கின்றார்கள்.

மாகாண சபை முறை தமிழ் மக்களுக்குப் பாதகமானதல்ல என்பதைக் கூட்டமைப்புத் தலைவர்களே இப்போது ஏற்றுக் கொள்கின்றார்கள். மாகாண சபையின் மூலம் மாகாணங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அதி-காரப் பகிர்வு கிடைத்திருக்கின்றது என்றும், மாகாண சபை முறை தமிழ் மக்களுக்குச் சிறிதளவாவது நன்மையைத் தருகின்றது என்றும் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இப்போது கூறுகின்றார்கள். இதே கருத்து இன்னும் கொஞ்சம் கூடுதலான அளவில் சிங்கள மக்கள் மத்தியில் நிலவியது. மாகாண சபை தமிழ் மக்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட சுயாட்சி அதிகாரத்தை வழங்குகின்றது என்று அவர்கள் கருதினார்கள். அதற்கு எதிராகச் சிங்கள மக்கள் கிளர்ச்சி செய்யவில்லை. மாகாண சபையை எதிர்த்த அரசியல் கட்சிகளும் காலப்போக்கில் அதை ஏற்றச் செயற்பட முன்வந்தன.

இந்த நிலைமையைத் தமிழ் தலைவர்கள் சரியாகக் கையாளவில்லை. இவர்கள் மாகாண சபையை ஏற்றுச் செயற்பட்டிருந்தால் சிங்கள மக்களின் நல்லெண்ணத்தையும் பெற்று மேலும் கூடுதலான அதிகாரங்களைப் படிப்படியாக அடைந்திருக்கலாம். ஆனால் இத் தலைவர்கள் இருபத்தைந்து வருடகாலமாக மாகாண சபையை முற்றுமுழுதாக நிராகரித்தார்கள். இது சிங்கள மக்கள் மத்தியில் சந்தேகத்தைத் தோற்றுவித்தது. ஓரளவு சுயாட்சி அதிகாரம் வழங்கியும், தமிழ் தலைவர்கள் அதை நிராகரிக்கின்றார்கள் என்றால் அவர்கள் தனிநாட்டை நோக்கிச் செல்கின்றார்களா என்ற சந்தேகம் சிங்கள மக்களிடம் தோன்றியது. மாகாண சபையை நிராகரித்ததோடு நிற்காமல் புலிகளுடன் இணைந்து தனிநாட்டு நிகழ்ச்சி நிரலின் கீழ் செயற்பட்டபோது இச்சந்தேகம் மேலும் வலுவடைந்தது. இனப் பிரச்சினையின் தீர்வுக்கான பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்குபற்ற மறுத்து வருவதன் மூலம் சிங்கள மக்களின் சந்தேகத் தைக் கூட்டமைப்புத் தலைவர்கள் உறுதிப் படுத்துகின்றார்கள். பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்க விரும்புபவர்களுக்கு இது வாய்ப் பாகிவிட்டது. இவர்கள் சிங்கள மக்களின் சந்தேகத்தை ஊதிப் பெருப்பித்துப் பதின்மூன்றாவது திருத்தம் பிரிவினைக்கு வழி வகுக்கும் என்ற பிரசாரத்தை முன்னெடுக்கின்றார்கள்.

அரசாங்கம் பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்குவதென முடிவுசெய்தால் நாங்கள் எதுவும் செய்ய முடியாது என்று கையை விரிக்கின்றார் சுரேஷ் பிரேமச்சந்திரன். பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்கும் சூழ்நிலையைக் கொஞ்சங்கொஞ்சமாக ஏற்படுத்தி விட்டுக் கடைசி நேரத்தில் எங்களால் எதுவும் இயலாது என்று கூறும் தலைவர்களை என்னவென்று சொல்வது?

பத்தொன்பதாவது திருத்தத்தைக் கொண்டு வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்ற நிலையில் பதின்மூன்றாவது திருத்தம் இருக்குமா, இல்லையா என்று கேள்வி எழுப்புகின்றார் சுமந்திரன். இப்படிக் கேள்வி எழுப்புவது தமிழ் மக்களைப் பேய்க்காட்டுவதற்கான முயற்சி. பதின்மூன்றாவது திருத்தத்தைப் பாதுகாப்பதற்கான அக்கறை தங்களுக்கு உண்டு என்று தமிழ் மக்களை நம்ப வைப்பதற்காகவே இப்படியான கேள்விகளை எழுப்புகின்றார்கள்.

இருபத்தைந்து வருட காலம் மாகாண சபையை நிராகரித்ததன் மூலமும் தனிநாட்டு நிகழ்ச்சி நிரலை ஏற்றுச் செயற்பட்டதன் மூலமும் பதின்மூன்றாவது திருத்தத்தை அரசாங்கம் நிராகரிப்பதற்குச் சாதகமான சூழ்நிலையைத் தமிழ்தலைவர்கள் ஏற்படுத்தியதை ஒரு கணம் மறந்து விட்டுப்பார்ப்போம்.

பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்குவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது என்பது தெரிந்த பின்னராவது, அதைத் தடுப்பதற்கான எந்தெந்த முயற்சியிலாவது கூட்டமைப்பு ஈடுபட்டதா? ஒரு முயற்சியிலும் ஈடுபடவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சியில் அமர்த்தும் இலக்குடன் செயற்படுகின்ற மனோ கணேசன், சிறிதுங்க ஜயசூரிய, விக்கிரமபாகு கருணாரட்ண ஆகி-யோருடன் சேர்ந்து ஊடகவியலாளர் மாநாடொன்றைக் கூட்டி அரச எதிர்ப்புப் பிரசாரம் செய்தார்கள். இது பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்கும் ஆலோசனையை முன்வைத்து அரசியல் இலாபம் தேடுவதற்கான முயற்சியேயொழியத் திருத்தத்தை நீக்கும் முயற்சியைத் தடுப்பதற்கான செயற்பாடல்ல.

இந்த முயற்சியில்கூட கூட்டமைப்பின் சகபாடிகள் இவர்களைக் கைவிட்டுவிட்டார்கள். எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பு என்ற பெயரில் ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பொன்றை உருவாக்கியிருக்கின்றது. இந்த அமைப்பில் மனோகணேசன், சிறிதுங்க ஜயசூரிய, விக்கிரமபாகு கருணாரட்ன ஆகியோரின் கட்சிகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் உட்பட ஒன்பது கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. ஆனால், பதின்மூன்றாவது திருத்தம் தொடர்பாக இவர்கள் கூட்டிய ஊடகவியலாளர் மாநாட்டில் ஐக்கிய தேசியக் கட்சி உட்பட இந்த அமைப்பின் ஐந்து கட்சிகள் பங்குபற்றவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அங்கம்வகிக்கும் ஒன்பது கட்சிக் கூட்டில் பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்கும் விடயம் தொடர்பாக ஒருமித்த கருத்து இல்லை என்பதே இதன் அர்த்தம்.

தமிழ் மக்களுக்கு இதுவரையில் எந்த நன்மையையும் தமிழர் விடுதலைக் கூட்டணியோ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ பெற்றுக் கொடுக்கவில்லை. எந்த நன்மையையும் பெற்றுக் கொடுக்காவிட்டாலும், இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் தமிழ் மக்களுக்குக் கிடைத்த நன்மையைப் பாதுகாத்துக் கொடுப்பதற்கும் இந்தத் தலைமையினால் இயலா தென்றால் வேறு எதற்காக இவர்களின் தலைமை?

பதின்மூன்றாவது திருத்தத்தைப் பறிக்கின்றார்கள் என்று அரச எதிர்ப்புப் பிரசாரம் செய்வதன்மூலம் தலைவர்கள் தங்கள் பதவிகளைக் காப்பாற்றிக் கொள்ளலாமேயொழிய மக்களுக்கு அதனால் எந்த நன்மையும் இல்லை. எங்களால் எதுவும் முடியாது என்று தோற்றுப் போன தலைவர்களைப் போலக் கையை விரிப்பதைவிட்டு, கடைசித் தருணத்திலாவது மக்களின் நன்மைக்காகச் செயற்பட முன்வர வேண்டும்.

உத்தேச பத்தொன்பதாவது திருத்தம் பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு வரவிருக்கின்றது. தெரிவுக்குழுவில் பங்குபற்றிப் பதின்மூன்றாவது திருத்தத்தின் மூலம் தமிழ் மக்களுக்குக் கிடைத்த நன்மைகளைப் பாதுகாப்பதற்குக் கூட்டமைப்புத் தலைமை முயற்சிக்க வேண்டும். இந்தக் கடைசிச் சந்தர்ப்பத்தையும் நிராகரிப்பார்களேயானால், தமிழ் மக்களின் நலனில் இவர்களுக்குச் சிறிதளவேனும் அக்கறை இல்லை என்பது உறுதியாகி விடும்.

எது எப்படி இருப்பினும் அரசியல் அரங்கில் பேசப் படுவது போன்று 13 ஆவது திருத்தச்சட்டம் இல்லாதொழிக்கப்பட்டு மாகாணசபை முறைமை நீக்கப்படுமாயின் அதற்காக அர்ப்பணிப்புக்களைச் செய்த மக்களுக்கு ஏமாற்றமாகவே அமை யும் என்பதை உரியவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

எக்ஸ்ரே ரிப்போர்ட்



# புலிகளின் வீழ்ச்சி!

ரிஷி

17

## இறுதி நாட்கள்...

# புலிகளுக்குள் 'றோ' புகுந்த கதை

அந்த விபரங்களை சொல்வதற்கு, இந்த இடத்தை விட்டால், வேறு இடம் கிடைக்காது. எனவே தொடரில் இருந்து சற்று விலகி, சில விடயங்களை சொல்லிவிடலாம். இந்த விபரங்கள், உங்களுக்கு புதியவையாக இருக்கலாம். புலிகளின் கப்பல்கள் அடுத்தடுத்து அடி வாங்கியது குறித்து உங்களுக்கு இதுவரை இருந்துவந்த சில கேள்விகளுக்கு பதிலையும் கொடுக்கலாம்.

இது நடைபெற்ற காலப்பகுதியில் (90களின் துவக்கத்தில்) விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் கம்யூனிகேஷன் பொறுப்பாளராக இருந்தவரின் பெயர் குட்டி. பிரபாகரனுக்கு வரும் தகவல்களும், பிரபாகரன் வெளியே அனுப்பும் தகவல்களும் குட்டி மூலமாகவே போய் வந்துகொண்டு இருந்தன.

புலிகள் இயக்கத்தில் பல கம்யூனிகேஷன் பொறுப்பாளர்கள் இருந்தார்கள். அவர்கள் வெவ்வேறு தளபதிகளுடன் இணைக்கப்பட்டோ, வெவ்வேறு பிரிவுகளுடன் இணைக்கப்பட்டோ இருந்தார்கள். அப்படி இருந்த மற்றொரு கம்யூனிகேஷன் பொறுப்பாளரின் பெயர் கிருபன்.

யாழ்ப்பாணத்தில் புலிகளின் கம்யூனிகேஷன் பொறுப்பாளராக இருந்த இந்த கிருபன், ராஜிவ்காந்தி கொல்லப்பட்ட காலத்துக்குமுன், இந்திய அமைதிப்படை இலங்கையில் யுத்தம் புரிந்தபோது இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இந்த இடத்தில் மற்றொரு விடயம். கிருபனை, பிரபாகரனே நேரடியாக இந்தியாவுக்கு அனுப்பி வைத்தார். கிட்டு அப்போது சென்னையில் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்தார். 'ஏதோ காரணங்களுக்காக' கிருபன் தமிழகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட விடயம், சென்னையில் இருந்த கிட்டுவுக்கு தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை.

தமிழகம் வந்த கிருபன் சென்னைக்கு செல்லவில்லை. மதுரையை தளமாகக் கொண்டு இயங்கினார். மதுரை மற்றும் அதன் தெற்கே வேதாரண்யம் வரை அவரது செயற்பாடு இருந்தது.

நாளடைவில், கிருபன் மதுரையில் இருந்து இயங்கும் விடயம் கிட்டுவுக்கு தெரியவந்தபோது, கிட்டுவுடன் கிருபன் முறைத்துக் கொண்டதாக தெரிகிறது. மதுரையில் தாம் தங்கியிருந்து செயற்படுவது, கிட்டுவின் அதிகாரத்தின் கீழ் அல்ல என்பது கிருபனின் நிலைப்பாடு. ஆனால், அந்த



நேரத்தில் தமிழகத்தில் (வீட்டுக்காவலில்) இருந்து இயங்கிய கிட்டு, கிருபனைவிட சீனியர். சுருக்கமாகச் சொன்னால் இருவருக்கும் இடையே முறுகல்நிலை இருந்தது.

இந்திய அமைதிப்படை இலங்கையில் இருந்த நேரத்திலேயே, கிட்டு யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டார். கிருபன் அதன்பின்னரும் மதுரையில் தங்கியிருந்தார். பின், சென்னைக்கு சென்று இயங்கத் துவங்கினார். அப்போதும், வேதாரண்ய செயற்பாடுகளை அவர் கவனித்துக் கொண்டார். அங்கிருந்துதான் புலிகளின் பெரும்பாலான படகுகள் இலங்கைக்கு சென்றன.

ராஜிவ்காந்தி கொல்லப்பட்டபின், சி.பி.ஐ. சிறப்பு புலனாய்வுக்குழு நடத்திய சுற்றிவளைப்புக்கள் ஒன்றில் கிருபன் சிக்கிக் கொண்டார். அதையடுத்து, அப்போது தமிழகத்தில் சிக்கிக் கொண்ட மற்றைய புலிகள் உறுப்பினர்களுடன் ஒருவராக இவரும் பூந்தமல்லி சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். பூந்தமல்லியில் தனி செக்ஷன் ஒன்றில் புலிகள் வைக்கப்பட்டிருந்தார்கள்.

திடீரென, தமிழகப் பத்திரிகையில் பூந்தமல்லி சிறையில் இருந்து புலி ஒருவர் தப்பிய செய்தி வெளியானது. அப்படி தப்பியவர் இந்த கிருபன்தான். சிறையில் இருந்து நீதிமன்றத்துக்கு அழைத்துச் சென்றபோது அவர் தப்பிவிட்டார் என்பதே பத்திரிகைச் செய்தி. அவரை தமிழகப் பொலிஸ் 'வலை விரித்து' தேடுவதாகவும் பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகின.

தமிழக காவல்துறையின் வலையில் கிருபன் சிக்கவில்லை. யாருடைய கைகளிலும் சிக்காத கிருபன் வேதாரண்யம் சென்று, அங்கிருந்து படகுமூலம் இலங்கை சென்றுவிட்டார்.

பூந்தமல்லி சிறையில் இருந்து கிருபன் தப்பிய சாகசம் பற்றி சிறிது காலம் புலிகள் இயக்கத்துக்குள் சிலாகித்துப் பேசப்பட்டது. இந்த 'தகுதி', அவரை புலிகளின் தலைவர் பிரபாகரனின் நெருங்கிய வட்டத்துக்குள் வரை கொண்டுபோய் சேர்த்தது. இயல்பில் வயர்லெஸ் ஒப்ரேட்டராக இருந்த கிருபன். பிரபாகரனின் பிரத்தியேக வயர்லெஸ் ஒப்பரேட்டர் குட்டிக்கு உதவியாக நியமிக்கப்பட்டார்.

வயர்லெஸ் ஒப்பரேஷனில் ஒரே நபர், 24 மணிநேரமும் பணியில் இருப்பது சாத்தியமில்லை. இதனால், குட்டி பணியில் இல்லாத நேரங்களில் கிருபனும் பிரபாகரனுக்கு வரும் தகவல்களை ரிசீவ் பண்ணுவதுண்டு. பிரபாகரன் கொடுக்கும் தகவல்களை அனுப்பி வைப்பதுமுண்டு.

இதுவரை சரி. இப்போது ஒரு ட்விஸ்ட்.

**கிருபன் பூந்தமல்லி சிறையில் இருந்து எப்படி தப்பினார்?**

அந்த நாட்களில் சென்னை பத்திரிகைகளில் பணிபுரிந்த இரு செய்தியாளர்கள் பின்னர் கூறிய தகவலின்படி, கிருபன் தப்பிய செய்திக்கு மீடியா கவரேஜ் கிடைக்கும்படி பார்த்துக் கொண்டவர், யார் தெரியுமா? அப்போது உளவுத்துறை றோவின் சென்னை அலுவலகத்தில் பணிபுரிந்த அதிகாரி ஒருவர்தான்!

இது ஒரு சாதாரண 'கைதி எஸ்கேப்' என்ற அளவில்தான் மாலைப் பத்திரிகைகளில் செய்தி வெளியானது. குறிப்பிட்ட றோ அதிகாரி, தமது மீடியா தொடர்புகள் மூலம், இந்த செய்திக்கு மறுநாள் காலை பத்திரிகைகளில் முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் சில ஏற்பாடுகளை செய்தார்.

அந்த வாரம் வெளியான வார சஞ்சிகை ஒன்றிலும், கிருபனின் எஸ்கேப் ஸ்டோரி இடம்பெற்றது. அதை எழுதிய பத்திரிகையாளர் தற்போதும் மீடியாவில் உள்ளார். சஞ்சிகை வெளியிட்ட எஸ்கேப் ஸ்டோரிக்கு தகவல் சப்ளை செய்ததும், நாம் குறிப்பிட்ட றோ அதிகாரிதான். (2000களில் ரிட்டயரான அந்த றோ அதிகாரி, ஓய்வு பெற்றபின் சொந்த மாநிலம் சென்றபின், தற்போது வெளிநாடு ஒன்றில் வசிக்கிறார்)

**கிருபன் தப்பிய, கதை விலாவாரியாக இந்திய ஊடகங்களில் வரவேண்டும் என்று றோ அதிகாரி ஏன் விரும்பினார்?**

இந்திய மீடியா செய்திகளை க்ளோஸாக ஃபாலோ செய்யும் புலிகளுக்கு அந்த செய்தி தெரிய வரவேண்டும் என்பதற்காகவா? கிருபன் தப்பியது உண்மைதான் என்று புலிகளை நம்ப வைக்க வேண்டும் என்பதற்காகவா? அது ஒரு சாகசச் செயல் என்று புலிகளுக்குக் காட்டி, புலிகள் இயக்கத்துக்குள் கிருபனுக்கு செல்வாக்கு ஏற்படுத்திக் கொடுக்கும் முயற்சியா?

மேலேயுள்ள கேள்விகளுக்கான பதில், 'ஆம்' என்பதாக இருந்தால், பூந்தமல்லி சிறையில் இருந்து கிருபனின் எஸ்கேப், ஒரு செட்டப் நாடகம் என்றாகிறது. றோ அவரை தப்ப வைத்து, தமிழக பொலிஸிடம் சிக்காமல் வேதாரண்யத்தில் இருந்து அனுப்பி வைத்தது என்றும் ஊகிக்க வைக்கிறது.

அந்த ஊகம் சரியாக இருந்தால், கிருபன், புலிகள் இயக்கத்துக்குள் ஊடுருவ விடப்பட்ட றோவின் ஸ்பை என்று அர்த்தமாகிறது.

அப்படியான ஒரு நபர், பிரபாகரனின் வயர்லெஸ் தொடர்புகளை கையாண்டால் என்னாகும்? தாய்லாந்தில் இருந்து கிட்டு இலங்கைக்கு கப்பல் ஒன்றில் செல்லும் விபரம், இந்திய உளவுத் துறைக்கு முன்கூட்டியே தெரிந்திருக்க சான்ஸ் உள்ளது அல்லவா?

புலிகளின் கப்பல்கள் பற்றிய இரகசியங்கள் உளவுத்துறைகளுக்கு போவது பற்றி இதுவரை வந்துவிட்டோம். வந்ததுதான் வந்தோம் மற்றொரு விஷயத்தையும் தொட்டுவிட்டு போகலாம். இது கொஞ்சம் சென்சிட்டிவ் மேட்டர்.

(தொடரும்...)



# பரிதியின் கொலையும் பின்னணியும்



புலிகளின் தளபதி என அறியப்பட்ட பரிதி சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

பாரிசில் நடைபெற்ற சம்பவம் இது. சம்பவ தினத்தன்று தமிழர் ஒருங்கிணைப்புக் குழு அலுவலகத்தைவிட்டு பரிதி வெளிவந்த போது, இரவு ஆகியிருந்தது. அவர் வருகையை எதிர்பார்த்து அந்தப் பகுதியில் ஸ்கூட்டர் ஒன்றில் இருவர் காத்திருந்தார்கள்.

பரிதி வெளியே வந்ததும், ஸ்கூட்டரில் இருந்தவர்கள் ஹெல்மெட் அணிந்து கொண்டார்கள். அவர்களது முகங்களை மூடும் வகையிலான ஹெல்மெட் அது. ஸ்கூட்டரை ஸ்டாட் செய்து பரிதி இருந்த இடத்தை நோக்கி சென்றார்கள். துப்பாக்கியால் ஒரு தடவை சுட்டார்கள். அது பரிதியில் படவில்லை.

இதையடுத்து தனது உயிரைக் காப்பாற்ற வீதியில் ஓடத் தொடங்கினார் பரிதி. ஆனால், தப்பியோடும் அவரது முயற்சி பலிக்கவில்லை. ஓட ஓட மொத்தம் 4 தடவைகள் சுடப்பட்டு, கீழே விழுந்து, அந்த இடத்தில் உயிரை விட்டார். அவரைச் சுட்டவர்கள், ஸ்கூட்டரில் அங்கிருந்து வேகமாக சென்று மறைந்தனர்.

வெளிநாடுகளில் புலிகள் இயக்கம், நான்கு பிரிவுகளாக செயல்படுகிறது. இதில் இரு பிரிவுகள் பெரியவை, மற்றும் பலம் வாய்ந்தவை. அவற்றில் ஒன்று நோர்வேயில் உள்ள நெடியவன் தலைமையிலான பிரிவு. கொல்லப்பட்ட தளபதி பரிதி, அந்தப் பிரிவைச் சேர்ந்தவர்.

நெடியவன் அணி, புலிகளின் வெளிநாட்டு சொத்துக்களை வைத்திருக்கும் அணி. ஒருகாலத்தில் புலிகளின் ஊடகங்கள் என அறியப்பட்டவையும், இவர்களிடம்தான் உள்ளது. அதுதான், அவர்களது பலம்.

அந்த அணியின் அளவுக்கு தற்போது வளர்ந்துவிட்ட மற்றைய அணி, விநாயகம் தலைமையிலான அணி. இதன் தலைவர் விநாயகம், புலிகளின் உளவுப் பிரிவில் தளபதியாக இருந்தவர். தற்போது, பிரான்சிலும், ஜெர்மனியிலும் மாறிமாறி இருந்து வருகிறார். இந்த அணிக்கு, களத்தில் யுத்தம் புரிந்துவிட்டு, தற்போது வெளிநாடுகளில் வசிக்கும் போராளிகளின் ஆதரவு உண்டு. வெளிநாடுகளில் உள்ள கணிசமான புலி ஆதரவாளர்களும் தற்போது இவர்கள் பக்கம் சாயத் தொடங்கியுள்ளனர்.

விநாயகம் அணியின் பலம், களத்தில் யுத்தம் புரிந்தவர்கள், வெளிநாடுகளில் பண முறைகேடுகள் எதிலும் இதுவரை பெரிதாக சிக்காதவர்கள், பழைய செயற்பாட்டாளர்கள் (நெடியவன் அணி) செய்த பண முறைகேடுகளை தட்டிக் கேட்பவர்கள் என்ற பெயர்.

இந்த அணியின் பலவீனம், ஊடகப்பலம் கிடையாது. புலி ஆதரவாளர்களை வாசகர்களாக கொண்டுள்ள பெரும்பாலான ஊடகங்கள் நெடியவன் குழுவின் கட்டுப்பாட்டில் இருப்பதால், விநாயகம் குரூப்பின் நடவடிக்கைகள் ஊடகங்களில் துரோகச் செயல் என வெளியாகும்.

அத்துடன், தமிழக அரசியல்வாதிகளுக்கான மாதாந்த பண வழங்கல்களை கொடுப்பது, சொத்துக்களை வைத்திருக்கும் நெடியவன் குரூப் என்பதால், விநாயகம் குரூப்புக்கு அந்த விளம்பரமும் இல்லை.

சமீபத்தில், இளையராஜாவின் கனடா இசை நிகழ்ச்சிக்கு எதிர்ப்பு தெரிவித்த ஆட்கள், நெடியவன் குரூப். அந்த எதிர்ப்புக்கு ஊடகங்களில் கிடைத்த அதீத முக்கியத்துவத்தை நீங்கள் கவனித்திருக்கலாம். அதுதான், நெடியவன் குரூப்பின் பலம்.

(22 ஆம் பக்கம் பார்க்க...)




ஆகவே, தன்மூலமாக நிகழ்த்தப்படும் எதற்கும் தான் உரிமைகொள்ளவோ, பெருமைப்படுவதற்கோ ஏதுமில்லை என்று மிகத் தெளிவாகச் சொல்லிவிட்டார் அவர். ஆன்மிகத்தின் மிகக் கனிந்தநிலை என்பது இதுதான். இந்த ஒரு நிலைக்காகத்தான் எத்தனையோ முனிவர்களும் யோகிகளும் பல்லாண்டு காலம் கடுந்தவம் புரிந்திருக்கிறார்கள். 'தான்' என்கிற ஒரு விஷயத்தை முற்றிலுமாகக் களையமுடியும் போதுதான் ஆன்மிகம் வசப்படும் என்பார்கள்.

முகம்மது ஒரு பழுத்த ஆன்மிகவாதி.

அது ஒருபுறமிருக்க, இந்த முகம்மதுவை என்ன செய்து தடுத்து நிறுத்தலாம் என்று குறைஷிகள் கூடி ஆலோசிக்கத் தொடங்கியதைப் பார்க்கலாம். அவருக்கு எதிராகச் சாத்தியமுள்ள அத்தனை பிரசாரங்களையும் முடுக்கிவிடுவது; புனித யாத்திரைக் காலத்தில் பிரச்சினையில்லாமல் தமது வர்த்தக உறவுகளைப் பலப்படுத்திக்கொள்வது என்கிற ஒரு திட்டம் அவர்களுக்குப் போதுமானதாக இல்லை.

ஆகவே, சற்றே மாறுபட்ட விதத்தில் முகம்மதுவை இன்னொருவிதமாகவும் பரீட்சித்து, அவர் ஒரு பொய்யர்தான் என்பதை நிருபிப்பது என்று முடிவு செய்தார்கள்.

இங்கேதான் அவர்களுக்கு யூதர்களின் நினைவு வந்தது. படித்த யூதர்கள். பண்டிதர்களான யூதர்கள். அறிவில் சிறந்த யூதர்கள். யூத ரபிக்கள் யூத மதக் குருக்களாக விளங்கும் இவர்கள், யூத மதச் சட்டங்களிலும் விற்பன்னர்கள். தனியொரு சமஸ்தானம், தனியொரு நீதிமன்றம் என்று யூதர்களிடையே இந்த ரபிகளின் செல்வாக்கு மிகப் பெரியது. மன்னர் அளிக்கும் தீர்ப்புகளை மாற்றி வழங்குமளவுக்கே செல்வாக்குப் பெற்ற ரபிக்கள் இருந்திருக்கிறார்கள்."

இத்தனைக்கும் யூதமதம் தோன்றியபோதே உதித்தவர்கள் அல்ல அவர்கள். யூதர்களின் தேவதூதரான மோசஸ் மூலம் இறைவன் அளித்த வேதமான 'தோரா'வில் ரபிக்கள் பற்றிய குறிப்புக்கள் ஏதும் கிடையாது. பின்னாளில் 'தால்மூத்' என்ற யூதச் சட்டதிட்டங்களும் யூத நம்பிக்கைகளும் அடங்கிய பிரதி உருவாக்கப்பட்ட காலத்தில்தான் ரபிக்களுக்கான முக்கியத்துவம் கூடியது. Rabbincal Judaism என்றே குறிப்பிடும் அளவுக்கு 'தால்மூத்' காலத்தில் ரபிக்களின் செல்வாக்கு உச்சத்தை எட்டி இருந்தது.

அத்தகைய யூதமதகுருமார்களை அனுகி, தங்கள் பிரச்சினைக்கு ஒரு தீர்வு கேட்பது என்று முடிவு செய்தார்கள். மெக்கா நகரத்து குறைஷிகள், தமது தகுதிகள் பற்றிய தாழ்வு மனப்பான்மை அவர்களுக்கு மேலோங்கியிருந்ததனாலும், யூத மதம் உயர்வானது என்கிற எண்ணம் இருந்ததாலுமே இப்படியொரு முடிவுக்கு வந்தார்கள்.

இதற்காக யூதர்களின் தலைமையகமான இஸ்ரேலுக்கு ஓட முடியுமா? அப்படி ஓடினால் தான் அங்கே யூத குருமார்கள் இருப்பார்களா? எல்லோரும்தான் இடம்பெயர்ந்து மத்திய ஆசியா முழுவதும் பரவி வசித்துக் கொண்டிருக்கிறார்களே.

ஆனால் அன்றைக்கு மெக்காவில் யூதர்கள் அதிகம் இல்லை. யூத குருமார்கள் ஒருவர்கூட இல்லை. ஆகவே யத்ரீப் நகரில் வசித்துவந்த சில யூத ரபிக்களைச் சந்திக்க ஆள் அனுப்பினார்கள்.

பிரச்சினை இதுதான். முகம்மது ஓர் இறைதூதர்தானா? அவர் சொல்வதையெல்லாம் நம்பி, ஏற்பதற்கில்லை. மந்திரவாதியோ என்று சந்தேகப்படுகிறோம். என்ன செய்து அவரை பரீட்சித்தால் சரியாக இருக்கும்? ஆண்டாண்டு காலமாக இருந்துவரும் அரபுகளின் நம்பிக்கைகளை அவர் கேள்விக்குள்ளாக்குகிறார். அடிப்படையே தகர்ந்துவிடும் போலிருக்கிறது. அரபுகளின் வழிபாட்டு உருவங்களை அவர் மதிப்பதில்லை. உருவமற்ற ஒரே இறைவன் என்றொரு புதிய கருத்தை முன்வைத்து மக்களை ஈர்க்கிறார். அவர் உண்மையா, போலியா என்று எங்களுக்குத் தெரிந்தாக வேண்டும். இதற்கு யூத குருமார்கள்தான் ஒரு வழி சொல்லவேண்டும்.

மெக்கா நகரத்து வணிகர்களின் இந்தக் கோரிக்கை, யத்ரீப் நகரில் வசித்துவந்த யூத குருமார்களின் சபைக்குப் போய்ச் சேர்ந்தது. அவர்கள், முகம்மது குறித்து மெக்காவாசிகள் சொன்ன ஒவ்வொரு தகவலையும் கூர்மையாக கவனித்துக் கேட்டார்கள். தமக்குள் நீண்டநேரம் ஆலோசனை நடத்தினார்கள்.

இறுதியில், முகம்மதுவைப் பரிசோதிக்க மூன்று வினாக்களை அவரிடம் கேட்கச் சொல்லி அரபுகளிடம் சொல்லி அனுப்பினார்கள்.

"இதுதான் பரீட்சை. இவைதான் கேள்விகள். இதற்கு மேலான கேள்விகள் என்று எதுவுமில்லை. இந்த மூன்று கேள்விகளுக்கும் அந்த முகம்மது என்ன பதில் தருகிறார் என்றுகேட்டு வந்துசொல்லுங்கள். அவர் சொல்லும் பதில்கள் சரியானவையாக இருக்குமானால், சந்தேகத்துக்கு இடமில்லாமல் அவர் இறைதூதர்தான் என்று நீங்கள் நம்பலாம். பதில்கள் சரியில்லை என்றால், அவர் பித்தலாட்டக்காரர் தான் என்பதில் சந்தேகமில்லை" என்று சொன்னார்கள்.

யூத மதகுருமார்கள் எழுப்பிய அந்த மூன்று வினாக்களுக்கு சத்தியமாக எந்த அராபியருக்கும் விடை தெரிய நியாயமில்லை. முகம்மது ஓர் அராபியர். எழுதப் படிக்கத் தெரியாதவர். யாரிடமும் பாடம் கேட்டவரும் அல்லர். எனவே யூத குருமார்களுக்கு மட்டுமே விடை தெரிந்த அந்த வினாக்களுக்கு அவர் எப்படி பதில் சொல்கிறார் பார்க்கலாம் என்று புறப்பட்டார்கள் குறைஷிகள்.

1. ஆதி காலத்தில் தமது சமூகத்தினரை விட்டுத் தனியே பிரிந்துபோன இளைஞர்கள் யார்? அவர்களின் பின்னணி என்ன?

2. கிழக்கு, மேற்கு திசையெங்கும் பயணம்செய்து இரு எல்லைகளையும் தொட்ட பயணி யார்? அவரது சிறப்பு என்ன?

3. ஆன்மா என்பது என்ன?

யூத மதகுருமார்களின் இந்த மூன்று வினாக்களுக்கு முகம்மது என்ன பதில் சொன்னார் என்பது ஒருபுறம் இருக்கட்டும். இந்தக் கேள்விகளிலிருந்து உங்களுக்கு ஏதாவது புரிகிறதா? மேலோட்டமாகப் பார்த்தால் முதல் இரு வினாக்களும் வெறும் சொற்களால் இட்டு நிரப்பப்பட்டவை போலத் தெரிகிறதல்லவா? உள்ளார்த்தங்கள் ஏதுமின்றி, வெறுமனே வம்புக்கு கேட்கப்பட்டதுபோல?

உண்மையில் யூத மதகுருமார்களுக்கு வம்பு நோக்கம் ஏதுமில்லை. அர்த்தங்கள் பொருந்திய இந்த வினாக்களுக்கான விடைகளை அவர்கள் நிச்சயம் அறிவார்கள். சர்வநிச்சயமாக முகம்மதுவுக்கு விடைகள் தெரிந்திருக்காது என்று அவர்கள் நம்பியதுதான் இதில் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயம்.

ஏனெனில், முதல் இரு வினாக்களுமே சரித்திரம் தொடர்பானவை. முகம்மது நபியின் காலமான கி.பி ஏழாம் நூற்றாண்டுக்கு இது சரித்திர வினா என்றால், இக்கேள்விகளின் வயதை யூகித்துப் பார்க்கலாம். ஆதி காலத்தில் பாதி காலம் அது. அதற்கும் முன்னால் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு நடந்த சங்கதிகளை உள்ளடக்கிய வினாக்கள் அவை. அப்புறம், இருக்கவே இருக்கிறது ஆன்மா. இன்றைக்கு வரை அது என்ன என்கிற வினாவும், அதற்கான விடைதேடும் ஞானியரும் இருக்கவே செய்கிறார்கள்.

ஆகவே, எப்படியும் முகம்மது உண்மையான இறைதூதர் தானா என்பது இக்கேள்விகளை அவர் எப்படி எதிர்கொள்கிறார் என்பதிலிருந்து தெரிந்துவிடும் என்று குறைஷிகளுக்கு நம்பிக்கை சொல்லி அனுப்பி வைத்தார்கள், யூத ரபிக்கள்.

வினாக்களைப் பெற்றுக்கொண்ட குறைஷிகள் நேரே முகம்மதுவிடம் வந்து அவற்றை முன்வைத்து, பதில் சொல்லக் கோரினார்கள்.

முகம்மது, படித்தவரல்லர். அதுவும் சரித்திரம்? வாய்ப்பே இல்லை. அந்த ஆன்மா? ம்ஹூம். அவர் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மனிதர். சராசரி மனிதர். தமது உள்ளுணர்வின் அடிச்சுவட்டில் பயணம்செய்து, ஆன்மிகத்தின் சிகரங்களைக் கண்டடைந்தவர். முகம்மதுவின் ஆன்மிகம், தத்துவம் சார்ந்ததல்ல. தர்க்கங்களுக்கோ, குதர்க்கங்களுக்கோ அங்கே இடமில்லை. உள்ளார்ந்த பக்தியின் மிகக் கனிந்தநிலையில் லயித்து வாழ்ந்தவர். தாம், இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் ஒரு கருவி என்பதை அவர் மிகத் தெளிவாக உணர்ந்திருந்தார். தனக்கென்று எதுவும் சுயமாகத் தெரியாது என்பதை மட்டும் அவர் மிகத் தெளிவாகத் தெரிந்து வைத்திருந்ததுதான். மற்றவர்களுக்கும் அவருக்கும் உள்ள வித்தியாசம். ஜிப்ரீல் மூலம் இறைவன் தனக்களிக்கும் வேதவரிகளை அவர் தம் நண்பர்களுக்கு ஓதிக்காட்டி உணரச் செய்து கொண்டிருந்தார். தானம் படைக்கப்பட்டதன் நோக்கமே அதுதான் என்பதில் அவருக்கு ஒரு மழைத்துளி அளவு சந்தேகமும் இல்லை.

ஆகவே, தம்முன் வைக்கப்பட்ட வினாக்களுக்கு மறுநாள் விடை சொல்வதாகச் சொல்லி, வந்தவர்களை அனுப்பிவைத்தார்.

விபரீதம் இங்கேதான் வந்தது. அதெப்படி அவர் அத்தனை உத்தரவாதமாக, மறுநாள் விடைதருவதாகச் சொல்லிவிட முடியும். அவர் சொல்லிவிட்டாரே என்பதனாலேயே அன்றிரவு ஜிப்ரீல் வந்து கேள்வித்தாளுக்கு விடைகள் எழுதி வைத்துவிட்டுப் போய்விடுவாரா என்ன?

(தொடரும்...)

# உளவு இளவரசிக்கு சிலை



18-ம் நூற்றாண்டில் இந்தியாவின் மைசூர் பகுதியை மன்னர் திப்பு சுல்தான் ஆண்டு வந்தார். அவரின் நேரடி வாரிசான நூர் இனயத் கான் இரண்டாம் உலகப் போர் சமயத்தில் பிரிட்டனுக்காக பிரான்சில் இருந்து உளவு வேலைகளில் ஈடுபட்டு வந்தார். உளவு இளவரசி என்று அழைக்கப்பட்ட 30 வயதான நூர் இனயத் கான் ஜெர்மனியின் நாசிப்படையினரால் அப்போது பிடிக்கப்பட்டார். பின்னர் 1944-ம் ஆண்டு அவர் கொடுமைப்படுத்தப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார்.

உளவு இளவரசி நூரின் தியாகத்தை ஞாபகப்படுத்தும் விதமாக லண்டனில் உள்ள கோர்டன் ஸ்குயர் கார்டன் பகுதியில் அவருக்கு மார்பளவு சிலை திறக்கப்பட்டுள்ளது. அவரின் தைரியத்தையும் தியாகத்தையும் புகழ்ந்து, பாராட்டி ராணி எலிசபெத்தின் மகள் இளவரசி அன்னே இந்த சிலையை திறந்து வைத்தார்.

பிரிட்டனில் திறக்கப்பட்ட முதல் முஸ்லிம் சிலை இதுவாகும். மேலும் ஆசியாவின் முதல் பெண் சிலையும் இதுவே என்றும் கூறப்படுகிறது. 60 வருடங்களுக்கு பிறகு கொடுக்கப்பட்டிருக்கும் இந்த கௌரவம் பத்துமாதம் கொடுமைப்படுத்தப்பட்ட அவரின் தியாகத்திற்கு இணையானது அல்ல என்றும் கூறப்படுகிறது.

# நோபல் பரிசிற்கு சிபார்சு



பாகிஸ்தானில் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் பெண் கல்வி மற்றும் பெண்கள் உரிமைக்காக குரல் கொடுத்து வந்தவர் 15 வயது சிறுமி மலாலா.

பெண் கல்வி குறித்து தைரியமாக கருத்து தெரிவித்த அவரை மிங்கோரா நகரில் தலிபான் தீவிரவாதிகள் கண்மூடித்தனமாக துப்பாக்கியால் சுட்டனர். இதனால் தலையில் குண்டு பாய்ந்து உயிருக்கு போராடிய அவர், இங்கிலாந்தில் உள்ள பர்மிங்காம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு தற்போது ஓரளவு தேறி வருகிறார்.

இவர் மீதான தாக்குதலுக்கு உலகம் முழுவதிலும் இருந்து கண்டனக் குரல்கள் எழுந்துள்ளன. பெண்கள் உரிமையை நசுக்கும் தலிபான்களின் முயற்சியை எதிர்க்கும் சக்திவாய்ந்த அடையாளமாக மலாலா உருவெடுத்துள்ளார்.

இந்நிலையில், மலாலாவின் துணிச்சல்மிக்க நடவடிக்கையை பாராட்டி அவருக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்க வேண்டும் என்று இங்கிலாந்தைச் சேர்ந்த சமூக ஆர்வலர்கள் குரல் கொடுத்துள்ளனர்.

இதுதொடர்பாக ஏராளமானோர் பேரணியாகச் சென்று, பிரதமர் டேபிட் கேமருன் மற்றும் மூத்த அதிகாரிகளை சந்தித்து, மலாலாவுக்கு நோபல் பரிசு வழங்க பரிந்துரை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினர். இதற்காக சுமார் 30,000 பேர் கையெழுத்திட்ட மனுவையும் அளித்தனர்.

இதேபோல் கனடா, பிரான்ஸ், ஸ்பெயின் ஆகிய நாடுகளிலும் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. நோபல் கமிட்டி விதிகளின்படி, அரசு மற்றும் தேசிய சபைகளின் உறுப்பினர்கள் போன்ற முக்கிய பிரமுகர்கள்தான் நோபல் பரிசுக்கு பரிந்துரை செய்யமுடியும்.

# ஏலம்



மைசூர் மகாராஜாவுக்கு சொந்தமான 200 ஆண்டுகள் பழமையான சாரட் வண்டி பிரிட்டனில் இந்த மாதம் 24ஆம் திகதி ஏலத்துக்கு வர உள்ளது. நுணுக்கமான வேலைப்பாடுகள் நிறைந்த இந்த சாரட் வண்டியை பிரிட்டன் மன்னர் குடும்பத்தினர் வரும்போது அவர்களுக்காக பயன்படுத் தப்பட்டுள்ளது. 1974ஆம் ஆண்டில் மகாராஜாவால் வழங்கப்பட்ட இந்த சாரட் வாகனம், ஆஸ்திரேலியாவில் அந்த ஆண்டே ஏலம் விடப்பட்டது. தற்போது இது ரூ.87 இலட்சம் வரை விலை போகும் எனத் தெரிகிறது.

# வெலிக்கடை தாக்குதலில் வெடித்தன மர்மங்கள்

அலசுவது -மதியூகி

**கொலைக் குற்றவாளிகளும் திருடர்கள் என எந்தப் பாகுபாடுகளும் இல்லாமல் குற்றவாளிகள் துன்பங்களை அனுபவிக்கின்றனர். இவர்களிடையேதான் சந்தேகத்தின் பேரிலும், குற்றங்கள் முறையாக நிரூபிக்கப்படாமல் பல வருடங்களாக தமிழ் அரசியல் கைதிகள் சிறைகளில் சிக்கித் தவிக்கின்றார்கள். உண்மையான புலிகள் தற்போது புனர்வாழ்வு வழங்கப்பட்டு வெளியில் விடுதலை செய்யப்படுகின்ற போதும், சிறைகளில் துன்பம் அனுபவித்தே தமது வாழ்க்கையை தொலைத்த பலரின் விடுதலை கேள்விக்குறியாகவே உள்ளது. இந்த நிலைமை மாறவேண்டும். சிறைகள் பாதுகாப்பான சூழலில் இருக்கவேண்டும். கைதிகள் சட்டம் விதிக்கும் தண்டனையைத் தவிர அநாவசியமான துன்பங்களை அனுபவிக்காமல் இருப்பது உறுதி செய்யப்படவேண்டும்.**

மூன்று வருடங்களுக்குப்பிறகு ஊடகங்களுக்கு உயிர் கொடுத்த பரபரப்புச் சம்பவமாக வெலிக்கடைச் சம்பவம் அமைந்தது. "கைதிகளுக்கும் அதிரடிப் படையினருக்கும் ஆயுத மோதல் பலர் மரணம், அதிகாலைவரை தாக்குதல்கள் தொடர்ந்தன" என்ற செய்தியை தலைப்புச் செய்தியாக கொண்டுவருவதிலும், அச்சிட்டு சந்தைப்படுத்துவதிலும் கைதேர்ந்த ஊடகங்களின் எதிர்பார்ப்பு நிறைவேறியது.

புலிகளுடனான பிரச்சினைகளுக்குப்பிறகு பெருமளவானோர் பலியாகியிருக்கும் தாக்குதல் சம்பவம் இது. நவம்பர் மாதம் 10ஆம் திகதி வெலிக்கடைச் சிறையில் விஷேட தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட தயாராகிக் கொண்டு இருந்தனர்.

இந்தச் செய்தி சிறைக்குள் இருந்த சண்டியர்களையெல்லாம் சினம் கொள்ளச் செய்தது. தங்களுக்காக இல்லாமல் அரசியலுக்காகவும், சில அதிகாரத்தில் இருப்பவர்களின் தேவைகளுக்காகவும், கொலை,கொள்ளை என அத்தனை சட்டவிரோதச் செயல்களையும் செய்தவர்கள்.

தமது விடுதலைக்கு உதவாதவர்களை வெளியில் வந்ததும் கவனிக்கவேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டிருந்த அந்தக் கைதிகள் சிறைக்குள்ளேயே சிற்றரசர்களைப்போல் அதிகாரம் செய்து கொண்டிருப்பவர்கள்.

இவர்களுக்கு மூன்று வேளையும் விரும்பிய உணவு வந்து சேர்ந்துவிடும். சர்வதேசம்வரை தொடர்பு கொள்வதற்கு தொலைபேசி வசதிகள், போதைப்பொருள் வியாபாரம் என்பவற்றுக்கு மேலாக சிறைக்குள்ளேயே சேவகம் செய்வதற்கு ஆட்கள் என சிலரின் வாழ்வு உள்ளுக் குள்ளேயே உல்லாசமாகத்தான் இருந்தது.

எழுதுவதற்கு கூச்சமாக இருந்தாலும் இவ்வாறான குற்றவாளிகளுக்கு சிறைகளுக்குள்ளேயே பாலியல் தேவைக்கு ஆட்களும் கிடைக்கின்ற வசதிகளும் இருந்திருக்கின்றது.

இவர்களை சோதனை செய்து அவர்களிட மிருந்து போதைப் பொருட்களையும், தொலைபேசிகளையும், பாதுகாப்புக்காக வைத்திருக்கும் ஆயுதங்களையும் படையினர் பறித்துவிட்டால் பின்னர் என்ன மரியாதை இருக்கும். சோதனை செய்ய வரட்டும் பார்த்துக் கொள்ளலாம் என்று தயாராகவே இருந்தார்கள்.

குறிப்பிட்ட சிறைக்கூடத்துக்குள்ளே சோதனைகள் ஆரம்பமானபோது படையினர் மீது கைதிகள் தாக்கத் தொடங்கினார்கள். ஏற்கெனவே ஆயத்தமாக வைத்திருந்த போத்தல், கல், இரும்புக்கம்பிகள் என எல்லாவற்றையும் பிரயோகித்தார்கள். பதிலுக்கு சிறைக்காவலர்களும், பொலிஸாரும் திருப்பித் தாக்கத் தொடங்கினார்கள்.

சிறைக்கைதிகள் சிறைகளை உடைத்துக் கொண்டார்கள். பொலிஸாரால் நிலைமையை கட்டுப்படுத்த முடியாமல் போகவும் இராணுவத்தை உதவிக்கு அழைத்தார்கள்.

இராணுவம் வருவதற்குள் சிறைக் கைதிகள் உள்ளே இருந்த ஆயுதக் களஞ்சியத்தை உடைத்து அங்கு வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களை கையில் எடுத்துக் கொண்டனர்.

ஏற்கனவே ஆயுதங்களைக் கையாண்டு பரிச்சயம் உள்ளவர்கள் என்பதால் அவர்களுக்கு அந்தச் சூழல் புதிய உற்சாகத்தைக் கொடுத்தது. அதிரடிப் படையினரை நோக்கிச் சுடத் தொடங்கினார்கள். பதிலுக்கு அதிரடிப் படையினரும் தாக்கினார்கள்.

சிறைக்கூட வளாகமே போர்க்களம்போல் காட்சியளித்தது. புலிகள் விமானத்தளத்தைத் தாக்கியபோது பார்த்த காட்சிகளைப் போல் சூழல் இருந்தது. பேஸ்லைன் வீதி போக்குவரத்துக்கு தடை செய்யப்பட்டு சிறை வளாகத்தைச்சுற்றியும் பாதுகாப்பை பலப்படுத்தினார்கள்.

கட்டுக்கடங்காமல் நிலைமை மோசமடைந்தது. கைதிகள் உள்ளிருந்து தாக்கியதால் அவர்கள் பாதுகாப்பாக தாக்குதல் நடத்தும் நிலை இருந்தது. படையினர் பாதுகாப்பற்று வெளியிலிருந்து நிலைமையை எதிர்கொள்ளவேண்டியிருந்தது.

இதனால் அதிரடிப்படையினருக்கும் பாதிப்புக்கள் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. ஆனாலும் என்ன விலை கொடுத்தும் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டிய கட்டாயத்தில் படையினர் இருந்தனர்.

தாக்குதல்கள் தீவிரமடையத் தொடங்கின. இழப்புக்களும் அதிகரித்தன. களுதுஷார உட்பட 11 பாதாள உலகக் குழுவினர் உட்பட 27பேர் பலியானார்கள். 45பேர் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்களில் 6பேரின் நிலைமை மோசமாக இருப்பதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன.

ஆயுதக்களஞ்சியத்தில் 85 ஆயுதங்கள் இருந்ததாகவும், அதில் 80 ஆயுதங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும், 5 ஆயுதங்களைக் காணவில்லை என்றும் ஒரு செய்தி தெரிவிக்கின்றது. எனினும், காணாமல்போன ஆயுதங்களின் எண்ணிக்கை 20க்கு மேற்படலாம் என்று இன்னொரு செய்தி கூறுகின்றது. தற்போது சிறைகளில் சுற்றுப் பகுதிகள் இராணுவ பாதுகாப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. நாட்டின் அனைத்துச் சிறைகளின் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

வெலிக்கடை தாக்குதலின்போது பல கைதிகள் தப்பிச் சென்றுள்ளதாகவும், கைதிகள் தொடர்பான பல முக்கியமான ஆவணங்கள் தீ இடப்பட்டுள்ளதாகவும் சுமார் ஒரு கோடி ரூபாவுக்கு மேல் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் தற்போது தெரியவருகின்றது.

இவற்றைப் பார்க்கின்ற போது பல்வேறு சந்தேகங்கள் எழுவதற்கு வாய்ப்புகள் உண்டு.

வெலிக்கடைச் சிறையில் 3621 கைதிகள் இருந்திருக்கின்றனர். இவர்களில் விஷேடமாக 900 கைதிகள் தங்க வைக்கப்பட்டிருக்கும் இரண்டு வார்ட்டுகளே சோதனை செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதுவும் அந்த இரண்டு வார்ட்டுகளிலும் பாரிய குற்றங்கள் புரிந்த குற்றவாளிகளே தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவ்வாறெனின் போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கையுடன் குறித்த சோதனை திட்டமிடப்படவில்லையா?

கைதிகள் ஒரு வகையான போதைப் பொருளை உண்ட பின்னரே தாக்குதலில் ஈடுபட்டுள்ளார்கள் என்று வெளியான செய்திகள் உண்மையானால் இந்த போதைப்பொருள் அங்கு கொண்டுவரப்பட்டது எவ்வாறு? எதற்காக?

ஆயுதக்களஞ்சியம் உடைக்கப்பட்டுள்ளது. சிறை அதிகாரிகளும், பொலிஸாரும் தேடுதல் நடத்துவதற்கான ஆயுத்தத்துடன் இருக்கையில் அவர்களையும் தாக்கியபடி ஆயுதக் களஞ்சியத்தை உடைத்து ஆயுதங்களை எடுக்கும் வரை நிலைமையின் தீவிரத்தை யாரும் புரிந்து கொண்டிருக்கவில்லையா? அதை தடுத்து நிறுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லையா? போன்ற கேள்விகள் எழுகின்றன.குற்றவாளிகளின் கையில் துப்பாக்கிகள் கிடைத்தபின்னர் நடந்த சம்பவங்கள் கேள்விக்குட்படுத்த முடியாதவை.

இலங்கையிலுள்ள சிறைகளில் இதுபோன்ற பல சம்பவங்கள் பல கால கட்டங்களில் நடந்துள்ளன.

அதிகாரிகளுக்கும் கைதிகளுக்குமிடையில் மோதல்கள், கைதிகளுக்கும் கைதிகளுக்குமிடையே மோதல்கள், கைதிகளைப் பார்க்கச் சென்ற பிரமுகர்களை கைதிகள் தாக்கிய சம்பவங்கள் என நடந்திருக்கின்றன. கைதிகளுக்கிடையே இன ரீதியாக திட்டமிட்டும், திட்டமிடப்படாமலும் தாக்குதல்கள் நடந்தேறியுள்ளன.

கடந்த மாதம் கூட சிறைகளிலுள்ள பெண்கள் நடத்தப்படும் விதம் மிகவும் மோசமாகவுள்ளது என குற்றச்சாட்டுக்கள் கூறப்பட்டன. அதிலும் தமிழ் பெண்கள் மீதான பாலியல் துன்புறுத்தல்கள், சோதனைகள் என்பவை பற்றிய செய்திகள் வெளியாகி இருந்தன.

தமிழ் ஆண் கைதிகள் தாக்கப்படுவதும், பலியாகுவதும் கூட காலா காலத்துக்கு சிறைகளில் நடக்கும் நிகழ்வுகளைப் போல் நடந்துவருகின்ற நிலைமை உள்ளது.

சிறைகளில் அடைக்கப்படும் கைதிகள் தமது தவறை உணரவும், அதற்காக மனம் வருந்தி திருந்திய மனிதனாக மீண்டும் சமூகத்துடன் இணைக்கப்படும் இடமாக சிறைகள் இருக்கவேண்டும் என்பது எல்லோரினதும் எதிர்பார்ப்பாகும். ஆனால் நிலைமை தலைகீழாக மாறியுள்ளது.

சிறைக்குப் போகும் குற்றவாளிகள் பாதுகாப்பற்ற சூழலில் இருக்கவும், தண்டனைக்கும் மேலதிகமாக வெளியில் சொல்ல முடியாத பல்வேறு கேவலமான துன்பத்தை அனுபவிக்கவும் நேரிடுகின்றது.

உளவியல் ரீதியாகவும், பாலியல் ரீதியாகவும் பாதிப்புக்களை எதிர்கொள்ளும் துர்ப்பாக்கிய நிகழ்வுகள் சிறைகளில் சாதாரணமானதாகியுள்ளது.

கொலைக் குற்றவாளிகளும் திருடர்கள் என எந்தப் பாகுபாடுகளும் இல்லாமல் குற்றவாளிகள் துன்பங்களை அனுபவிக்கின்றனர். இவர்களிடையேதான் சந்தேகத்தின் பேரிலும், குற்றங்கள் முறையாக நிரூபிக்கப்படாமலும் பல வருடங்களாக தமிழ் அரசியல் கைதிகள் சிறைகளில் சிக்கித் தவிக்கின்றார்கள். உண்மையான புலிகள் தற்போது புனர்வாழ்வு வழங்கப்பட்டு வெளியில் விடுதலை செய்யப்படுகின்ற போதும் சிறைகளில் துன்பம் அனுபவித்தே தமது வாழ்க்கையை தொலைத்த பலரின் விடுதலை கேள்விக்குரியாகவே உள்ளது.

இந்த நிலைமை மாற வேண்டும். சிறைகள் பாதுகாப்பான சூழலில் இருக்க வேண்டும். கைதிகள் சட்டம் விதிக்கும் தண்டனையைத் தவிர அநாவசியமான துன்பங்களை அனுபவிக்காமல் இருப்பது உறுதி செய்யப்படவேண்டும்.

மனம் திருந்துகின்ற அமைதி அங்கே கிடைக்கவேண்டும். கைதிகளும் மனிதர்கள் என்ற எண்ணம் அவர்களை நடத்துவதில் வெளிப்படுவதை அவர்கள் உணரச் செய்யவேண்டும். பாலியல் துன்புறுத்தல்களும், போதைப்பொருள் விநியோகமும், சட்டத்துக்குப் புறம்பான பொருள் பரிமாற்றங்களும் இடம்பெறாத வண்ணம் மிகவும் தீவிரமான கண்காணிப்பு உறுதிப்படுத்தப்படவேண்டும். பாரிய குற்றச்செயல்களில் ஈடுபட்ட குற்றவாளிகளையும், திருந்தாத குற்றவாளிகளையும் அணுகுவதில் கூடுதல் முன்னெச்சரிக்கையுடன் செயற்படவேண்டும். குறிப்பாக நடந்துமுடிந்த வெலிக்கடைச் சம்பவம்போல் மீண்டுமொரு சம்பவம் நடக்க இடமளித்துவிடக்கூடாது. சிறைகளில் இது போன்ற சம்பவங்கள் நடக்குமாக இருந்தால் பயங்கரவாதத்தை வெற்றி கொண்ட இலங்கை மக்கள் இவ்வாறான பயங்கரவாதத்திடம் தோற்றுப் போனதாகவே அர்த்தப்படும்.



# அபாயமான ஆயுதங்களும் வெகுமதிகளும்

(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

அபாயகரமான வெடி பொருட்களையோ அல்லது ஆயுதங்களையோ வைத்திருப்பது ஆபத்தானது. அவை பற்றித் தெரியப்படுத்தினால் வெகுமதி தரப்படும் என்ற வாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகள் மட்டக் களப்பு மாவட்டத்தின் பல பாகங்களிலும் கடந்த சில நாட்களாக பரவலாக ஒட்டப் பட்டிருக்கின்றன.

அந்தப் பிரசுரங்களில் தெரி விக்கப்பட்டுள்ளதாவது:

**"துப்பாக்கிகளையோ அல்லது துப்பாக்கிகளின் உதிரிப்பாகங்கள் மற்றும் பிற உபகரணங்கள் வெடிபொருட்கள் முதலியவற்றை வைத்திருப்பது சட்டவிரோதமானதாகும்.**

**அவ்வாறு எவரேனும் இத்தகைய சட்டவிரோத ஆபத்து விளைவிக்கும் ஆயதங்களை வைத்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டால் பிணையில் வரமுடியாத தடுப்பில் வாட நேரிடும். இதன் காரணமாக தடுப்பில் உள்ளவரது குடும்பமும் பிள்ளைகளும் வாழ்வதற்கு வழியற்றுத் தவிக்கும் நிலையும் ஏற்படும்.**

**எனவே நீங்கள் கண்டெடுத்த துப்பாக்கிகளோ அல்லது வேறே தேனும் ஆயுத உபகரணங்களோ உங்கள் வசமிருப்பின் அல்லது அவற்றை நீங்கள் உங்கள் வதிவிடத்தில் எங்காவது கண்டிருப்பின் தயக்கமின்றி அருகி லுள்ள பாதுகாப்புப் படையினரின் முகாமிற்கோ அல்லது பொலிஸ் நிலையத்திற்கோ தெரியப்படுத்தி அதற்குரிய வெகுமதியைப் பெற்றுக் கொள்ளுங்கள்.**

**பாதுகாப்புப் படையினர் அல்லது பொலிஸார் இத்தகைய சட்டவிரோத ஆயதங்களை அந்த இடத்திலிருந்து பாதுகாப்பாக அப்புறப்படுத்த உங்களுக்கு உதவுவார்கள்.**

**சட்டவிரோத ஆபத்து விளை விக்கும் ஆயுதங்களை நீங்கள் கண்டால் அல்லது வைத்திருந்தால் அல்லது அறிந்தால் 0777264193 என்ற இலக்கத்திற்கு அறிவியுங்கள்" என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

குறித்த சுவரொட்டிகளில் பணப்பரிசில் விவரங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன. தற்கொலை அங்கி கனரகத் துப்பாக்கி, மற்றும் இலகு இயந்திரத் துப்பாக்கி என்பனவற்றுக்கு பதினையாயிரம் ரூபாவும், ரீ 56 ரகத் துப்பாக்கி மற்றும் ஆர்.பி.ஜி உந்துகணை செலுத்தி என்பனவற்றுக்கு பத்தாயிரம் ரூபா வரையிலும் கைத்துப்பாக்கி, கிளைமோர் ரகக் கண்ணிவெடி, கவச எதிர்ப்புக் கண்ணிவெடி என்பனவற்றுக்கு ஐயாயிரமும் ரூபாவும், கைக் குண்டுக்கு இரண்டாயிரம் ரூபாவும், ஆர்.பி.ஜி. உந்துகணைக்கு ஆயிரத்து ஐந்நூறு ரூபாவும் வெகுமதியாக வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணம் பயங்கரவாதத்தின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்ட கையோடு அந்த மாகாணத்திலிருந்து ஆயுதங்களைத் துடைத்தெடுக்கும் நடவடிக்கையும் முழு மூச்சாகத் துவங்கியிருந்தது.

2007 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தொடங்கிய ஆயுதக் களைவு நடவடிக்கைகள் இன்னமும் நடந்துகொண்டிருப்பதையும் இதன் மூலமாக அறியக்கூடியதாகவுள்ளது. சட்டவிரோதமான ஆயுதங்கள் இன்னமும் ஆயுதப்படையும் பொலி சாரும் தவிர்ந்த ஏனையவர்களின் வசம் இருப்பதாக பாதுகாப்புத் தரப்பு சந்தேகப்படுவதாலேயே இப் பொது அறிவித்தல்கள் அவ்வப்போது வெளியாகின்றன.

எல்.ரீ.ரீ.ஈ யினர் கருணா அம்மான் தலைமையிலும் பிரபாக ரன் தலைமையிலும் இரண்டாகப் பிளவுபட்டதன் பின்னர் எல்.ரீ.ரீ.ஈ யினர் வசமிருந்த ஆயுதங்களும் கணக்கு வழக்கின்றி அவை கைமாறத் தொடங்கிவிட்டிருந்தன என்ற விடயம் எல்லோருக்கும் தெரிந்ததே.

பிரபாகரனின் மூர்க்கமான தாக்குதல்களுக்கு முகம்கொடுக்க முடியாமற் போயிருந்த தனது அணி யின் கீழ் செயற்பட்ட கிழக்குப் புலி- களை ஆயுங்களைக் களைந்தெறிந்து விட்டு தமது வீடுகளுக்குச் செல்லுமாறு கருணா அம்மான் அப்போது உத்தரவிட்டிருந்தார்.

அதன்படி ஆண்களும் பெண்க ளுமாக பல புலி உறுப்பினர்கள் தப்பினோம், பிழைத்தோம் என்று தம்வசமிருந்த ஆயுதங்களை காடு களிலும் வீடுகளிலும் கைவிட்டு விட்டு தப்பி ஓட்டம் பிடித்தார்கள்.

அதன்பின்னர் கிழக்கும் விடு விக்கப்பட்டது. கிழக்கு விடுவிக் கப்பட்டதிலிருந்து சட்டவிரோத ஆயுதங்களை கையகப்படுத்திக் கொள்ள பாதுகாப்புத் தரப்பு பல்வேறு பகீரதப்பிரயத்தனங்களை மேற்கொண்டு வந்திருக்கின்றது.

அந்த வகையில் துப்புத் துலக்கல்கள் மூலம் சட்டவிரோத ஆயுதங்களைக் கைப்பற்றிக் கொள்வதில் பாதுகாப்புத் தரப்பு வெற்றியும் கண்டிருக்கின்றது.




பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு ஆயுதங்கள் களையப்பட்டு ஆயுத வன்முறைகளும் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுவிட்டது என்றாலும்கூட நூறு சதவிகி தம் முழுமையாக சட்ட விரோத ஆயுதங்கள் களையப்பட்டு நாடு சுத்தம் செய்யப்பட்டு விட்டது என்று திருப்திப்பட்டுக் கொள்ளமுடியாது. ஆங்காங்கே புதைத்து வைக்கப்பட்டுள்ள ஆயுதங்கள் தகவல்களின் அடிப் படையில் அவ்வப்போது கண்டு பிடிக்கப்பட்டும் வருகின்றன.

களவாக வைக்கப்பட்டி ருக்கும் சட்டவிரோத ஆயுதங்கள் மூலம் கொலை, கொள்ளை என்பனவும் அதன்மூலம் இடம்பெறும் இன்னபிற சமூகச் சீர்கேடுகளால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படக் கூடும் என்ற நியா யமான அச்சம் இருப்பதாலேயே சட்டவிரோத ஆயுதங்கள் பற்றிய இப்போதைய அறிவித்தல்கள் வெளியாகியுள்ளன.

சட்டவிரோத ஆயுதங்கள் அவை ஆயுதப்பயிற்சி பெற்ற வர்களிடமோ அல்லது வன்முறையில் தேர்ச்சி பெற்றவர்களிடமோ அல்லது எதுவித ஆயுத ரசனைகளும் அற்றவர்களிடமோ இவர்களில் எந்த சாராரிடம் இருந்தாலும் அது சமூகச் சீர்குலைவாகவும் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு அச்சுறுத்தலாகவுமே இருக்கும் என்பதில் ஐயமில்லை.

நாட்டில் உள்ள சட்ட விரோத ஆயுதங்கள் அனைத் தும் களையப்பட வேண்டும். அதேவேளை ஆயுதம் வைத்திருப்பவன்தான் நாட்டை அல்லது பிராந்தியத்தை ஆளும் அருகதையுள்ளவன் என்ற, ஒரு சிலரிடம் இருக்கும் மூளைச்சலவை செய்யப்பட்ட மனோபாவமும் களையப்பட வேண்டும். இந்த நிலைப்பாட்டில் ஆயுத வன்முறைகளினால் அனைத்தையும் பறிகொடுத்த தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் உறுதியாக இருக்கின்றார்கள். •

**சட்டவிரோத ஆயுதங்கள் அவை ஆயுதப்பயிற்சி பெற்றவர்களிடமோ அல்லது வன்முறையில் தேர்ச்சி பெற்றவர்களிடமோ அல்லது எதுவித ஆயுத ரசனைகளும் அற்றவர்களிடமோ இவர்களில் எந்த சாராரிடம் இருந்தாலும் அது சமூகச் சீர்குலைவாகவும் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு அச்சுறுத்தலாகவுமே இருக்கும் என்பதில் ஐயமில்லை. நாட்டில் உள்ள சட்டவிரோத ஆயுதங்கள் அனைத்தும் களையப்பட வேண்டும். அதேவேளை ஆயுதம் வைத்திருப்பவன்தான் நாட்டை அல்லது பிராந்தியத்தை ஆளும் அருகதையுள்ளவன் என்ற, ஒரு சிலரிடம் இருக்கும் மூளைச்சலவை செய்யப்பட்ட மனோபாவமும் களையப்பட வேண்டும்.**

# கிழக்கு மாகாண சபையின் செயற்பாடுகள்

## ஒரு பார்வை

பிரகஸ்பதி

**மாகாண சபைககளுக்கு எப்போதும் மத்திய அரசின் அனுசரணை யும் ஒத்துழைப்பும் அவசியமாகும். ஆயுத குழுக்களின் உத்தரவுப்படி அன்று மாகாண சபை தேர்தலில் பங்குபற்ற முன்வராதிருந்த பல்வேறு அரசியல் கட்சிகளும் குழுக்களும் இன்று எந்தொரு அச்சுறுத்தலுமின்றி தேர்தலில் போட்டியிட்டமை கிழக்கு மாகாண மக்கள் பெற்றுள்ள சிறந்த ஜனநாயக சூழலுக்கு முன்னுதராணமாகும். மாகாண சபைகள் ஈட்டிக்கொள்ளும் வருமானங்கள் போதுமானதல்ல. இதனால் மாகாண சபைகளுக்கு தேவையான நிதிகளை மத்திய அரசாங்கம் வழங்க வேண்டியுள்ளது.**

மாகாண சபை முறைமை கேள்விக் குறியாகியிருக்கின்ற நிலையில் கிழக்கு மாகாண சபையின் இரண்டாவது அமர்வு, கௌரவ ஆளுனர் ஓய்வுபெற்ற றியல் அட்மிரல் மொகான் விக்கிரமவின் கொள்கை விளக்க உரை, மாகாண சபை உறுப்பினர்களுக்கான செயலமர்வுகளுடன் கடந்த வாரத்தில் நடைபெற்று முடிந்திருக்கிறது.

இந்த நேரத்தில் இரண்டாவது கிழக்கு மாகாண சபையின் கடந்த காலம், தற்போதைய, எதிர் காலச் செயற்பாடுகள் நோக்கங்கள் குறித்து ஆராயலாம் என நினைக்கிறோம்.

கிழக்கு மாகாண சபையின் இரண்டாவது அமர்வு நவம்பர் மாதம் 6ஆம்திகதி திருகோண- மலையில் நடைபெற்றிருந்தது. இதன்போது தனது கொள்கைப்பிரகடனத்தினை ஆளுனர் ஓய்வுபெற்ற ரியர் அட்மிரல் மொகான் விஜய விக்கிரம வெளியிட்டிருந்தார். அதன்போது, அரசியலமைப்பின்படி எந்தவொரு மாகாண சபையும் தமது விருப்பு வெறுப்புக்களை நிறைவேற்றி கொள்வதற்காக தனித்து பயணிக்க முடியாது எனத் தெரிவித்திருந்தார்.

அதேநேரம், மாகாண சபைககளுக்கு எப்போதும் மத்திய அரசின் அனுசரணை யும் ஒத்துழைப்பும் அவசியமாகும் "ஆயுதக் குழுக்களின் உத்தரவுப்படி அன்று மாகாண சபை தேர்தலில் பங்குபற்ற முன்வராதிருந்த பல்வேறு அரசியல் கட்சிகளும் குழுக்களும் இன்று எந்தொரு அச்சுறுத்தலுமின்றி தேர்தலில் போட்டியிட்டமை கிழக்கு மாகாண மக்கள் பெற்றுள்ள சிறந்த ஜனநாயக சூழ லுக்கு முன்னுதராணமாகும். மாகாண சபை கள் ஈட்டிக்கொள்ளும் வருமானங்கள் போதுமானதல்ல. இதனால் மாகாண சபைகளுக்கு தேவையான நிதிகளை மத்திய அரசாங்கம் வழங்க வேண்டியுள்ளது.

யுத்தம் முடிந்தபோதும் சில நாடுகள் இன்னும் எமது நாட்டை சீர்குலைக்க முயற்சிக்கின்றன. எனினும் இதற்கு கிழக்கு மாகாண மக்கள் பிரதிகள் உடந்தையாக செயற்படமாட்டார்கள் எனவும் தெரிவித் திருந்தார். அதேநேரம் கடந்த மாகாண சபை யில் காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகள், ஆரம்பித்து வைக்கப்பட்ட செயற்திட்டங்கள் குறித்தும் விளக்கமளித்தார்.

அதே நேரத்தில், கிழக்கிற்கு ரூ.16,767,256 மில்லியன் கிடைக்கும் என கிழக்கு மாகாண முதலமைச்சர் 2013 ஆம் ஆண்டுக்கான நிதிப் பிரகடனத்தினை வெளியிடும்போது தெரிவித்தார். கிழக்கு மாகாண சபைக்கு 2013ஆம் ஆண்டுக்கான நிதியாக மத்திய அர சாங்கத்திடமிருந்து 16,767,256 மில்லியன் ரூபாய் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது என அறிவித்தார்.

இதில், மீண்டுவரும் செலவீனங்களுக்காக 11,635,256 மில்லிய னும், மூலதன செலவீன ங்களுக்காக 1,21,700 மில் லியன் ரூபாவும் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் செயற் திட்டங்களுக்காக 3,915,00 மில்லியன் ரூபா ஆகியன சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. அந்தவகையில், மத்திய அரசிடமிருந்து கிழக்கு மாகாண சபைக்கு 16,767,256 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு கிடைக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

அத்துடன், 2012ஆம் ஆண்டுக்குரிய குறை நிரப்பு மதிப்பீட்டில், அதிபர் மற்றும் ஆசிரியர்க ளின் நிலுவைச் சம்பளக் கொடுப்பனவுகள், சுகாதாரத்துறை வைத்தியர்களின் மேலதிக நேரக் கொடுப்பனவுகள் உள்ளிட்டவை காரணமாக அதிகரிக்கப்பட்ட செலவீனங்களை ஈடு செய்வதற்கான 2012ஆம் ஆண்டுக்குரிய குறை நிரப்பும் முன்வைக்கப்பட்டது.

இரண்டாவது, கிழக்கு மாகாண சபைக் கான தேர்தல் கடந்த செப்ரம்பர் மாதம் 8ஆம்திகதி நடைபெற்றிருந்தது. அதில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி போனஸ் ஆசனங்கள் இரண்டுடன் 14 ஆசனங்களையும், தமிழ் தேசியக் கூட்டமைப்பு 11 ஆசனங்களையும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 7 ஆசனங்களையும், ஐக்கிய தேசியக்கட்சி 4 ஆசனங்களையும் பெற்றிருந்தன. இந்த நிலையில் ஆட்சியை யார் அமைப்பது என்ற பிரச்சினை சுமார் இரண்டு வாரங்களுக்கும் மேலாகத் தொடர்ந்தது. அதற்கு முடிவு ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இணைந்ததைத் அடுத்து முடிவுக்கு வந்திருந்தது.

கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் என்று முடிவானதையடுத்து அவர் ஜனாதிபதி முன்னிலையில், அலரிமாளிகை யில் பதவியேற்றார். அதைத் தொடர்ந்து கிழக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் மாகாண நிதித் திட்டமிடல், சட்டம் ஒழுங்கு, மாகாண நிர்வாகம், ஆளணி உள்ளூராட்சி, புனர்வாழ்வு மீள்குடியேற்றம், கிராமிய அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளராக இலங்கை நிர்வாக சேவை முதலாம் வகுப்பு விசேட தரத்தைச் சேர்ந்த யூ.எல்.ஏ.அஸீஸ் நியமிக்கப்பட்டார்.

கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் செப்டெம்பர் 28ஆம் திதகி கடமைகளைப் பொறுப்பேற்றார்.

[22 ஆம் பக்கம் பார்க்க]

# விதியால் வந்தது அல்ல நம்பிக்கையால் கிடைத்தது

அமெரிக்கா எதிர்கொண்டு கடுமையான பொருளாதார நெருக்கடி பிரச்சினை, தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளர் ரோம்னி அளித்த கடும் போட்டி ஆகியவற்றை சமாளித்து ஒபாமா மீண்டும் வெற்றிபெற்றுள்ளார்.

உலக வல்லரசு நாடான அமெரிக்காவின் அதிபரைத் தேர்வு செய்வதற்கான தேர்தல் பிரசாரத்தில் ஜனநாயகக் கட்சி வேட்பாளரான அதிபர் ஒபாமாவும் குடியரசுக் கட்சி வேட்பாளரான மிட் ரோம்னியும் தீவிரமாக ஈடுபட்டனர். இருவரில் யார் வெற்றி பெறுவார்? என்பதைக் கணிக்கவே முடியாத நிலை காணப்பட்டது. சில கருத்துக் கணிப்புகள் ஒபாமாவுக்குச் சாதகமாகவும், சில கருத்துக் கணிப்புகள் ரோம்னிக்கு ஆதரவாகவும் அமைந்தன. தேர்தல் நெருங்க நெருங்க இரு வேட்பாளர்களும் சமஅளவு வாக்குகள் பெறும் வாய்ப்பும் இருப்பதாகக் கருதப்பட்டது.

இந்நிலையில், அதிபர் தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டன. கருத்துக் கணிப்புகள் அனைத்தையும் தவிடுபொடியாக்கும் வகையில் ஒபாமா அமோக வெற்றி பெற்றார். அனைத்து மாகாண மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய வாக்காளர் குழுவில் மொத் தம் 535 வாக்குகள் உள்ளன. இவற்றில் 303 வாக்குகள் பெற்று ஒபாமா வெற்றிவாகை சூடினார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட மிட் ரோம்னிக்கு 206 வாக்குகள் மட்டுமே கிடைத்தன. அதிபர் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு 270 வாக்குகளைப் பெற வேண்டும். ஒபாமா அதைவிட 33 இடங்கள் கூடுதலாகப் பெற்று வென்றுள்ள போதிலும், கடந்த 2008 ஆம் ஆண்டில் கிடைத்ததைவிட தற் போது அவருக்கு வாக்குகள் சரிந்துள்ளன. அப்போது அவருக்கு 349 வாக்குகள் கிடைத்தது குறிப்பிடத்தக்கது.



இரண்டாவது முறையாக வெற்றி பெற்று அதிபர் பதவியைத் தக்க வைத்துள்ள ஒபாமாவுக்கு கலிபோர்னியா மாகாணம் பெரிதும் கைகொடுத்துள்ளது. அங்கு அவருக்கு 55 வாக்குகளும், ஓஹையோ மாகாணத்தில் 18 வாக்குகளும் கிடைத்தன. இது தவிர, கொலராடா, இயோவா, நெவாடா, நியூஹாம்ப்ஷைர், விஸ்கான்சின், பென்சில்வேனியா மற்றும் மிச்சிகன் ஆகிய மாநிலங்களிலும் ஒபாமாவுக்கு கூடுதல் வாக்குகள் கிடைத்தன. இத்தேர்தல் பிரசாரத்தின்போது பொருளாதார நெருக்கடியை ஒபாமாவால் சமாளிக்க முடியுமா? என்பது பெரிய கேள்வியாக எழுப்பப் பட்ட போதிலும், மக்கள் அவர் மீது நம்பிக்கை வைத்து தீர்ப் பளித்துள்ளனர். தவிர, சமீபத்தில் அமெரிக்காவைத் தாக்கிய சாண்டி புயலுக்குப் பிறகு மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை அரசு சிறப்பாக மேற்கொண்டதும் கடைசி நேரத்தில் ஒபாமாவுக்குச் சாதகமாகத் திரும்பியது என்றும் கருதப்படுகிறது.

ஒபாமா வெற்றி பெற்றதாக செய்திகள் வெளிவந்ததைத் தொடர்ந்து, தனது ஆதரவாளர்களுக்கு அவர் டுவிட்டர் இணையத் தளம் மூலம் நன்றி தெரிவித்தார். "இது உங்களால்தான் நிகழ்ந்தது. நன்றி" என்று அவர் குறிப்பிட்டார்.

இரண்டாவது முறையாக வெற்றி பெற்றுள்ள அவருக்கு குடியரசுக் கட்சி வேட்பாளர்மிட் ரோம்னி(65) தொலைபேசி மூலம் வாழ்த்து தெரிவித்தார். அதற்கு, ஒபாமா நன்றியும், தேர்தலில் கடும் போட்டியை அளித்ததற்காக வாழ்த்தும் தெரிவித்துக் கொண்டார். இதனிடையே, ரோம்னி தனது ஆதரவாளர்களிடையே பேசுகையில், "இது நமது நாட்டுக்கு மிகவும் சவாலான நேரம். நமது நாட்டை வழிநடத்துவதில் அதிபர் வெற்றி பெற வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கிறேன் என்றார்.

(22 ஆம் பக்கம் பார்க்க...)



# புலிகளின் வதை முகாமில் மணியம்

வதை 36 துன்பியல் தொடர்

பண்டாரநாயக்கவின் தீவிர ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகளை விளக்கி, அதன்காரணமாக 1957இல் உள்நாட்டு – வெளிநாட்டு பிற்போக்கு சக்திகளின் ஏற்பாட்டில் அவர் படுகொலை செய்யப்பட்டதையும் கூறினேன். அதைத் தொடர்ந்து தென்னிலங்கையில் ஐ.தே.க கிளப்பி வந்த சிங்கள இனவெறி காரணமாகவும், வடக்கு, கிழக்கில் தமிழரசுக்கட்சி கக்கி வந்த தமிழ் இனவாதம் காரணமாகவும், 1958இல் இலங்கையில் முதலாவது இனக் கலவரம் அரங்கேறியதையும் சொன்னேன்.

பண்டாரநாயக்க கொலைசெய்யப்பட்ட பின்னர், அவரது மனைவி சிறீமாவோ பண்டாரநாயக்க பிரதமரானதையும், அவரது ஆட்சிக் காலத்தில் தமிழரசுக் கட்சி வடக்கு, கிழக்கிலிருந்த கச்சேரிகளின் முன்னால் சத்தியாக்கிரகம், மறியல் போராட்டம் என்பனவற்றை நடாத்தி, அரச நிர்வாகத்தை ஸ்தம்பிக்க வைத்ததையும், அதன் ஓர் அங்கமாக அரசாங்கத்திற்குப் புறம்பாக 'தமிழரசு தபால் தலை' என்ற பெயரில் முத்திரை வெளியிட்டு, சிலநாட்கள் சட்டத்திற்குப் புறம்பாக தபால்சேவை நடாத்தியதையும் விளக்கினேன். அதன்காரணமாக, சிறீ மாவோ அரசாங்கம் தமிழரசுக் கட்சித் தலைவர்களை சில மாதங்கள் பனாகொட இராணுவ முகா மில் தடுப்புக்காவலில் வைத்ததையும் சொன்னேன். இந்த சத்தியாக்கிரகத்தில் வடபகுதி பாடசாலைகளிலிருந்து தினமும் மாணவர்கள் லொறிகளில் ஏற்றிச் செல்லப்பட்டு, யாழ்ப்பாணக் கச்சேரி வாசலில் குந்த வைக்கப்பட்டதையும், அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் இடைக்காடு இந்துக் கல்லூரியில் (இப்பொழுது மகா வித்தியாலயம்) எட்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த நானும் லொறியில் ஏற்றிச் செல்லப்பட்டதையும் குறிப்பிட்டேன். அங்கு எமக்கு வயிறு நிறையக் குடிப்பதற்கு இளநீரும், மதிய போசனமாக யாழ்ப்பாணம் மலாயன் கபே (மலாயன் கபே அந்த நாட்களில் கொடிகட்டிப் பறந்தது) வழங்கிய சோற்றுப் பார்சல் தந்ததையும் விபரித்தேன்.

எனது சுருக்கமான விளக்கத்தை செவிமடுத்த தயாபரன், "அதற்காகவா அரசியலில் இறங்கினீர்கள்?" என என்னை வினவினான்.

அவன் இந்தக் கேள்வியைக் கேட்ட பின்னர்தான், அவன் என்னிடம் எப்பொழுது, என்ன காரணத்துக்காக நான் அரசியலில் ஈடுபட்டேன் என வினவியதற்கான காரணம் புரிந்தது. அதாவது தயாபரன் போன்ற இன்றைய கால தமிழ் இளைஞர்கள், ஐ.தே.க அரசு ஜே.ஆர். தலைமையில் 1977இல் ஆட்சிக்கு வந்த பின்னர் இனப்பிரச்சினை தீவிரமடைந்து, இன ஒடுக்குமுறையாக மாறிய சூழ்நிலையில், ஆயிரக்கணக்கில் இயக்கங்களில் இணைந்ததுபோல, நானும் அன்றைய காலகட்டத்தில் ஏதோவொரு இனப்பிரச்சினையின் தாக்கத்தால்தான் அரசியலில் பிரவேசித்திருக்கக்கூடும் என அவன் எண்ணுவது இப்பொழுது எனக்குப் புரிந்தது.

தமிழர்கள் அரசியலில் ஈடுபடுவது தமிழர்களின் இனப்பிரச்சினை என்ற ஒற்றைக் காரணிக்காக மட்டுமே என்ற குறுகிய பார்வை, இன்றைய தமிழ் சமூகத்தின் பெருவாரியான மக்களிடம் குடிகொண்டிருப்பதையும், அதனால் ஏற்பட்டுள்ள விபரீதமான போக்குகளையும் பார்க்கையில், தயாபரன் போன்ற கடிவாளம் இடப்பட்ட 'புலிப் பொடியன்' அவ்வாறு கருதுவதில் ஆச்சரியப்பட ஏதுமில்லை.

எனவே நான், "நான் அரசியலில் ஈடுபட்ட காலத்தில், தீவிரமான இனப்பிரச்சினையோ வேறு பிரச்சினைகளோ இருக்கவில்லை" எனப் பதிலளித்தேன்.

எனது பதில் அவனுக்கு வியப்பாக இருந்திருக்க வேண்டும். எனவே அவன், "அப்பிடியெண்டால் ஏன் அரசியலிலை இறங்கினனீகள்?" என வினவினான்.

"நான் சேர்ந்தது தமிழரசுக் கட்சியில் இல்லை. அதற்கு எதிரான கொம்யூனிஸ்ட் கட்சியில்" எனக் கூறினேன்.

'நீங்கள் ஒரு தமிழனாக இருந்தும், ஏன் தமிழ் கட்சியில் சேராமல் சிங்களக் கட்சியில் சேந்தினீங்கள்?" என அவன் வினவினான்.

அவன் கம்யூனிஸ்ட் கட்சி பற்றி வைத்திருந்த புரிதலையிட்டு நான் ஆச்சரியப்படவில்லை. அவ்வளவு தூரம் இன்றைய இளம் தமிழ் சந்ததி தமிழ் இனவெறியூட்டப்பட்டிருப்பது எனக்குத் தெரியும். அதுமட்டுமின்றி, தமிழ் மக்கள் மத்தியில் எனது காலத்தில்கூட, கம்யூனிசம் என்றால் மிகவும் தவறான கற்பிதங்களே இருந்ததை நானே அனுபவபூர்வமாக உணர்ந்திருக்கிறேன்.

எனது சிறு வயதில், எனக்கு அரசியல் பிரக்ஞையோ சமூகநல நோக்கோ உருவாகாத காலத்தில், தமிழன் என்றால் தமிழரசுக் கட்சியில்தான் சேரவேண்டும் என்றே கருதியிருந்தேன். எமது ஊரில் தமிழ் காங்கிரஸ் கட்சியை ஆதரித்தவர்கள்கூட, அவர்களில் சிலர் ஆசிரியர்களாக இருந்தும், சற்று வித்தியாசமாகவே நோக்கப்பட்டார்கள். இத்தகைய ஒரு சூழ்நிலையில் கம்யூனிஸ்ட் கட்சி பற்றி விளக்கவே தேவையில்லை. சிறு வயதில் எனக்கு, கம்யூனிசம் பற்றி என்னைவிட வயது மூத்தோரால் விளக்கப்பட்டதை இன்று நினைத்தால், சிரிப்பு வருவதுண்டு. அதாவது கம்யூனிஸ்ட்டுகள் ஆட்சிக்குவந்தால், அவர்கள் செய்யப்போகும் 'தீய நடவடிக்கைகளில்' பிரதான மூன்று விடயங்களாவன: 55 வயதுக்கு மேற்பட்டவர்களால் நாட்டுக்குப் பிரயோசன மில்லையென்று, அவர்களைச் சுட்டுக் கொன்றுவிடுவார்கள்! கடவுளை வணங்குவதற்கு யாரும் அனுமதிக்கப்படமாட்டார்கள்!! சாதிகள் இருக்க அனுமதிக்கப்படமாட்டாது!!! இவற்றை அன்று நான் கேள்விப்பட்டதும், யாழ்ப்பாணத்தின் ஒரு சராசரித் தமிழ் சிறுவனான எனக்கு, கம்யூனிசத்தின் மீது அளவுகடந்த வெறுப்புத்தான் ஏற்பட்டது.



எனது பால்ய பருவத்து இந்த நிலையை நான் தயாபரனுக்கு விளக்கிச் சொன்னேன்.

"இனப் பிரச்சினையோ வேறுபிரச்சினைகளோ காரணமில்லை யெண்டால், பிறகு நீங்கள் ஏன் கம்யூனிஸ்ட் கட்சியிலை சேந்தனீங்கள்?" என அவன் மீண்டும் வினவினான்.

நான் அவனது கேள்விக்கு விடை அளிக்கத் தொடங்குகையில், பல்வேறு விசாரணைக் குடில்களில் இருந்த விசாரணையாளர்கள், மதிய உணவிற்குப் புறப்பட்டுச் செல்வதைப் பார்த்த அவன், "பின்னேரம் கதைப்பம்" என்று சொல்லிவிட்டு, என்னை சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லத் தயாரானான். இன்று புதுவருடமாகையால், அவர்களுக்கு ஏதாவது விசேட வைபவங்களும் உணவு வகைகளும் தயாராக இருக்கும் என எண்ணிக் கொண்டே அவனுடன் புறப்பட்டேன்.

நான் சிறைச்சாலைக்குள் சென்ற சிறிதுநேரத்தில், எமக்கும் நான் அதுவரை அங்கு பார்த்திராத விசேட உணவு வந்துசேர்ந்தது.

புலிகளின் முகாமில் நிர்வாணமாகக் குளிக்கும் 'பாக்கியம்' கிடைத்தது!

நான் சிறைச்சாலைக்குள் சென்றபோது கடந்த சில நாட்களில் கண்டிராத ஒருவித ஆரவாரத்தைக் கண்டேன். நாம் தங்கியிருந்த ஹோலை சிலர் கழுவிக் கொண்டிருந்தனர். மற்றும் பலர் மகிழ்ச்சியுடன் குளித்துக்கொண்டிருந்தனர். இது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஏனெனில் நான் கைதுசெய்யப்பட்டதிலிருந்து கடந்த ஏழு நாட்களாக இந்தமாதிரித் தண்ணீரைக் காணவில்லை. தினசரி ஒரு குளிப்பும் பத்து தடவை உடம்பு கழுவுவதுமாக இருந்த எனக்கு, அந்த ஏழு நாட்களில் ஒரு சொட்டுத் தண்ணீர்கூட என் மேனியில் படவில்லை.

சிறைச்சாலைக்குப் பக்கவாட்டில் இருந்த கிணற்றிலிருந்து நீரிறைக்கும் இயந்திரம் தண்ணீரை இறைக்க, அது குழாய் மூலம் சிறைக்குள் வந்துகொண்டிருந்தது. வாரம் ஒருமுறை, சிலவேளைகளில் இரு வாரத்துக்கு ஒருமுறை இவ்வாறு குளிப்பதற்குத் தண்ணீர் தரப்படும் என அறிந்துகொண்டேன். அந்த வேளைகளில் அங்கிருக்கும் அனைவருக்கும் பொதுவாக ஒரேயொரு லைஃபோய் சவர்க்காரம் தரப்படுவதும் வழமையாம். ஆனால் சிறைச்சாலையைக் கழுவுவது அநேகமாக மாதத்திற்கு ஒருமுறை மட்டும்தான். இன்று புத்தாண்டாகையால் கழுவுதலும் குளித்தலும் ஏககாலத்தில் நடைபெறுகின்றது என அறிந்தேன்.

இதில் வேடிக்கையான விடயம் என்னவெனில், நான் உள்ளே போன சமயம் குளித்துக் கொண்டிருந்த அனைவரும் உடம்பில் எவ்வித துணிகளுமின்றி பரிபூரண நிர்வாணமாகக் குளித்துக் கொண்டிருந்ததுதான். எனக்கு அவர்களைப் பார்க்கக் கூச்சமாக இருந்தது. ஆனால் அவர்களோ அதைப்பற்றி எவ்வித கவலையும்படாமல் ஆரவாரமாகக் குளித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் அவ்வாறான நிலையில் குளிக்க வேண்டிய இக்கட்டான நிலைக்கு உள்ளானமைக்குக் காரணம், அவர்கள் அணிந்துவந்த உள்ளாடைகளையோ கொண்டு வந்த துவாய்களையோ புலிகள் பறித்தெடுத்துவிட்டு, சிறைக்கைதிகளுக்கான தமது சாரத்தை மட்டும் உடுக்கக் கொடுத்திருந்தார்கள்.

அந்த சாரங்கள்கூட ஒருவர் மாறி ஒருவர் கட்டி சகிக்க முடியாத நாற்றத்துடனேயே இருந்தன. புதிதாக வரும் ஒருவர் அதை உடுத்தால், உடனடியாக கடி சொறி நோய்வரும். எனக்கு அவ்வாறு வந்து, எனது உடம்பின் முழுத்தோலும் பூரணமாக உரிந்தது என்றால், நிலைமையை விளங்கிக் கொள்ளலாம். சிலவேளைகளில் அந்த சாரங்களை சிலர் தண்ணீரில் அலசுவதுண்டு. அவ்வாறு அலசினால் அந்த ஈரத் துணியை உடம்பில் சுற்றி உடம்பு வெப்பத்தில்தான் அதைக் காயவைக்க வேண்டும்.

(துன்பியல்கள் தொடரும்...)



# பாப்பா முரசு

இப்பகுதிக்கு சிறுவர்கள், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

## வாரம் ஒரு திருக்குறள்



### பேதைமை

**பேதைமையு ளெல்லாம் பேதைமை காதன்மை**
**கையல்ல தன்கட் செயல்.**

ஒருவனுக்கு பேதைமை எல்லாவற்றிலும் மிக்க பேதைமை, தன் ஒழுக்கத்திற்குப் பொருந் தாததில் தன் விருப்பத்தைச் செலுத்துவதலாகும்.

குறள்:832

## மின்சார மீன்!



எலக்ட்ரிக் ஈல் என்ற மீனினம் மின்சாரத்தை உண்டு பண்ணுகின்றன. தென்அமெரிக்க அமேசன் நதி மீன் வகையான ஈல் உலகிலேயே அதிக மின் சாரத்தை உண்டு பண்ணும் உயிரினம் ஆகும். சுமார் 600 வோல்ட் மின்சாரம் ஒரு மீனில் இருக்கும். இந்த மீன் ஒரு அடி அடித்தால் ஒரு பெரிய குதிரைகூட சுருண்டு விழுந்துவிடும். மனிதனைப் பொறுத்தவரை அதற்கு மிக அருகில் சென்றாலே மரணம்தான். இப்படி இருந்தபோதும் ஒரு எலக்ட்ரிக் மீனின் மின்சாரம் மற்றொரு ஈல் மீனை ஒன்றும் செய்வதில்லை!



## கண்டுபிடியுங்கள்

இந்தப் படத்திற்குள் பல விலங்குகள் ஒளிந்திருக்கின்றன. அவை என்னென்ன என்று கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

## 'பட்டம்' கொடுத்தவர்கள்...



- காந்திஜிக்கு மகாத்மா பட்டம் கொடுத்தவர் தாகூர்.
- தாகூருக்கு குருதேவ் பட்டம் கொடுத்தவர் காந்திஜி.
- கம்பருக்கு கவிச்சக்கரவர்த்தி என்ற பட்டம் கொடுத்தவர் நாதமுனி.
- வ.உ.சி.க்கு கப்பலோட்டிய தமிழன் பட்டம் கொடுத்தவர் ம.பொ.சி.
- உ.வே.சா.வுக்கு தமிழ்த் தாத்தா பட்டம் கொடுத்தவர் கல்கி ரா.கிருஷ்ணமூர்த்தி.
- காந்திஜிக்கு தேசபிதா பட்டம் கொடுத்தவர் சுபாஷ் சந்திரபோஸ்.

## அறிவியல் ஜோக்!

அவர் ஒரு விஞ்ஞானி. உணவை மறந்து தீவிரமாக ஓர் ஆராய்ச்சியில் ஆழ்ந் திருந்தார். அருகில் சென்ற அவரது மனைவி, "சாப்பிட்டு வந்து ஆராய்ச்சியைத் தொடரலாமே!" என்றார்.

"நீ படிக்காத பட்டிக்காடு. விஞ்ஞானத்தைப் பற்றி உனக்கென்ன தெரியும்? போ, அந்தப் பக்கம்..." என்று விரட்டினார் விஞ்ஞானி.

"சாப்பாடு, தண்ணீரை மறந்து அப்படி ஆராய்ச்சி செய்து எதைக் கண்டுபிடிக்கப் போகிறீர்கள்?" என்று கேட்டார் மனைவி.

"எந்தப் பொருளையும் கரைக்கக் கூடிய திரவத்தைக் கண்டுபிடிக்க ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கிறேன்" என்றார் விஞ்ஞானி, பெருமை யுடன்.

"கண்டுபிடிக்கும் திரவத்தை எந்தப் பாத்திரத்தில் ஊற்றி வைக்கப் போகிறீர்கள்?" என்று திருப்பிக் கேட்டார் அந்த மனைவி அப்பாவித்தனமாக...

## அபாயகரமான ஆராய்ச்சி



ஜப்பானை ஒட்டியுள்ள பசிபிக் கடல்பகுதியில், 1200 அடி ஆழத்தில், இராட்சத சிலந்தி நண்டுகள் காணப்படுகின்றன. இவை சுமார் 12 அடி அகலத்தில் கால்களை பரப்பிக்கொண்டு, ஒட்டகச்சிவிங்கியைப் போல் நடந்து பார்ப்பவர்களை பிரமிக்க வைக்கிறது.

இது 4 அடி உயரம்வரை வளர்கிறது. கடலுக்குள் ஆராய்ச்சி செய்யும் ரோவர் என்ற நீர்மூழ்கிக் கருவிகள் மூலம் இந்த நண்டுகளை ஆராய்ச்சிக்காகப் பிடிக் கின்றனர். இந்த இராட்சத சிலந்தி நண்டுகள் 50 ஆண்டு காலம்வரை உயிர் வாழ்கின்றன. இது கடல் விபத்தில் இறந்துபோன மனிதர்களையும் உணவாக உட்கொள்கிறது.

## குறள் பாட்டு

*கல்வி*

*எண்ணென்ப ஏனை எழுத்தென்ப*
*இவ்விரண்டும் கண்ணென்ப*
*வாழும் உயிர்க்கு.*

இரண்டு கண்கள் முகத்திலே
இருந்து ஒளியை விழுங்குது
உலகிலுள்ள பொருட்களை
ஒவ்வொன்றா உணருது

எண்ணும் எழுத்தும் கண்களாய்
மனித வாழ்வில் விளங்குது
வாழ்வை இயக்க இரண்டுமே
தேவையாக உள்ளது.

கேந்திரபுரியை மன்னன் வீரமல்லன் ஆண்டு வந்தான். பக்கத்து நாட்டு மன்னனுக்கு மகேந்திரபுரியை எப்படியாவது கைப்பற்றிவிடவேண்டும் என்று ஆசை. எனவே அவன் மகேந்திரபுரியின் மீது திடீரென்று போர் தொடுத் தான். வீரமல்லன் இதை எதிர்பார்க்கவே இல்லை. ஆயினும் அவன் அஞ்ச வில்லை. உடனடியாகத் தன் படைவீரர்களை ஆயத்தப்படுத்தினான்.

பக்கத்து நாட்டுப் படையை விட, வீரமல்லனின் படை மிகவும் பெரியது. சிறந்த யானைப் படை, குதிரைப் படையுடன் வலிமை மிகுந்த ஆயிரக்கணக்கான வீரர்களும் இருந்தார்கள். அவர்கள் எல்லோரும் மிகச் சிறந்த முறையில் படைப்பயிற்சி பெற்றவர்கள்.

தங்கள் நாட்டிற்காக உயி ரையும் தருவதற்கு எப்போதும் தயாராக இருப்பவர்கள். தங் கள் மன்னன்மீது அளவற்ற அன்பும் அவர்களுக்கு இருந் தது. படைத்தளபதிகளோ, போர்க்கலையில் மிகுந்த மதிநுட்பம் கொண்டவர்கள். அவர்களுக்குத் தெரிந்த போர்த்தந்திரம், உலகில் வேறு எந்த நாட்டுத் தளபதி களுக்கும் தெரிந்திருக்காது.

மகேந்திரபுரி மக்களின் ஒட்டுமொத்த ஆதரவும் வீர மல்லனுக்கு இருந்தது. இந்த நாட்டின் இயற்கை அமைப்பும் நாட்டிற்குப் பாதுகாப்பான முறையில் அமைந்திருந்தது. சுற்றிலும் மலைகள் சூழ, ஒரு புறத்தில் மட்டும் திறந்த சம வெளி இருந்தது. எதிரிப் படைகள் அந்த வழியாகத்தான் உள்ளே நுழையவேண்டும்.

மகேந்திரபுரியின் தளபதி கள் அந்த நுழைவுப் பகுதியி லேயே எதிரிப் படையை முறியடிக்கத் திட்டம் வகுத்தனர். இத்தகைய காரணங்களால் வீரமல்லன் மிகவும் நம்பிக்கையுடன் இருந்தான். நூறு சதவிகிதம் வெற்றி உறுதி செய்யப்பட்டு விட்ட மகிழ்ச்சி அவனுக்கு. வலிய வந்து தோற்றுச் சிறைபடப் போகும் பக்கத்து நாட்டு மன்னனை நினைத்து அவனுக் குப் பரி தாபமாக இருந்தது.



## ஆணியால் வந்த ஆபத்து

போர் தொடங்கியது. மகேந்திரபுரியின் படைவீரர் களைவிட, எதிரிப் படையின் வீரர்கள் எண்ணிக்கையில் மிகவும் குறைவாகவே இருந் தார்கள்.

எனவே மகேந்திரபுரி வீரர் கள் அதிகமாகச் சிரமப்படத் தேவையில்லாமல் சாதாரண-மாகவே போராடினார்கள். இன்னும் சற்றுநேரத்தில் எதிரிப் படை மண்டியிடும் என்ற நிலை வந்தது. மகேந்திர புரியின் மன்னன் வீரமல்லனும், எதிரி நாட்டு மன்னனும் குதிரை யில் அமர்ந்தபடி நேருக்கு நேராக வாட்சண்டை புரிந்தார் கள். இந்த நேரத்தில் ஒரு நிகழ்ச்சி நடந்தது.

வீரமல்லனின் குதிரையின் கால்களில் அடிக்கப்பட்டிருந்த லாடங்களில் ஒன்றில் ஒரு ஆணி கழண்டுவிழுந்துவிட்டது. எனவே லாடம் தளர்வாக ஆடியது. இதனால் குதிரை யால் சரியாக நிற்கவோ ஓடவோ முடியவில்லை. ஒரு கட்டத்தில் லாடம் திடீரென்று கழண்டு விழுந்ததால் நிலை தடுமாறிய குதிரை கீழே விழுந்தது. வீரமல்லன் குதிரையின் அடியில் சிக்கிக்கொண்டான். அந்த நேரம்பார்த்து அவனைக் கைது செய்தான் எதிரி நாட்டு மன்னன்.

மன்னன் கீழே விழுந்ததால் பெரும் பதற்றமடைந்த படை வீரர்களின் கவனம் சிதறியது. அவர்கள், போர் நடந்துகொண்டிருக்கிறது என்பதையும் மறந்தனர். மன்னனைக் காப்பாற்ற, எல்லோரும் மன்னனைச் சுற்றிக் குவிந்தார்கள். இந்த வாய்ப்பைப் பயன் படுத்திக் கொண்ட எதிரிப் படை, ஒரே இடத்தில் குவிந்திருந்த மகேந்திரபுரி வீரர்களைச் சுலபமாக முற்றுகையிட்டு வென்றனர்.

மிகவும் எளிதாக வெல்லக்கூடிய எல்லா வாய்ப்புகளும் இருந்தாலும், இந்த வகையில் மகேந்திர புரி பரிதாபமாகத் தோற்றது. எல்லாம் அந்த மிகச் சிறிய ஆணியால் வந்தது. போரில், தனக்கான வெற்றி உறுதி செய்யப்பட்டது என்று இறு மாப்புடன்இருந்த வீரமல்லன், குதிரையின் லாடம் சரியாக இருக்கிறதா என்று பார்த் திருக்கலாம்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்



**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 26.11.2012

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 966**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:167,
யாழ்ப்பாணம்.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 964**

பரிசுக்குரியவர்:
**சி.ஸ்ரெபானி, முதலைகுத்தி**
**உயிலங்குளம், மன்னார்.**

பாராட்டுக்குரியவர்கள்
01. நா.யதுசன், வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.
02. பா. சாருணி, கோப்பாய் சந்தி, கோப்பாய்.
03. A. டனுசன், பள்ளிமுனை, மன்னார்.
04. யோ.சிவரஜினி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி.
05. J.அபிசன், அம்பாள் வீதி, எழுத்தூர், மன்னார்.
06. ச.சானுஜன், பிரதான வீதி, நுவரெலியா.
07. எஸ்.பிரதாப், பசறை வீதி, பதுளை
08. எவ்.ஆர்.ஷபா, புதுச்செட்டித்தெரு, கொழும்பு -13

# கொள்ளை ராணி பூலான்தேவி



## திருப்பங்கள் நிறைந்த பூலானின் வாழ்க்கை வரலாறு

எல்லோருக்கும் - அவள் பயங்கரக் கொள்ளைக்காரி, படு பயங்கரக் கொலைகாரி என்றுதான் தெரியும். அவள் அதுவும் ஒரு பெண் - ஏன் அப்படி மாறினாள் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? பூ ஒன்று புயலான கதை. ஏற்கனவே முரசில் புரட்டப்பட்ட இப்பக்கங்கள், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் புரட்டப்படுகின்றன.

131

**பூலானை** நிர்வாணமாக்கி விட்டு ஸ்ரீராமும், குசுமாவும் பல்லைக்காட்டி இளித்துக் கொண்டிருந்தபோது அவர்கள் பக்கத்தில் நின்றவள் இவள் தான்.

பூலான் கூனிக்குறுகிக் கொண்டு, நெஞ்சு வெடித்துவிடும் போல பீறிட்ட துயரத்தை அடக்கிக் கொண்டு தவித்தபோது "தேவடியாள்" என்ற சொல்லால் எறிந்தவள் இவள்தான்.

> **"தெருத் தெருவாக உங்களால் நாய்போல நடத்தப்பட்ட பூலான்தேவி. அப்படி என்னடா செய்தேன் உங்களுக்கு? பாருங்களடா இவளை, இவள் உங்கள் சாதிதானே? இவளிடம் இல்லாதது எதையடா என்னிடம் கண்டு சிரித்தீர்கள்? உங்கள் பெண்டாட்டிகளிடமும், உங்களைப் பெற்றவர்களிடமும் இல்லாத எதை-யடா என்னிடம் பார்த்தீர்கள்? நாய்க்கு பிறந்தவர்களா நீங்கள்? தாய்க்கு பிறக்கவில்லையாடா நீங்கள்? கொல்லுங்களடா நாய்களே?"**

அந்த நினைவு வந்ததும் பூலானுக்கு தன் முன்பாக நிற்பவள் பெண்ணாகவே தெரியவில்லை.

அவளது கூந்தலைக் கொத் தாகப் பிடித்து இழுக்க, அவள் அப்படியே முன்நோக்கி கவிழ்ந்து "ஐயோ!" என்று கத்தினாள்.

பூலானின் முழங்கால் அவள் தாடையில் இடியாய் மோதியது.

"ராட்சசி!" என்று திட்டிக் கொண்டே அவளைக் கீழே போட்டு மிதித்தாள். குறுக்கே வந்த அவள் கணவனை மான் சிங் பின்புறமாய் உதைத்து அவனைக் குப்புற விழுத்தினான்.

கணவனும், மனைவியும் கையெடுத்துக் கும்பிட்டுக் கதறிக் கொண்டிருந்தார்கள்.

பூலான் அவளின் சேலையை உருவிவீசினாள். அவளின் ரவிக் கையை ஒரே வீச்சில் கிளித் தெறிந்தாள்.

பூலானின் கோபத்துக்குத் தீனி போடுவதுபோல ஒருவன் ஓடிவந்து "இவன்தான் பொலிசாரக்குத் தகவல் கொடுப்பவன். உயிரோடு விட்டுவிடாதீர்கள்!" என்று கூறி-னான்.

அந்தத் தகவலைக் கூறியவன் பாபா கோஷ்டிக்கு நம்பகமான ஆள். அந்தக் கிராமத்தில் இருந்து தகவல் கொடுப்பவன். பண்ணையாளர்களிடம் கூலிவேலை செய்பவன்.

அவன் சொன்னதும் மான்சிங், 'இவன் பொய் சொல்லமாட்டான்!" என்றான் பூலானிடம்.

அவர்கள் இருவரையும் கயிற்றால் கட்டி வீட்டுக்கு வெளியே இழுந்து வந்தார்கள்.

வீடுகளுக்குள் பதுங்கிக் கொண்டும், பயந்துகொண்டும் இருந்த பண்ணையார்கள் பலரை வீடுகளுக்கு வெளியே அழைத்து வரச் சென்னாள் பூலான்.

ஒரு கூட்டம்போல பண்ணையார்கள் கூடிவிட்டனர். எல்லோர் முகங்களிலும் கிலி பிடித்திருந்தது.

தங்களில் யாரைச் சுட்டுத் தள்ளப் போகிறார்களோ என்ற மரணபயம் அவர்கள் மனதைக் குடைந்து கொண்டிருந்தது.

ஸ்ரீராமின் சகோதரி அரை நிர்வாணமாக அழுது புலம்பிக் கொண்டிருந்தாள். அவள் தாடை வெடித்து இரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது.

அவள் கணவனின் தலையில் இருந்தும், மூக்கில் இருந்தும் வழிந்தோடியது.

பூலானின் குரல் என்றுமில்லாத கம்பீரமாக எழுந்து உயர்ந்து ஒலித்தது.

"நான்தான் பூலான் தேவி உங்கள் சாதியால் வஞ்சிக்கப் பட்ட அதே பூலான் தேவி.தெருத் தெருவாக உங்களால் நாய்போல நடத்தப்பட்ட பூலான்தேவி. அப்படி என்னடா செய்தேன் உங்களுக்கு? பாருங்களடா இவளை,இவள் உங்கள் சாதிதானே? இவளிடம் இல்லாதது எதையடா என்னிடம் கண்டு சிரித்தீர்கள்? உங்கள் பெண்டாட்டிகளிடமும், உங்களைப் பெற்றவர்களிடமும் இல்லாத எதையடா என்னிடம் பார்த்தீர்கள்? நாய்க்கு பிறந்தவர்களா நீங்கள்? தாய்க்கு பிறக்கவில்லையாடா நீங்கள்? கொல்லுங்களடா நாய்களே?"

கூட்டம் தலை குனிந்தது.



தங்கள் சாவுகள் உறுதியாகி விட்டதை நினைக்க அவர்கள் உடல்கள் நடுங்கத் தொடங்கின. பெண்கள் கை கூப்பி அழுது தங்கள் கணவன்மாரின் உயிருக்காக மன்றாடத் தொடங்கினார்கள்.

"அழுங்கள்! அன்று சிரித்தீர்கள் அல்லவா? அழுங்களடி அழுங்கள்! உங்கள் புருசன்மாரை அன்று மட்டும் இழுத்துக் கொண்டு போகத் தெரியவில்லையே. 'அவளும் உங்களைப் போலப் பெண் தானடா போடிப் பயல்களே!' என்று கழுத்தில் பிடித்து இழுத்துப் போனீர்களாடி? இப்போது அழுகிறாள்களாம், எண்டி உங்களுக்கு... இல்லை?...இல்லையா... எதையடி பார்க்கவிட்டீர்கள்...? இந்தப் பண்ணையார் நாய்களை?"

பூலான் வெறிகொண்டவள் போல கத்திக் கத்திக் கேட்டாள்.

கடைசியாகச் சொன்னாள்: "பிழைத்துப் போகவிடுகிறேன். ஆனால் இனிமேல் யாராவது ஒரு பெண்ணுக்கு இந்தக் கிராமத்தில் உங்கள் சாதித் திமிரைக் காட்டினீர்கள், நாய்களே! இந்தக் கிராமத்தையே அழிப்பாள் இந்தப் பூலான்தேவி!"

ஸ்ரீராமின் சகோதரிக்கும், அவள் கணவனுக்கும் தண்டனை கொடுக்கப் போவதாகவும் அறிவித்தாள் பூலான்.

"பொலிசாருக்குத் தகவல் கொடுப்பவன் இவன். ஸ்ரீராமின் இரத்தம் இவள். இரண்டு பேரும் உங்கள் கண்முன்னால் துடிதுடித்துச் சாகப் போகிறார்கள். நீங்கள் இங்கே காணப்போகும் காட்சியைச் ஸ்ரீராமுக்கும் லாலா ராமுக்கும் சொல்லவேண்டும். ஒவ்வொன்றாகச் சொல்லிச் சொல்லிக் காட்டவேண்டும்!"

கூறியபடியே பூலான் ஸ்ரீராமின் சகோதரியைச் சுட்டாள்.

'டுமீல்'

பின்னர் அவளுடைய கணவனைச் சுட்டாள்.

'டுமீல்'

"அந்த நாய் ஸ்ரீராம் உண்மையான ஆம்பிள்ளையாக இருந்தால் என்னை, இந்தப் பூலான் தேவியை நேருக்கு நேர் சந்திக்கச் சொல்லுங்கள்!... அவனுக்கு... மிஞ்சாது..."

லொறிகளில் ஏறி அனைவரும் புறப்பட்டனர்.

மான்சிங்குக்குத்தான் கண்ட காட்சியை நம்பமுடியாமல் இருந்தது. அந்தப் பிரமிப்புடன் அன்றிரவு பூலானை நெருங்கினான்.

பாபாவின் கட்டளைப்படி பூலானுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுப்பதற்காகவும், அடுத்துச் செய்யவேண்டிய நடவடிக்கைகள் பற்றிப் பேச வேண்டியிருந்ததால் பேசவும்தான் போய் வந்திருக்கிறான்.

ஆனால், இப்போது பூலான் மேல் தனக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு வித ஈர்ப்பால் இழுத்துச் செல்லப்படுகிறான்.

மான் சிங்கைப் பெண்கள் விடயத்தில் சைவக் கொக்கு என் றும் சொல்லிவிட முடியாது. ஆனால் எந்தப் பெண்ணையும் அவள் விருப்பம் இல்லாமல் நெருங்கக் கூடாது என்பது பாபாவின் கட்டளை. மான்சிங்குக்கம் அக்கொள்கையில் உடன்பாடு இருந்தது.

சில கிராமங்களின் தங்கி இருக்கும்போது மான்சிங்கின் விருப்பத்திற்கு இணங்கிய பெண்களும் இருக்கிறார்கள். தாமாக மான் சிங்கை நாடி வந்த பெண்களும் உண்டு.

திருப்பங்கள் தொடரும்...

மருத்துவம்

# சத்துக்கள் நிறைந்த பச்சை வாழைப்பழம்



வாழைப்பழம் சாப்பிடுவதால் அது நம் உடம்பில் நோய் நீக்கும் மருந்தாக செயல்படுகிறது. விஞ்ஞானிகளும் சத்துணவு நிபுணர்களும் உலகின் மிக உயர்ந்த தரமான உணவு வாழைப்பழம்தான் என்கிறார்கள். வாழைப்பழத்தில் உள்ள விற்றமின் சி பல் ஈறுகளையும் எலும்புகளைப் பிணைக்கும் தசை நார்களையும் உறுதியுடன் இருக்க உதவுகிறது. இரத்தத்தில் சிவப்பு அணுக்கள் உருவாக விற்றமின் ஏ- யையும் உடல் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இதற்கு விற்றமின் சி உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியை உருவாக்கிக் கொடுக்கிறது.

மக்னீசியம், பொட்டாசியம், சோடியம், பொஸ்பரஸ் போன்ற உப்புக்கள் வாழைப்பழத்தில் தாராளமாக இருப்பதால் இரத்த ஓட்டம் தங்குத் தடையின்றிச் சீராக இருக்கவும். முக்கியமாக இரத்தக் கொதிப்பு ஏற்படாமலும் பாதுகாத்துவருகிறது. நாம் தினமும் சாப்பிடும் இரண்டு வாழைப்பழங்கள் இரத்தக் கொதிப்பை எளிதில் கட்டுப்படுத்தும்.

நாம் சாப்பிடும் உணவில் பொட்டாசியமும் சோடியமும் இருந்தால் தான் நம் உடலில் உள்ள நெகிழ்ச்சிப் பொருள்கள் சம நிலையில் இருக்கும். பொட்டாசியம் உப்புக் குறைந்தால் இரத்த ஓட்டத்தில் தடை ஏற்படும். நாம் சாப்பிடும் அனைத்துப் பொருள்களிலும் சோடியம் உப்பு இருக்கிறது. ஆனால், பொட்டாசியம் இல்லை. இந்தக் குறையை தினமும் ஒரே ஒரு வாழைப்பழம் சாப்பிட்டு வருவதன்மூலம் நீக்கிவிடமுடியும்.



# காதுகளை சுத்தம் செய்யலாமா?

வேக்ஸ் எனப்படும் திரவப்பொருள் பொதுவாக அனைவரின் காதுகளிலும் இருக்கும். இது காற்றில் உள்ள வாயுக்களினால் ஒரு சிலருக்கு திடப்பொருளாக மாறி கறுப்பு அல்லது பழுப்பு நிறத்தில் தங்கிவிடுகிறது. குளிக்கும்போது இயல்பாகவே வெளிவந்து விடுகிறது.

ஒரு சிலருக்கு இது வெளிவராமல் கட்டி போன்று ஆகிவிடுகிறது. இவர்கள் மட்டும் மருத்துவர்களை அணுகி சுத்தம் செய்து கொள்ளவேண்டும். இதனை தாமாக சுத்தம் செய்வது காதுகளின் உட்பகுதிகளில் பாதிப்புகளை ஏற்படுத்திவிடுகிறது. காதுகளில் சோப்பு தண்ணீர், உடலில் தேய்த்துக் குளிக்கும் மா போன்றவை போகாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

# மழை காலத்தில் தண்ணீரை காய்ச்சிக் குடியுங்கள்

தற்போது பருவமழை தொடங்கிவிட்டது. இந்த சமயத்தில் பெரும்பாலும் குடிநீர் மூலம் பரவும் நோய்கள்தான் அதிகம் தாக்குகிறது. அதற்கு அடுத்து, நுளம்பு மற்றும் பூச்சிகளால் ஏற்படும் நோய். மழைநீரும், சாக்கடை நீரும் கலந்து ஓடும் இடங்களில் நடந்து செல்லும்போதும் வைரஸ் கிருமிகள் பரவி நோய்கள் ஏற்படும்.

சுகாதாரம் இல்லாத குடிநீர் மூலம் கொலரா, வாந்திபேதி, மஞ்சள்காமாலை ஆகிய நோய்கள் ஏற்பட அதிக வாய்ப்புள்ளது. இது எல்லா வயதினருக்கும் வரும். மழை நீர் தேங்கிய பகுதியில் உருவாகும் நுளம்புகள் மூலம் மலேரியா, டெங்கு, சிக்குன்குனியா, மூளைக்காய்ச்சல், யானைக்கால் ஆகிய நோய்கள் வரும். நுளம்புகள், டெங்கு நோய் குழந்தைகளை அதிகம் பாதிக்கும். நோய்கள் நம்மை தாக்காமல் இருக்க எளிதான சுகாதார நடைமுறைகளை கடைப்பிடித்தாலே மழைக்கால நோய்கள் வராமல் தடுக்கலாம்.

சில கிருமிகள் மருந்துகளுக்கு கட்டுப்படாதவைகளாக உள்ளது. அதனால் தலைவலி, காய்ச்சல், சளி, இருமல் ஏற்பட்டால் உடனே டாக்டரிடம் செல்ல வேண்டும். காய்ச்சல், சளி, இருமல் இரண்டு, மூன்று நாட்களுக்கு மேல் நீடித்தால் ஆரம்பக் கட்டத்திலேயே இரத்தம், சிறுநீர் பரிசோதனைசெய்து என்ன கிருமி தாக்கியுள்ளது என்பதை உடனே தெரிந்துகொண்டு, அதற்கு தகுந்தபடி சிகிச்சை அளிக்கவேண்டும்.

குழந்தைகளுக்கு மழை காலத்தில் கதகதப்பான ஆடை-களையே அணிவிக்க வேண்டும். மழை காலத்தில் குடிக்கும் தண்ணீரை, காய்ச்சி வடிகட்டி குடிக்க வேண்டும். கூடுமான-வரை பாடசாலைகள், அலுவலகங்களுக்கு வீட்டில் காய்ச்சிய தண்ணீரையே எடுத்துச்சென்று குடித்தால் மழைகால நோயில் இருந்து நம்மை பாதுகாத்துக்கொள்ளமுடியும் என்கின்றனர் மருத்துவர்கள். வெளியே சென்று வீடு திரும்பியதும் கை, கால்களை நன்கு சோப்பு போட்டு கழுவவேண்டும். செருப்பு, சப்பாத்து ஆகியவற்றை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்.




# வருங்கால சந்ததிய
# விட்டு போவது எ

ப்ளூ ஸ்டார் ஸ்டூடியோஸ் படநிறுவனம் சார்பாக உருவாகும் படம் போரிட பழகு. இந்த படத்தில் மாஸ்டர் மகேந்திரன் நாயகனாகவும், நீலாம்பரி என்ற தமிழ்ப்பெண் நயாகி யாகவும் நடிக்கின்றனர். இவர்களுடன் ரியாஸ்கான், மனோபாலா, கிரேன் மனோகர் ஆகியோரும் நடிக்கின்றனர், புதுமுகம் ஜெயக்குமார் என்பவர் முக்கியமான கதாபாத்திரத்தில் அறிமுகமா- கிறார்.

படம் குறித்
வருங்கால சந்
என்ன? வறண
பூமியையும்தா
தோண்டி வாழ
நாமே விலை
ஆற்றுமணல
டிரைவராக வே
இவரின் காதல
சுற்றுச்சூ




## நடனப்புயலாக மாறுகிறார் சின்னக் கலைவாணர்

ஆர்.கே.ஸ்டூடியோஸ் பட நிறுவனம் அதிக பொருட்செலவில் தயாரிக்கும் படம் மச்சான். இந்த படத்தில் கருணாஸ் நாயகனாகவும், ஷெரீல் பிண்டோ நாயகியாகவும் நடிக்கின்றனர். இவர்களுடன் விவேக், ஷக்தி சிதம்பரம், கோவை சரளா, மயில்சாமி, வெண்ணிற ஆடை மூர்த்தி, பாண்டு, வையாபுரி உட்பட ஏராளமான நடிகர்கள் நடிக்கின்றனர். நீண்ட இடைவேளைக்கு பிறகு தமிழில் ரமேஷ் அரவிந்த் நடிக்கிறார். இப்படத்தின் படப்பிடிப்பு சமீபத்தில் பொள்ளாச்சி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் நடைபெற்று கொண்டிருக்கிறது.

இப்படத்தில் வரும் டூயட் பாடலில் கருணாஸ்- ஷெரீல் பாண்டோ இருவரும் ஆடிப்பாட, நடிகர் விவேக் கற்பனை யில் தன்னை மின்சார கனவு பிரபு தேவாவாகவும், ஷெரீல் பிண்டோவை காஜ லாகவும் நினைத்து ஆடும் காட்சிகள் முழு வதும் நகைச் சுவையாகப் படமாக்கப்பட் டுள்ளது.

இப்படத்தை பார்த்து பிரமித்து போன அய் யப்பன், தனது தேவர் பிக் சர்ஸ் சார்பில் உலக மெங்கும் வெளியிடு கிறார்.



## குதிரையேற்றம் செய்கிறார் அனுஸ்க

தமிழ்நாட்டில் ராணி மங்கம்மா, வடநாட்டில் ஜான்சி ராணி போன்று ஆந்திராவில் குறிப்பிடத்தக்க மகாராணி ருத்ரமாதேவி. இவர் கி.பி.1259ஆம் ஆண்டு முதல் 1295ஆம் ஆண்டுவரை வாராங்கல்லை தலைநகராக கொண்டு ஆண்ட காகதீர் வம்சத்து அரசி. இவரது வாழ்க்கை வரலாற்றை தெலுங்கு இயக்குநர் குணசேகரன் திரைப்படமாக எடுக்க முடிவுசெய்தார்.

இதற்காக கடந்த 10 ஆண்டுகளாக உழைத்து திரைக்கதையை வடிவமைத்துள்ளார். இதில் ருத்ரமாதேவியாக யாரை நடிக்க வைக்கலாம் என்று தீவிரமாக ஆலோசித்து இறுதியாக அனுஷ்காவை தெரிவு செய்துள்ளாராம். பெரிய பட்ஜெட்டில் தயாராகும் இந்தப் படத்துக்கு அனுஷ்கா 5 மாதங்கள் கால்ஷீட் கொடுக்க ஒப்புக் கொண்டுள்ளாராம். அதுமட்டுமன்றி, இந்தப் படத்துக்காக குதிரையேற்றம், வாள் சண்டை ஆகியவற்றை அனுஷ்கா கற்கப் போகிறாராம். இந்த படம் தெலுங்கு, இந் தமிழ் என மூன்று மொழிகளிலும் 3டி தொழில்நுட்பத்தில் தயாராகிறத

## பொறுமை இழந்தார்

நடிகை திரிஷாவும் , தெலுங்கு நடிகர் ராணாவும் நெருங்கிய நண்பர்கள். இவர்கள் இருவரும் பல்வேறு இடங்களுக்கு ஜோடியாக சென்றனர். வெளிநாட்டுக்கும் சென்றிருக்கிறார்கள். இதையடுத்து இருவரும் காதலிக்கிறார்கள். விரைவில் திருமணம் செய்துகொள்ள உள்ளனர் என்று திரையுலகில் கிசுகிசு பரவியது.

இதை த்ரிஷா மறுத்துவந்தாலும் இருவரின் நட்பும் தொடர்ந்தது. சமீபத்தில் த்ரிஷாவின் தந்தை காலமானார். த்ரிஷா வுடன் நடித்த நடிகர்கள் யாரும் நேரில் வந்து அஞ்சலி செலுத்தவில்லை. ராணா மட்டும் நேரில்வந்து ஆறுதல் கூறியதுடன் இறுதிச்சடங்கு நடக்கும் வரை உடனிருந்தார்.

இதை தொடர்புபடுத்தி செய்திகள் வெளியாகின. இதை பார்த்து கோபமடைந்த த்ரிஷா கூறுகையில், எனக்கும் ராணாவுக்கும் நட்புதான் உண்டு. என்னைப்பற்றி அவருக்கு எல்லாம் தெரியும். 10 வருடமாக இருவரும் பழகிவருகிறோம். வேறு எந்த உறவும் இல்லை. இதை பலமுறை சொல்லியும் மீண்டும்மீண்டும் காதலிப்பதாக ஊடகங்களில் எழுதுகிறார்கள் என்றும் இதை நிறுத்திக்கொள்ள வேண்டும் எனவும் கூறியுள்ளார்.



# தியினருக்கு என்ன?

குறித்து இயக்குநர் சேகர் பாரதி கூறுகையில்,
ால சந்ததியினருக்கு நாம் விட்டுவிட்டு போவது
வறண்ட பாலைவனத்தையும், நீர் இல்லா
யும்தான். ஆற்றுமணலை ஆழமாகத் தோண்டித்,
டி வானுயர மாளிகை கட்டுவது என்பது விபரீதத்தை
விலைகொடுத்து வாங்குவதற்கு சமம்.
மணல் மாபியா தலைவன் ரியாஸ்கானிடம் லொறி
ாக வேலை செய்பவர் மாஸ்டர் மகேந்திரன்.
காதலி நீலாம்பரியோ இயற்கை மீதும்,
ற்றுச்சூழல் மீதும் அதிக அக்கறை கொண்டவள்.
இயற்கையின் அதிசயங்களை அவனுக்கு புரியவைத்து, மணல் தாதாவுக்கு எதிராக அவனை உருவாக்கி வெற்றி கொள்வதுதான் 'போரிட பழகு' படத்தின் கதை.

படப்பிடிப்பு, காஞ்சிபுரம் மற்றும் அதனை சுற்றியுள்ள இடங்களில் நடைபெற்று கொண்டிருக்கிறது என்று தெரிவித் துள்ளார்.





சந்திரா

## தமிழுக்கு வருகிறார் பிரபல இந்தி நடிகை

இயக்குனர் கௌதம்மேனனின் Photon Kathaas நிறுவனத்தின் சார்பில் 'தமிழ் செல்வனும் தனியார் அஞ்சலும்' என்ற படம் தயாராகிறது. இப்படத்தில் ஜெய் நாயகனாக நடிக்கிறார். இதில் நாயகியாக முதலில் அனன்யா தான் நடிப்பார் என்று கூறப்பட்டாலும், தமிழ்- தெலுங்கு என இரு மொழிகளிலும் தயாரிக்கப்படுவதால் அவருக்கு பொருத்தமான வேடமாக இருக்காது என்று கருதி, வேறு ஒரு கதாநாயகியை தேடினர் படக் குழுவினர்.

இறுதியாக, ஜெய்க்கு ஜோடியாக இப்படத்தில் இப்போது பிரபல ஹிந்தி நடிகை யாமி கௌதம் நடிக்க உள்ளார். இம்மாத இறுதியில் இப்படத்தின் படப்பிடிப்பு ஆரம்ப மாக உள்ளது. பாடகர் கார்த்தியின் இசையமைப்பில், ஓம் பிரகாஷ் ஒளிப்பதிவில், ராஜீவன் கலை வண்ணத்தில், திலிப் சுப்புராயன் சண்டைக் காட்சிகளை படமாக்க, பிருந்தா நடனம் அமைக்கிறார்.

## எடை ஒரு தடை இல்லை

'தி டர்ட்டி பிக்சர்ஸ்' எனும் இந்தி படத்தில் கிளாமராக நடித்து பரபரப்பை ஏற்படுத்தியவர் வித்யாபாலன். இப்படத்துக்காக இவர் உடல் எடையை அதிகரித்து குண்டானார். இதையடுத்து 'கஹானி' படத்தில் நடித்தார். இப்படம் திரைக்குவந்து வெற்றி பெற்றது.

இதையடுத்து இப்படத்தின் இரண்டாம் பாகம் இயக்க இயக்குநர் சுஜாய் முடிவு செய்துள்ளார். இதில் மீண்டும் வித்யாபாலனே நடிக்கிறார். இப்படத்திற்காக அவரை உடல் எடையை குறைக்கச் சொல்லியிருக்கிறார் இயக்குநர். ஆனால் தற்போதைக்கு உடல் எடையை குறைக்க முடியாது என்று வித்யாபாலன் கூறியிருக்கிறார்.

இதுபற்றி சுஜோய் கூறுகையில், அடுத்த வருடம் மே மாதம் கஹானி படத்தின் 2ஆம் பாகம் படப்படிப்பை தொடங்க உள்ளேன். அதற்கு முன்னதாக வித்யாபாலனை உடல் எடையை குறைக்கும்படி கூறினேன். ஆனால் அவர் தற்போதைக்கு உடல் எடையை குறைக்கக்கூடாது என்று 'கான்சக்கர்' என்ற படத்தை இயக்கும் ராஜ்குமார் குப்தா-நிபந்தனை விதித்திருக்கிறார்.

தற்போதுள்ள உடல் எடையுடன் வித்யா பாலன் நடித்த பெரும்பாலான காட்சிகள் படமாக்கப்பட்டிருக்கிறது. இந்நிலையில் எடையை குறைத்தால் அது படத்தில் வித்தியாசமாக தெரி யும். எனவே எடையை குறைக்கக்கூடாது என்று நிபந்தனை விதித்திருக்கிறார்.

ஆனால் வித்யாபாலனுக்கு எடை குறைப்பது என்பது பிரச்சினையாக இருக்காது. அவர் இப்படத்தை முடித்துக்கொடுத்துவிட்டு கஹானி 2 படப்பிடிப்புக்கு வருவதற்குள் மெலியமுடியும். எடை குறைப்பது, ஏற்றுவது என்ற இரண்டும் அவரால் எளிதாக செய்யமுடியும் என்றார்.

ஸ்கா

ல.



ஆதலால் காதல் செய்வீர்

. இந்தி
ாகிறது.

## ார் த்ரிஷா





## மீண்டும் வருகிறது அமைதிப் படை

தான் இயக்கிய அமைதிப் படை படத்தை நாகராஜசோழன் எம்.ஏ, எம்.எல்.ஏ என்ற பெயரில் ரீமேக் செய்கிறார் மணிவண்ணன். இப்படத்தில் வாரிசு அரசியலை மையமாக வைத்து கருணாநிதி குடும்பத்தை கிண்டல் செய்து நிறையக் காட்சிகள் இடம்பெற்றிருப்பதாக கூறப்பட்டது. அதனை மணிவண்ணன் மறுத்துள்ளார்.

இதுபற்றி அவர் கூறுகையில், அமைதிப்படை படத்தில் அள்ளக்கை அமாவாசை நாகராஜசோழன் எம்.எல்.ஏ ஆகிறான். அந்த எம்.எல்.ஏ.வின் தகிடுதத்தங்களையும், அவர் செய்யும் காமெடி அரசியலையும் மையமாக கொண்டு இந்தப் படம் உருவாகிவருகிறது. நாகராஜசோழனை இன்றைய அரசியல்வாதியோடு ஒப்பிட்டு பார்த்துக் கொள்ளலாமே தவிர யாரையும் தனிப்பட்ட முறையில் குறிப்பிட்டு கிண்டல் செய்யவில்லை. ஒட்டுமொத்த அரசியல்வாதிகளையும் மையப்படுத்தி இந்தப் படம் அமைந்துள்ளது, என்று தெரிவித்துள்ளார்.

### கொல வெறிகள் மீண்டும்!

உலகையே கலக்கிய 'கொல வெறி' பாடலைத் தொடர்ந்து பிரபல இசையமைப்பாளர் அனிருத்தும் தனுசும் மீண்டும் இணைந் துள்ளார்கள். தனுஷின் தயாரிப்பில் உருவாகும் 'எதிர்நீச்சல்' படத்துக்காகவே இருவரும் கூட்டணி சேர்ந்துள்ளார்கள்.

# தேன் கிண்ணம்



## இயற்கையின் பரிசு!

முழுமதிப் பரப்பின்
முன், கரு வண்டுகள்!
மதியின் குடையாய்
மயிர்த்திரள் முகில்கள்!
மாங்கனித் துண்டுகள்!
மாதுளம் பழங்கள்!
பலாப்பழச் சுளைகள்!
பழுத்த மிளகாய்!
ஒடுங்கிய ஓடைகீழ்!
ஒப்பரும் பொருள்கள்!
இனிய பகுதியில்
இளநீர்க் குரும்பைகள்!
குரும்பை முனைகளில்
குழி தரும் முளைகள்!
அடிப்புறப் பரப்பில்
அழகிதோர் குழி!
இருபுற வரிகளாய்
இயங்கும் அலைகள்!
சிவப்பு வாழையின்
சதைப்புத் தண்டுகள்!
தண்டுகளிடையே
தசை கொள் மேடை!
மேடையை மூடிய
மென்மைப் புதர்கள்!
புதர்களின் மறைவில்
பூம்புனல் ஓடை!
சந்தனக் கட்டியாய்
நீளும் தண்டுகள்!
முடிவில் இருபுற
பளிங்குத் தகடுகள்!
பின்புறவாசலில்
பிண்டக்குன்றுகள்!
இயற்கையின் வண்ண
இதம் கொள் வார்ப்புகள்!
கிளியின் வடிவில்
குயிலின் கானம்!
மயிலின் தோகை!
மலரின் மென்மை!
கமழும் புதுமை!
கண் கவர் செழுமை!.



இபுனு பாஸ்
ஏறாவூர் -03

## பிரிவாற்றாமை

பாலுந்தேனுமாய்
கலந்துரையாடிய குடும்பம்
நாலடி நிலத்துக்காக
பிணக்குற்றுப் பிரிந்தபோது
உனக்குள் நானும்
எனக்குள் நீயும்
என வாழ்ந்த
உரிமையும் உறுதியும்
இனித் தேய்பிறையாகி
விடுமோ?

வேலி போட்ட
வாப்பாவோ
வேறு மாப்பிள்ளைக்கு
மோப்பம் பிடித்தலைகிறார்.
வேதனைத் தீயில்
தினம் வெந்து சாகிறேன்
கூண்டுக் கிளியானேன்!
தூண்டில் புழுவானேன்.
உனக்கும் நான்
தூரமாகிவிட்டேனா?
இனிநான்.........
குலை நடுங்கும்
குமரி இருட்டில்
குறைத் தூக்கத்தில்
அள்ளிச் சொருகிய
கூந்தலோடு அரக்கப் பறக்க
ஓடிவந்துன் முன்னால்
தலை குனிந்து
பெரு விரலால்
தலைப்பினை வரைவேனா?
குடத்து நீரைக் கொட்டி விட்டு
உனை நாடி கிணற்றடிக்கு
ஓடி வந்து தவிப்புத் தாகத்தை
தீர்ப்பேனா?

அஞ்சாத நெஞ்சமிருந்தால்
வேலிதாண்டி வந்தென்னை
அழைத்துச் செல்!



கின்னியா முத்தாலிப்

## எடுகோள்



வெளிநாடுசென்றுவர
விருப்பமான ஆசை
அடுக்கு மாடி கட்டிட
அதீத ஆசை
மனைபொருள் நிரப்பமாக்க
மனம் நிறை ஆசை
மறந்தும் யாரிடமும்
மண்டியிடாத ஆசை
மலை போல் வரும் துயரை
பனிபோல் ஆக்க ஆசை

புறப்பட்டே அதற்காய்
புது நாடு செல்ல ஆசை
புது வீடு செல்லும் மகிழ்வில்
புதுசு புதுசாய் பல ஆசை
உப்பு நீரால் உடல் பசி தீர்த்து
உப்புக் காற்றால் உப்பி
கனவு நனவாக கண்ட
கரை தந்ததுவே அதிர்ச்சி
இருண்ட காட்டை இடித்தழித்தே
இதயம் வலிக்க இட்ட கட்டளைக்கா?
இத்தனை கஷ்டம் கடல் வ ழி பயணம்!
இக்கரைக்கு அக்கரை பச்சை
உண்மையே!!!

உயிர் வாழ உருப்படியாய்
உணர்வதனை உற்று நோக்கி
உயர்வு பெற உறுதுணையாய்
எடுகோளை எடுத்திடுவோம்!

அப்ரா அப்துல் கனீஸ்,
யாழ்ப்பாணம்.

## சதை வியாபாரம்

நவீனத்தின்
நடத்தை மாற்றங்களில்
ஊருக்கொரு கிளை - அதில்
எல்லா விலைகளிலும்
மொத்தமாகவும் ,
சில்லறையாகவும்.

ஆண்மையின் அழைப்புக்கு
அழகான விருந்தோம்பல்
விரும்பிய நேரங்களில்
விரும்பிய டிசைன்களில்.

பரம்பரை தொழிலாமிது
தம்பிள்ளைக்கும் மேலதிக வகுப்பு
தாயே ஒரு குருவாக

ஏகப்பட்ட காசுகள்
எக்கவுண்டில்
எடுத்துச் சுவைக்க நேரமில்லை
வாடிக்கையாளர்களின்
அணிவகுப்பு வாசலிலும்
அறைக்குள்ளேயும்

எனக்குச் சொல்ல
வருத்தமாயிருக்கு
இதுதான் இன்றைய உலகை
வெல்ல பொருத்தமாயிருக்கு.

இது பாதிக்கப்பட்டவள்
கண்ணீர் எழுதிய
வாக்குமூலம்.



ஏ.ஆர்.நவாஸ்,
கிண்ணியா.

## கலைகின்றது வேடம்



உணர்வுகளை தொலைத்த
என்னால்
எப்படி உன்னை உண்மையாக
நேசிக்க முடியும்
உந்தன் மகிழ்வதற்காய் உன்னை
நேசிப்பதாய் வேடம் தாங்குகிறேன்
என் வேடம் ஒருநாள்
கலையும் போது
எப்படி உன்னால் தாங்க முடியும்
அதை யோசித்துத்தான்
இறைவனிடம் யாசிக்கிறேன்
எனக்காக இல்லாவிடினும்
அவளுக்காக எனக்குள்ளும்
ஈரம் கசியவேண்டும்.

ஆஷா, யாழ்ப்பாணம்

## ஈழத்துக் கவிஞர்கள்

### முகமட் ஷிஹார் (மன்னூரான்)



'மன்னூரான்' எனும் புனைபெயரில் எழுதி வருபவர் இளம் கவிஞர். முஹமட் ஷிஹார்.

இவர் மன்னார் மாவட்டத்தில் உப்புக்குளம் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தமிழிலக்கியத் துறையில் மிகுந்த தேர்ச்சியும். ஈடுபாடும் கொண்ட இவர் மாணவப் பருவத்திலேயே கவிதை எழுதுவதில் ஈடுபட்டு பிரகாசிக்கலானார். சிறந்த ஆங்கில ஆசிரியராகப் பணி யாற்றினாலும் தமிழ்மொழியின் மீதுகொண்ட பற்றினால் கவிதை. சிறுகதை. பாடல் இயற்றுதல் போன்றவற்றிலும் அதிக ஈடுபாட்டுடன் திகழ்கின்றார்.

பாடசாலைக் காலத்தில் பேராதனைப் பல்கலைக் கழகத்தினால் அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட மாணவ சாகித்திய படைப்பாற்றல் போட்டிகளில் 1998.1999. 2000. 2001ஆம் ஆண்டுகளில் தொடர்ச்சியாகப் பங்குபற்றி கவிதை. பாடல் இயற்றுதல். சிறுகதை என்பவற்றில் தனது படைப்புக்களுக்காக 1.2.3 ஆம் இடங்களைப் பெற்றுக்கொண்டமை இவரது இலக்கிய ஆற்றலுக்கான தகுந்த சான்றாகும்.

இவரது கவிதைகள் பத்திரிகைகளிலும் ஜீவநதி சஞ்சிகையிலும் வெளிவருதோடு வானொலியிலும் அவ்வப்போது ஒலிபரப்பாவதுண்டு. இவர் 'ஒரு யுகத்தின் சோகம்' என்னும் கவிதைத் தொகுதியையும் வெளியிட் டுள்ளார்.

இசையில் மிகுந்த ஆர்வம் கொண்ட இவர் இனிய குரல்வளம் கொண்ட பாடகராக இருப்பதோடு சிறந்த மேடை அறிவிப்பாளராகவும் திகழ்கின்றார். சிங்களம் உட்பட மும்மொழியிலும் தேர்ச்சிபெற்ற இவர் தற்போது ஆங்கில கவிதைகளையும் மொழிபெயர்த்து எழுதி வருகின்றார்.

**இவரது கவிதைகளில் ஒன்று**

### ஒரு யுகத்தின் சோகம்

மணவாழ்வு மாண்புறவே
மகவொன்று வேண்டுமென்று
தணியாத ஆசைகொண்டு
தவிப்போடு காத்திருந்து
பணமோடு பொருளுந்தாராப்
பாக்கியம் பெற்றோமென்று
கணமொரு யுகமாய்த் தோன்றக்
கருவினில் உருவைத் தாங்கி
நிணமோடு குருதிதன்னை
நித்தமும் உணவாய்த்தந்து
பிணமாகி உயிர்த்து அன்றோ
பிள்ளையைப் பெறுவாள் அன்னை!

பெற்றபின் துயில் மறப்பாள்
பிணி கண்டால் சுகம் துறப்பாள்
உற்றதோர் கல்விகற்று
உயர்வுடன் விளங்க வைக்கப்
பெற்றவன் தானும் ஆங்கு
பெரியதோர் பங்களிப்பான்.
மற்றெல்லாப் பேறும் பெற்று
வாழ்வாங்கு வாழ்கவென்று
தொற்றிய ஆசை கோடி
தொலைந்திட மகனோ – நாட்டின்
வெற்றிக்காய் போர் புரிந்து
வெடிபட்டு மாண்டு போவான்
அற்றதோர் குளமதனில்
அறுநீர்ப்பறவைகள் போல்
சுற்றமும் மற்றுள்ளோரும்
தூரவே விலகினாலும்
உற்றதோர் மகனே அங்கு
உறுதுணைபெற்றோர்க்கென்பர்
பெற்றவர் கடன்கள் தீர்க்கப்
பிள்ளைகள் எங்கே உள்ளார்?
குற்றுயிர் குலையுயிராய்க்
கொடுஞ்சாவுமைந்தர் எய்தப்
பற்றியே வயிறும் நெஞ்சும்
பதறத்தான்பெற்றோருள்ளார்.



முற்றிய கலியுகத்தில்
முடி வென்றால் அழிவுதானோ?
கொற்றவன் இறைவன்தான் – இக்
கொடுமையைத் தீர்த்திடானோ!

யாழ்.ஸைனப்
மன்னார்.

கலாபூஷணம்
கே.எஸ்.ஆனந்தன்.

அத்தியாயம் 07



# 12 சிங்கை மைந்தன் அமரசிம்மன்

அமரசிம்மனின் கரத்திலிருந்த வாள் சுழன்றதைப் பார்த்த அட்டூழியத்தின் தலை கிர்கிர் எனச் சுற்றியது. தனதுவாளை எங்கே, எப்படி அவன் வாளுடன் மோதலாம் எனத் திணறினான். சூரிய ஒளியில் மின்னல் வேகத்தில் சுழன்ற அவனுடைய வாள் அட்டூழியத்தின் ஒரு கன்னத்தில் புள்ளடி போட்டு இரத்தக் கசிவை ஏற்படுத்தியது. மீண்டும் அடுத்த கன்னத்தில்மீண்டும், புஜத்தில்,மார்பில்என்று பல்வேறு இடங்களில் காயங்களை ஏற்படுத்தியதுடன் ஈற்றில் அவனடைய வாளை அந்தரத்தில் பறக்கவிட்டுத் தன்னுடைய இடக்கரத்தால் அவனைத் தாங்கிப் பிடித்துக் கொண்டான் அமரசிம்மன்.

இரு கரத்திலும் இரு வாட்களுடனும் தன் முன்நிற்கும் அமரசிம்மனுடைய தோற்றத்தைப் பார்த்துப் பிரமித்தான் அட்டூழியம். அவன் முன் மண்டியிட்டான்.

"அமரசிம்மா! நீ மகா வீரன்தான்! என் தோல்வியை நான் ஒப்புக்கொள்கின்றேன். என்னைக் கொன்றுவிடு. என்னைக் கொன்றுவிடு" என்று கதறினான்.

"அட்டூழியம்! நான் என்றைக்குமே வாக்குத் தவறமாட்டேன். உன்னைக் கொல்லமாட்டேன். என் கையால் உன்னைக் கொல்ல விரும்பவில்லை." என்றான்.

" நீ சுத்தமான வீரன். என்மீது வாளைப் பாய்ச்சுவதற்கு எத்தனையோ சந்தர்ப்பம் கிடைத்ததும் நீ அதனைத் தவிர்த்துக் கொண்டே போக நான் உணர்ந்துகொண்டேன். என்னை நீ கொல்லமாட்டாய். ஆனால் நான் யாருக்கும் அடிபணிந்து வாழமாட்டேன். இது மட்டும் உறுதி!" என்றான்.

"அட்டூழியம் காலம் கடந்துவிடவில்லை. உன்னை மன்னித்துவிடுகின்றேன். நீ மனிதனாக வாழ்வதற்கு வழிகாட்டுகின்றேன். நீயும் உன் தோழர்களும் திருந்தி வாழ்வதாக இருந்தால் உன்னை விடுதலைசெய்து சுதந்திரமாக வாழ்வதற்கு அனுமதியளிக்கின்றேன்." என்றான்.

"அமரசிம்மா! நீ எதுவும் செய்வாய்! ஆனால் நான் மனிதனாக வாழமுடியாது. வாழவும்மாட்டேன். நீ எனக்கு உயிர்ப்பிச்சை அளிக்கலாம். நான் அதை ஏற்கமுடியாது. நான் எப்படி வாழ்ந்தேன்?அப்படி வாழத்தான் அட்டூழியத்தால் முடியும். உன்னிடம் கை ஏந்தி வாழமாட்டான் இந்த அட்டூழியம். கரடியன் உன்னிடம் சரணடைந்தானா? இல்லையே! நான் என்றைக்கும், எல்லோருக்கும். அடிபணிந்து வாழமாட்டேன். இது சத்தியம்" என்றான்.

"மாரப்பூபதி" என்று அழைத்தான் அமரசிம்மன்.

'எசமான்' என்று ஓடிவந்து வணங்கினான் மாரப்பூபதி.

"இழுத்துச் செல்லுங்கள் இவனை. எல்லைக் காட்டில் காட்டு எறும்புப் புற்றுகளுக்கு நடுவே கட்டையடித்துத் தோல்கயிற்றால் காலையும் கையையும் பிணைத்துவிடுங்கள்.

"உத்தரவு எசமான்"

"நிராயுதபாணிகளான வணிர்களையும், அபலைகளான பெண்களையும் கதறக்கதற கொலை செய்து கற்பழித்தும், கடித்துக் குதறிய உனக்கு இதுவே ஏற்ற தண்டனை. ஒவ்வொரு விநாடியும் நீ செய்த அட்டூழியங்களை நினைத்து நினைத்து தண்டனையை அனுபவித்து மரணத்தையடைவாய். பகுத்தறிவுடைய மனிதனாக உன்னை ஆண்டவன் படைத்தும் நீ பகுத்தறிவற்ற மிருகங்களைவிடக் கொடூரமாய் நடந்துகொண்டாய். பகுத்தறிவற்ற பிராணிகள் உன்னைத் தண்டிக்கட்டும்" என்று கூறிவிட்டு மன்னரின் முன்வந்து மண்டியிட்டு வணங்கினான்.

"அமரசிம்மா! உன்னுடைய நல்லுணர்வுகளைப் புரிந்து கொள்ளாதவர்களுக்கு இதுதான் பொருத்தமான தண்டனை. நீ வருந்தாதே' என்றார் மன்னர்.

"மார்த்தாண்டரே" என்று அழைத்தான்.

"வணக்கம் தளபதியாரே" என்று சிறைக்கூடத் தலைவன் வந்து வணங்கி நின்றான்.

"அட்டூழியத்தின் தோழர்கள் எங்கே?"

"இதோ நிற்கின்றார்கள்" என்று அவர்கள் நால்வரையும் சுட்டிக் காட்டினான்.

அவர்கள் நால்வரும் ஓடிவந்து அவன் காலடியில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்தனர். கதறி அழுது மன்னிப்புக் கேட்டனர்.

"இவர்களைக் காராளனிடம் ஒப்படைத்துவிடுங்கள்" என்று கூறிவிடைபெற்றுச் சென்றான்.

***

"இளவரசியார்! இன்றைய நிகழ்ச்சி பற்றி எதுவும் கூறாமல் வருகின்றார்கள். ஒரு நாணயத்துக்கு இருபக்கம் இருப்பது போல அமரசிம்மனுடைய மனதின் மறுபக்கத்தையும் இன்று பார்த்திருப்பீர்கள். இல்லையா தேவி" என்றார் பெரிய உடையார்.

"அமைச்சர் பெருமானே! தங்கள் உள்வீட்டு விடயங்கள் அயல்நாட்டு இளவரசிக்குத் தெரியாமல் போய்விட்டதால் பொதுவான அபிப்பிராயத்தையே முன்னர் கூறியிருந்தேன். அமரசிம்மன் பற்றி நான் தவறான எடைபோட்டிருந்தமைக்கு வருந்துகிறேன். வெட்கப்படுகின்றேன்" என்றாள்.

[தொடரும்...]

இனத்தின் பெயரால் எந்த ஒரு மனிதரும் இனி சாகக்கூடாது... எந்தக் காரணத்துக்காகவும் இந்தப் பூமியில் போர் நிகழக்கூடாது என்பதுதான். இனத்தின் பெயரால் உயிரை இழந்த கடைசி மனிதர்கள் நாங்களாக இருக்க வேண்டும் என்று நினைத்தேன். ஆனால், இன்றும் இனத்தின் பெயரால் படுகொலைகளும் அழித்தொழிப்புகளும் தொடர்ந்த வண்ணம்தான் உள்ளன. என்னைப் போல எத்தனையோ லட்சம் பேர் பலியாகிக்கொண்டுதான் இருக்கிறார்கள். சாத்தியமாகாத கனவா என்னுடையது? ஹிட்லர்கள் ஒரு போதும் மரிப்பதில்லையோ?

# வதைமுகாமில் ஒரு வண்ணத்துப்பூச்சி!

**அம்மாவும்** அப்பாவும் நண்பர்களிடம் பேசினார்கள். நானும் அக்காவும் புத்தகங்கள், பேனா, பென்சில் போன்றவற்றை எடுத்துக்கொண்டோம். ஒவ்வொருவரும் அணிந்திருந்த உடைகள் மீது மேலும் 2, 3 உடைகளை அணிந்துகொண்டோம். (பெரிய பைகளுடன் சென்றால் எங்களைக் கண்டுபிடித்து விடுவார்கள்!). சிறிது நேரப் பயணத்துக்குப் பிறகு ஒரு பெரிய கட்டடத்துக்கு வந்து சேர்ந்தோம். இது என் அப்பாவின் அலுவலகம்.

இந்த அலுவலகத்தின் மேல் தளத்தில்தான் நாங்கள் இரகசியமாகத் தங்கப் போகிறோம்.

'ஒருநாள் இங்குவர நேரும்' என்று அப்பா ஏற்கெனவே தீர்மானித்து இருந்ததால் உணவு, படுக்கை என்று பல பொருள்களைச் சேர்த்து வைத்திருந்தார். எங்களுடன் அப்பாவின் நண்பர் வோன்ட்டான் குடும்பமும், மருத்துவர் ஒருவரும் தங்கினர். மிகச்சிறிய இடத்தில் 8 பேர் வசித்தோம். இப்போது நாங்கள் தலைமறைவு வாழ்க்கை நடத்துகிறவர்கள். பகல் நேரத்தில் ஜன்னல் திரையை விலக்கிக்கூட வேடிக்கை பார்க்கமுடியாது. அலுவலக நேரத்தில் நாங்கள் எந்த வேலையும் மேலே செய்யக் கூடாது. வேகமாக நடக்கக்கூடாது. பேசக்கூடாது. சிரிக்கக்கூடாது. முக்கியமாக கழிவறையைப் பயன்படுத்தி, தண்ணீரை இறைக்கக் கூடாது.

மொத்தத்தில் நாங்கள் இங்கே இருப்பது அங்கு வேலை செய்யும் சில நண்பர்களைத் தவிர, யாருக்கும் தெரியக்கூடாது. காலை 8 மணிக்குள் எங்கள் வேலைகளை முடித்துக்கொள்ள வேண்டும். மீண்டும் ஏதாவது செய்யவேண்டும் என்றால் உணவு வேளைவரை காத்திருக்க வேண்டும். அந்த ஒரு மணி நேரத்தில் வேகமாக வேலைகளை முடிக்கவேண்டும். மீண்டும் அமைதி. மாலை 5 மணிக்கு மேல் எங்கள் நாள் ஆரம்பமாகும்.

பகல் நேரங்களில் நானும் அக்காவும் பாடம் படிப்போம். சுருக்கெழுத்துப் பயில்வோம். பிரெஞ்சு, டச்சு, ஆங்கில மொழிகள் கற்போம். புராணங்கள், மன்னர்களின் வரலாறுகள் என்று நிறையப் புத்தகங்கள் படிப்போம். வானொலியில் செய்தி கேட்போம். மீதி நேரத்தில் என் நண்பன் கிட்டியிடம் அன்று நடந்த விஷயங்களைப் பகிர்ந்துகொள்வேன். புத்தகங்களின் அருமை; எங்களைப் போல தலைமறைவாக வசிக்கும் மனிதர்களுக்குத்தான் தெரியும்! புத்தகம் இல்லாத உலகை என்னால் கற்பனைகூட செய்ய முடியாது. சனிக்கிழமைதோறும் நண்பர்கள் புத்தகங்கள், உணவுப் பொருள்கள் போன்றவற்றை இரகசியமாகக் கொண்டுவந்து தருவார்கள். அந்த நாளை நானும் அக்காவும் ஆர்வத்தோடு எதிர்பார்த்து காத்திருப்போம்!


ஒரு சிறிய இடத்தில் கருத்து ஒற்றுமை இல்லாதவர்களுடன் சேர்ந்து வசிப்பது சாதாரணமான விஷயம் ஒன்றும் இல்லை. அவ்வப்போது சண்டை சச்சரவுகள் தோன்றும். ஆனாலும், நாங்கள் வெளியே துன்பப்படும் யூதர்களைவிட மகிழ்ச்சியாக இருக்கிறோம். எங்களுக்குள் புத்தாண்டு, பிறந்த நாள், திருமண நாள் போன்ற கொண்டாட்டங்கள் சிறிய அளவில் நடைபெறும். அதில் ஒருவருக்கொருவர் சிறிய பரிசுகளைப் பரிமாறிக்கொள்வோம். (என் அம்மாவின் பிறந்த நாள் பரிசாக ஓர் இனிப்புச் செய்வதற்கு, நான் ஒரு மாதம் சீனியையும் வெண்ணெயும் சாப்பிடாமல் சேர்த்து வைத்தேன்!)

அன்று பீரங்கிகளின் சைரன் ஒலி காதைக் கிழித்தது. வானில் போர் விமானங்களின் உறுமல். என் உடல் நடுங்கியது.

நள்ளிரவு வரை குண்டு வெடிக்கும் சத்தம் கேட்டது. கண்ணீர்விடுவதைத் தவிர என்னால் என்ன செய்ய முடியும்? நாங்கள் இரகசிய அறைக்கு வந்து ஒரு வருடமாகிவிட்டது. எங்கள் நிலைமைதான் மோசமாகிக்கொண்டே வருகிறது. இரண்டாம் உலகப் போரின் விளைவால் உணவுப் பற்றாக்குறை. பொருள்களின் விலை எங்கோ சென்றுவிட்டது. நாங்கள் உணவைச் சுருக்கிக்கொண்டோம். சில நாட்கள் உருளைக்கிழங்கு மட்டும் சாப்பிடுவோம். சில நாள்கள் பயறு உண்போம். நேற்று எங்களுக்குக் காய்கறி கொடுக்கும் நண்பரை இராணுவம் பிடித்துச் சென்றுவிட்டது. இனி காய்கறிகளும் கிடைக்காது. ஒரு சாதாரண ரொட்டி சாப்பிட்டு எவ்வளவு காலமாகிவிட்டது!

என் உடை மிகவும் குட்டையாகி விட்டது. செருப்பு போட முடியவில்லை. குளிருக்கு இதமான கம்பளிகள் இல்லை. எனக்குக் பார்வைக்கோளாறு வந்துவிட்டது. தலைமறைவு வாழ்க்கையில் இன்னொரு சங்கடம்... திருடர்கள் யாராவது கீழ்த் தளத்துக்கு வரும்போது எங்கள் இதயமே நின்றுவிடும். எங்களைக் கண்டுபிடித்துவிட்டால் என்ன செய்வது? தலைமறைவு வாழ்க்கையில் திருடர்களைக் கண்டு அஞ்சத்தான் முடியுமே தவிர, கூப்பாடு போட முடியாது. திருடர்கள் வந்தால் பயம். புதியவர்கள் வந்தால் பயம். கீழே மராமத்துப்பணி செய்ய வந்தால் பயம். சாவதைவிட எப்போது சாவோம் என்று காத்திருப்பது கொடுமையானது.

எத்தனை கஷ்டங்கள் வந்தாலும் மனிதமனம் அதிலிருந்து விடுபடவே எண்ணும். ஆம்... எனக்குள்ளும் சந்தோஷமான விஷயங்கள் நிகழ்கின்றன. பீட்டர்! வோன்ட்டானின் மகன்தான் பீட்டர். ஆரம்பத்தில் எனக்கு அவனைப் பிடிக்கவில்லை. நாள் ஆக ஆக பிடித்துவிட்டது. என் வயது அப்படிப்பட்டது என்று நினைக்கிறேன். சில நேரங்களில் நான் அவனை மிகவும் நேசிக்கிறேன். சில நேரங்களில் அவன் குறைந்த



புத்திசாலித்தனத்துடனும் சோம்பேறித்தனமாகவும் இருப்பதாக எண்ணுகிறேன். என் சிந்தனைகள் வேறு... பீட்டரின் சிந்தனைகள் வேறு. இவன் எனக்கு சரிவரமாட்டான் என்றும் தோன்றுகிறது. ஆனாலும், இந்த நட்பு இந்தச் சூழலில் மகிழ்ச்சியளிப்பதாகவே இருக்கிறது.

இன்னொரு விஷயம் நானும் அக்காவும் சுருக்கெழுத்தில் நன்றாகத் தேர்ச்சி பெற்றுவிட்டோம். என்னைப் பெரிய பெண்ணாக அங்கீகரிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். அக்கா படிக்கும் சில புத்தகங்களை நான் வாசிக்க அனுமதி கிடைத்திருக்கிறது. போர்ச்சூழல் ஒன்றும் திருப்திகரமாக இல்லை. யூதர்கள் வேட்டையாடப்பட்டு, கண்காணா வதைமுகாம்களுக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள் என்று அறியும்போது என் இதயம் வெடித்து விடுவதுபோல இருக்கிறது. சில முகாம்களில் நச்சுப்புகை செலுத்தி கூட்டம்கூட்டமாகக் கொன்றுவிடுகிறார்கள். என் நண்பர்கள் குளிரில் அடி வாங்கி மடிந்துபோகும்போது, நான் மட்டும் இந்தப் பாதுகாப்பான இடத்தில் சொகுசாக வாழ்வது நியாயமா?

பள்ளிக்குச் சென்ற பிள்ளைகள் திரும்பி வரும்போது பெற்றோர் காணாமல் போயிருப்பார்கள். கடைக்குச் சென்ற மனைவி திரும்பி வரும்போது வீடு பூட்டியிருக்கும். பெற்றோரைத் தேடி குழந்தைகள் அழும் ஓலம் என்னவோ செய்கிறது.

[தொடரும்...]



# லேடிஸ் ஸ்பெஷல்

பெண்கள் பக்கத்திற்குரிய தரமான ஆக்கங்கள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப் படுகின்றன.

# 30 வயதில்தான் மனமுதிர்ச்சியாம்!



டீன்--ஏஜ் முடிந்து 21 வயது நிரம்பினால் பெரிய ஆளாகிவிட்டதாக காலம் காலமாக கூறப்படுகிறது. அந்த வயதில் வாக்களிக்கலாம், தண்ணி அடிக்கலாம் என்று பல நாடுகளில் சட்டம் அனுமதி அளிக்கிறது. ஆனால், 21 வயதானாலும் இன்னும் குழந்தை பருவம்தான் என்றும், 30 வயது ஆனால்தான் மன முதிர்ச்சி ஏற்படுகிறது என்றும் பலர் கருத்து தெரிவித்துள்ளனர். ஆஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகரில் உள்ள செயின்ட் லாரன்ஸ் அறக்கட்டளை, மனமுதிர்ச்சி குறித்து ஆய்வு நடத்தியது.

இதில் 21 வயது நிரம்பியவர்களிடம் கருத்து கேட்கப்பட்டது. அப்போது, 21 வயது என்பது பார்ட்டி கொண்டாடும் வயது. ஜாலியாக இருக்கும் வயது. குழந்தைப் பருவத்தில் இருந்து முழுமனிதனாக மாறும் கால கட்டம் அதுவல்ல. படிப்பு முடித்து, சம்பாதிக்க தொடங்கி, திருமணம் செய்துகொண்டு, சுயமாக முடிவெடுக்கும் காலம் 30 வயதுதான். அதுதான் அடல்ட் வயது என்று சரியாக சொல்லமுடியும் என்று பலர் கூறியுள்ளனர். 21 வயது வந்துவிட்டாலே குழந்தை பருவம் முடிந்துவிட்டதாக கூறுவது தவறு என்று ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர்.

## வயிற்றுச் சதையை குறைக்க எளிய உடற்பயிற்சி





தரையில் நேராக படுத்துக்கொண்டு, கைகளை நேராக வைத்து, தலையை மெல்ல தூக்கவேண்டும். பின் மெதுவாக தலையையும் கால்களையும் தூக்க வேண்டும்.

இந்த உடற் பயிற்சிசெய்யும்போது முதலில் முடிந்தவரை கால்களை தூக்கவேண்டும். பழகிய பின் நன்றாக தூக்கலாம். இந்த உடற்பயிற்சி செய்வதால் அடிவயிற்றில் இருக்கும் தேவையில்லாத கொழுப்புகள் கரையும்.

பெண்கள் இந்த உடற்பயிற்சி மேற்கொள்ளலாம். அவர்கள் உடல் எடையை குறைக்க உதவும் இந்த பயிற்சி முதலில் கஷ்டமானதாக தெரிந்தாலும், தொடர்ந்து செய்ய நல்ல பலன் கிடைக்கும்.

## மாமியார் - மருமகள் நல்லுறவுக்கு

**பெரும்பாலான** குடும்பங்களில் மாமியார் – மருமகள் பிரச்சினை தீர்க்க முடியாத, தவிர்க்க இயலாத பிரச்சினையாக இருக்கிறது. இந்த இரண்டுபேரிடம் சிக்கிக்கொள்ளும் ஆண்களின் பாடு பெரும்பாடாகிவிடுகிறது. எனவே பிரச்சினைக்குரிய மாமியாரை சமாளித்து வீட்டினை அமைதிப்பூங்காவாக மாற்றவும், மாமியார் மெச்சிய மருமகளாக மாறவும் சில ஆலோசனைகள்....

புதிதாக வீட்டிற்கு வரும் மருமகள் தங்களின் சொல்பேச்சு கேட்டு நடக்கவேண்டும் என்று மாமியார்கள் நினைக்கின்றனர். சற்று அதிகாரத்தோரணையில் பேசுகின்றனர். அவர்களை சமாளிக்க ஒரே வழி நட்புரீதியான அணுகுமுறைதான். எந்த செயலை செய்யும் முன்பும் மாமியாரிடம் ஒரு வார்த்தை கேட்டு செய்யுங்கள் அப்புறம் மாமியார் உங்களிடம் சரண்டர் ஆகிவிடுவார்கள்.

30 வயதுவரை மகனை நன்றாக வளர்த்து ஆளாக்கி புதிதாக ஒரு பெண்ணிடம் ஒப்படைக்கும்போது தாயின் மனநிலை சற்று இக்கட்டான சூழ்நிலையில்தான் இருக்கும். மகனை நன்றாக கவனித்துக் கொள்வாளா? சந்ததி நல்ல முறையில் செழிப்பாக இருக்குமா? என்ற கேள்வி இருக்கத்தான் செய்யும். எனவே உங்களின் பொறுப்பான செயல்பாடுகள்தான் மாமியாரை நிம்மதியடையவைக்கும்.

அதைவிடுத்து உங்கள் தாய்வீட்டு சொந்தங்களை கவனிக்கும் அவசரத்தில் புகுந்த வீட்டைச்சேர்ந்த மச்சான், மச்சாள் மாமனார், மாமியாரை கவனிக்காமல்விடும் பட்சத்தில் பிரச்சினை பூதாகரமாகிறது. எனவே இரண்டு குடும்ப சொந்தங்களையும் சரிசமமாக கவனித்து அனுப்புங்கள். மாமியார் – மருமகள் உறவு என்பது பிரச்சினைக்குரிய உறவாகவே, எதிர்மறையாகவே பேசப்படும் உறவாக இருந்து வந்துள்ளது.

மாமியர் என்பவர் மருமகளைவிட குறைந்த பட்சம் 30 வயது மூத்தவராகத்தான் இருப்பார். அந்த வயதிற்கு ஏற்ப அனுபவங்கள் இருக்கும். எனவே அவர் என்ன கூறுகிறார் என்பதை சற்றே காதுகொடுத்து கேளுங்கள். மாமியாரின் சொற்களை நேர்மறையாக எடுத்துக்கொள்ளுங்கள்.

அவர் கூறுவதை கேட்கிறீர்கள் என்பதை தெரிந்தாலே அவர் மகிழ்ச்சியடைவார். மாமியாரின் பிறந்தநாள், அவர்களின் திருமண நாட்களில் சிறப்பான முறையில் அவர்களுக்கு பரிசளிப்பது உங்கள் மீதான அன்பை அதிகரிக்கும். இன்றைய மருமகள்கள் நாளைய மாமியார் என்பதை மறந்துவிடவேண்டாம். உங்களை உள்ளங்கையில் வைத்து தாங்குவார்.


## மாங்காய் குழம்பு




மாங்காய் – 1,
சின்ன வெங்காயம் – 10, காய்ந்த மிளகாய் – 10,
தேங்காய் – அரைமூடி, கடுகு – கால் கரண்டி,
சீரகம் – கால் கரண்டி,
வெந்தயம் – கால் கரண்டி,
மஞ்சள் தூள் – கால் கரண்டி,
பொடியாக நறுக்கிய கொத்தமல்லி – 1 மேசைக்கரண்டி,
எண்ணெய் – 2 கரண்டி,
உப்பு – தேவைக்கேற்ப.
தாளிக்க... கடுகு,
கறிவேப்பிலை, எண்ணெய்.

**செய்முறை:**
கடாயில் சிறிது எண்ணெய்விட்டு, காய்ந்த மிளகாய் முதல் வரையிலான பொருள்களை லேசாக வதக்கி, அரைக்கவும். மாங்காயை சின்னத் துண்டுகளாக வெட்டவும். மறுபடி கடாயில் சிறிது எண்ணெய்விட்டு, கடுகு, கறிவேப்பிலை தாளித்து, சின்ன வெங்காயம் சேர்த்து நன்கு வதக்கவும். பிறகு மாங்காய் துண்டுகள் சேர்த்து வதக்கி, அரைத்த விழுது, மஞ்சள் தூள், உப்பு, தேவையான அளவு தண்ணீர் எல்லாம் சேர்த்து, மிதமான தீயில் கொதிக்கவிடவும். மாங்காய் ரொம்பவும் குழையாமல் பதமாக வெந்ததும், இறக்கி, கொத்தமல்லி தூவிப் பரிமாறவும்.

## கூந்தல் உதிர்வை தடுக்கும் உணவுகள்...



**நீங்கள்** ஆரோக்கியத்துடன் இருந்தால், கூந்தல் நன்கு ஆரோக்கியத்துடன் எந்த பிரச்சினையுமின்றி இருக்கும். இல்லையெனில் கூந்தல் உதிர்தல், பொடுகுத் தொல்லை, வறட்சி போன்றவை ஏற்படும். இவையெல்லாம் வருவதற்கு காரணம், உடலில் போதிய சத்துக்கள் இல்லாததே ஆகும்.

சைவ உணவுகள் சிலவற்றால் கூந்தல் நன்கு வலுவடைந்து, கூந்தல் உதிர் தல் தடுக்கப்படும் என்று ஒரு ஆய்வில் நிருபிக்கப்பட்டுள்ளது. கூந்தல் வளர்ச்சிக்குத் தேவையான சத்துக்களான ஜிங்க், விற்றமின் சி, புரோட்டீன் போன்றவை உள்ள உணவு களை சாப்பிட்டாலே, கூந்தலில் எந்த பிரச்சினையும் வராமல் இருக்கும்.

அந்த சத்துக்கள் எந்த உணவுப் பொருட்களில் அதிகம் உள்ளன என்பதைப் பார்ப்போம். கூந்தல் உதிர்ந்தால் புரோட்டீன் உணவுகளை அதிகம் சாப்பிட வேண்டும். ஏனெனில் அவை கூந்தல் வளர்ச்சியை அதிகரிப்பதோடு, பழுதடைந்த முடியை சரிசெய்கிறது. பாதாமில் விற்றமின் ஈ அதிகம் நிறைந்துள்ளது. இவை கூந்தலை விரைவில் வளரச் செய்கிறது.

மேலும் கல்சியம் சத்தும் அதிகளவில் உள்ளது. இதனால் கூந்தலின் வேர்கள் நன்கு வலுவடையும் மற்றும் இதில் உள்ள ஒமேகா-3 ∴பேட்டி அசிட் கூந்தலை பட்டுப் போன்று மென்மையாக வைக்கிறது. சிவப்பு அரிசி அரிசியில் காபோவைதரேட் மற்றும் நார்ச்சத்து அதிகமாக உள்ளது. இந்த அரிசியை அதிகம் உணவில் சேர்த்தால், கூந்தல் நன்கு ஆரோக்கியமாக இருக்கும். பச்சை காய்கறிகளான பசலைக் கீரை, கடுகு கீரை போன்றவற்றில் கூந்தலுக்கு தேவையான இரும்புச்சத்து நிறைந்துள்ளது. அதிலும் இதில் விற்றமின் ஏ மற்றும் சி சத்துக்கள், இரும்புச்சத்துக்களை உடலில் உறிஞ்சுவதற்கு உதவுகிறது.

பருப்பு வகைகளில் ஒன்றான கொண்டைக்கடலையில் அதிகளவில் ஜிங்க் உள்ளது. இது பொடுகு ஏற்படாமல் தடுப்பதில் சிறந்தது. அதிலும் இதில் உள்ள கனிமச்சத்துக்கள் பொடுகு வராமல் பாதுகாப்பதில் சிறந்தது. எனவே இதனை உணவில் சேர்த்தால், கூந்தல் உதிர்தலை தடுக்கலாம்.

## பரிசு 1000/- ரூபா. வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

**பரிசுப் போட்டி இல :-342**

**கேள்வி : கூந்தல் வளர்ச்சிக்குத் தேவையான சத்துக்கள் எவை?**

**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:-26.11.2012**

விடையைக் கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 342
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுப் போட்டி இல :- 340 இற்கான விடை :- அன்பாக இருப்பது மட்டுமன்றி தோழமையுடனும் பழகவேண்டும்.
பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:- S.அரிகரன், இல:196, ஆடியபாதம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

342

பெயர் : ..................................
முகவரி : ..................................
..................................
தே.அ. அட்டை இல : ..................................
விடை : ..................................
..................................
கையொப்பம் : ..................................

# காலநிலை மாற்றமும் நேரிடக்கூடிய விளைவுகளும்!

வாகரை வாணி

இலங்கை அபிவிருத்தியடைந்து வரும் ஒரு நாடாகவும், அயன மண்டலத்திலுள்ள ஒரு தீவாகவும் இருப்பதனால் காலநிலை மாற்றத்தினால் மிக அதிகளவில் பாதிக்கப்படக் கூடிய ஆபத்து உள்ளதென்று குறிப்புணர்த்தப்பட்டிருக்கின்றது. மிகச் செறிவாகப் பெய்யும் மழையைத் தொடர்ந்து, மிகையாகப் பாய்ந்தோடும் வெள்ளம், நிலச்சரிவுகள், நீண்ட காலத்திற்கு நிலவும் உலர் காலநிலையின் விளைவாக ஏற்படும் வரட்சி போன்றன இலங்கையில் பொதுவான நிகழ்வுகளாக மாறிவிட்டிருக்கின்றன.

**புவி** வெப்பமடைந்து கொண்டு வருகிறதென்பதும் அதன் இறுதி விளைவான காலநிலை மாற்றம் என்பதும் 21ம் நூற்றாண்டின் மனித அபிவிருத்திக்கான சவால்களாக அமைந்துள்ளன.

மனித நடவடிக்கைகளின் காரணமா-கவே இத்தகைய காலநிலை மாற்றங்கள் இடம்பெறுகின்றது என்கின்ற அடிப்படையை நாம் புரிந்து கொண்டாக வேண்டும். குறிப்பாக சுவட்டு எரிபொருட்களை எவ்விதமான கட்டுபாடும் இல்லாதவாறு எரிப்பதனால், அளவிற்கதிமான பசிய வீட்டு வாயுக்கள் வெளியேறுவதன் நேரடியான விளைவே புவி வெப்பமடைதல் என அரசுகளுக்கிடையிலான காலநிலை மாற்றத்தைப் பற்றி ஆராயும் குழு நிரூபித்துள்ளது.

வேகமாக மாற்றத்துக்குள்ளாகி வரும் இந்த காலநிலை மாற்றத்தினால் எதிர்கால சந்ததியினர் காலநிலை மாற்ற ஆபத்துகளின் கீழ் வாழ வேண்டியது கட்டாயமான ஒன்றாக மாறிவிட்டிருக்கின்றது என்று ஆய்வாளர்கள் எச்சிரிக்கின்றனர்.

அனைத்து நாடுகளும் காலநிலை மாற்றத்தின் அழுத்தத்திற்கு உள்ளாகும் ஆபத்து இருக்கின்ற போதிலும், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் காலநிலை மாற்றத்திற்கு இசைவாக்கமடையக் கூடிய வல்லமையைக் கொண்டிருக்காத படியால் அபிவிருத்தியடைந்த நாடுகளிலும் பார்க்க அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளே காலநிலை மாற்றத்தின் தாக்கங்களினால் அதிகளவில் பாதிக்கப்படக் கூடியனவாகும்.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் முன்னால் தற்போதுள்ள மிக முக்கிய சவால் சுருங்கிச் செல்லும் சுற்றாடலை கருத்திற்கொண்டு சிறந்த வாழ்க்கைத் தரத்தை வழங்கக் கூடியவாறு தமது பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதாகும்.

இலங்கை அபிவிருத்தியடைந்து வரும் ஒரு நாடாகவும், அயன மண்டலத்திலுள்ள ஒரு தீவாகவும் இருப்பதனால் காலநிலை மாற்றத்தினால் மிக அதிகளவில் பாதிக்கப் படக் கூடிய ஆபத்து உள்ளதென்று குறிப்புணர்த்தப்பட்டிருக்கின்றது. மிகச் செறிவாகப் பெய்யும் மழையைத் தொடர்ந்து, மிகையாகப் பாய்ந்தோடும் வெள்ளம், நிலச்சரிவுகள், நீண்ட காலத்திற்கு நிலவும் உலர் காலநிலையின் விளைவாக ஏற்படும் வரட்சி போன்றன இலங்கையில் பொதுவான நிகழ்வுகளாக மாறி விட்டிருக்கின்றன.

சுற்றாடலுக்கு உகந்த உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான முதலீட்டை அதிகரிப்பதற்கான தேவை, எரிபொருட் சந்தைகளில் நிலவும் நெருக்கடிகள், உணவுப் பாதுகாப்புடன் தொடர்புடைய பிரச்சினைகள், வர்த்தகம், வர்த்தகமும் கைத்தொழில் அபிவிருத்தியும் போன்ற தற்போதைய உலகளாவிய நிலைமைகளைக் கருத்திற்கொண்டு இந்தச் சவால்களுடன், காலநிலை மாற்றத்திற்கான சவால்களையும் இலங்கை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

ஏற்கனவே பெரும் பிரச்சினைகளை உருவாக்கியுள்ள காலநிலைப் போக்குகளில் ஏற்படும் வேறு எந்தவொரு மோசமான தாக்கமும் நாட்டிலுள்ள அனைத்து சமூக, பொருளாதார வாழ்வியல் அம்சங்களிலும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று கூறப்படுகின்றது.

எனவே, காலநிலை மாற்றத்தின் மோசமான பாதிப்புகளை எதிர்கொண்டு நிலைமைக்கு ஏற்றவாறு மாறி நாட்டை கட்டியெழுப்பத் தேவையான இசைவாக்க நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமும் அவசரமுமாகும்.

முன்னுரிமை அடிப்படையில் இசைவாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதேவேளை நிலைபேறான அபிவிருத்தி மற்றும் காலநிலை மாற்றத்திற்கான ஐக்கிய நாடுகள் கட்டமைப்பு மற்றும் (UNFCCC) அதன் கியோட்டோ நெறிமுறையின் (KP) நிபந்தனைகளுக்கு ஏற்ப பசிய வீட்டு வாயுக்கள் வெளியேறுவதைக் குறைப்பதற்கான முயற்சியில் இலங்கை செயலூக்கத்துடன் பங்குபற்றும்.

இப்பின்னணியில் காலநிலை மாற்றத்தின் மோசமான தாக்கங்களை அனைத்து பங்காளிகளும் வினைத்திறனாகவும், செயற்றிறனாகவும் எதிர்கொள்வதற்கான வழிகாட்டிகளையும் அறிவுறுத்தல்களையும் வழங்குவதற்காக இலங்கைக்கான காலநிலை மாற்றங்களிற்கான தேசிய கொள்ளை விருத்தி செய்யப்பட்டுள்ளது.

ஒரு தொலை இலட்சியம், செயற்பணிக் கூற்று, குறிக்கோள், ஒரு தொகுதி வழிகாட்டும் தத்துவங்கள், இவற்றைத் தொடர்ந்து பாதிக்கப்படும் தன்மை, இசைவாக்கம், தணித்தல், நிலைபேறான நுகர்வும், உற்பத்தியும், அறிவு முகாமைத்துவம், பொதுக்கூற்றுக்கள் என்னபவற்றை காலநிலை மாற்றத்திற்கான தேசியக் கொள்கை உள்ளடக்கியுள்ளது.

காலநிலை மாற்றத்தின் சவால்களை எதிர்கொள்வதற்காக இக்கொள்கைகளை அர்த்தமுள்ள செயலாக மாற்றுவதற்கும், எதிர்பார்க்கப்படும் பலாபலன்களை அடைவதற்கும் அனைத்து மட்டங்களிலும் கூட்டு நடவடிக்கைகள் அவசியமாகும்.

இந்தப் பூமிப்பந்தில் உயிரினங்கள் வாழ்வதற்கு காலநிலை பெருந்துணை புரி-வதால் காலாகாலமாக இருந்து வரக்கூடிய காலநிலையில் ஏற்படுகின்ற மாற்றமானது உடனடியானதும், மீள முடியாததுமான ஆபத்துகளைக் கொண்டிருப்பதற்கான வாய்ப்புகள் உள்ளது. அவ்வாறு நேரிடுமிடத்து, அதன்மூலம் ஏற்படும் பாதிப்பைக் குறைப்பதற்கும், அதனை எதிர்கொள்வதற்குமான ஆற்றலை நாட்டில் உருவாக்கவும் காலத்திற்கேற்ற நடவடிக்கைகள் அவசியமானதாகும்.

காலநிலை மாற்றங்களை எதிர்கொள்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் சுற்றாடல் நேயமுள்ளதாகவும், நாட்டிற்குப் பொருத்தமானதாகவும், சமூக ரீதியில் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும், நஷ்டமுண்டாக்காததாகவும் இருத்தல் வேண்டும்.

நிலைபேறான உற்பத்தியும், நுகர்வும் காலநிலை மாற்றத்தின் தற்போதைய சவால்களை குறிப்பிடத்தக்களவு எதிர்கொள்ளும். வறுமை ஒழிப்பையும், நிலைபேறான மனித அபிவிருத்தியையும் இலக்காகக் கொண்டு சூழல தொகுதியின் நிலைபேறான தன்மை உறுதி செய்யப்பட வேண்டும்.

[22 ஆம் பக்கம் பார்க்க]


தினந்தோறும் வெளிவருகிறது

விலை 10/=

தினமுரசு நாளிதழ்

தினந்தோறும் கல்விமுரசு இணைப்பு

- கனதிமிக்க கட்டுரைகள்
- உள்நாட்டு - உலக - இந்தியச் செய்திகள்
- உள்நாட்டு - வெளிநாட்டு - விளையாட்டுச் செய்திகள்
- தேடித் தொகுத்த பல்சுவை அம்சங்கள்
- சினிமா
- நாள் ராசி பலன்
- வேலைவாய்ப்புத் தகவல்கள்
- மருத்துவக் குறிப்புகள்
- குட்டிக் கதைகள்
- பத்திகள் - "பரமர் சங்கமம்" - "மெய்தான் பாருங்கோ" "பதிவிறக்கப் பெட்டகம்"

A/L, O/L மற்றும் புலமைப் பரிசில் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் – விடைகள் ஒவ்வொரு நாளும் தினமுரசில் வெளியாகிறது.

தினமுரசு நாளிதழ் ரூ.10/= மட்டுமே

இப்போது நீங்கள் அறிய விரும்பும் அன்றாடச் செய்திகள் அனைத்தையும் பத்தே ரூபா கொடுத்து படித்துக்கொள்ள முடியும்



ஜோசெப் கிருஷ்ணா

விளையாட்டு



# புதிய நாற்றுக்கள்

**சின்னப்** பையன்கள் தேசிய கிரிக்கெட் அணிகளுக்குள் வருவது பார்க்க, கேட்க சந்தோஷமான விடயங்கள்தான். இலங்கையில் இரண்டு சுழல்பந்து வீச்சாளர்கள், அவுஸ்திரேலியாவில் நான்கு வேகப்பந்து வீச்சாளர்கள் என்றவகையில் பங்களாதேஷ் அணியிலும் புதிய இளம் வீரர்கள் களமிறங்கப்படவிருக்கிறார்கள்.

இவர்கள் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் அநேகமாக விளையாடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறார்கள். ஒருவர் சுழல்பந்து வீச்சாளர் சொஹாக் காஸி. இருபத்தொரு வயதாகும் இவர் உள்ளூர் பந்தயங்களில் இரண்டு ஆட்டங்களில் பதினொரு விக்கெட்டுக்கள் வீழ்த்தியுள்ளார். இதில் ஒரு ஹெட்ரிக் அடக்கம். அதோடு துடுப்பாட்டத்தில் ஒரு சதமும் போட்டுள்ளார். மேலும் மேற்கிந்தியத் தீவுகள் அணியில் இடது கை துடுப்பாட்ட வீரர்கள் கூடுதலாக இருப்பதால் காஸியின் ஒப்ஸ்பின் பந்துவீச்சு சாதமாக அமையும் என்றும் நம்பப்படுகின்றது.



இன்னொருவர் நான்கே நான்கு இருபதுக்கு இருபது போட்டிகளில் மட்டும் விளையாடியுள்ள வேகப்பந்து வீச்சாளர் அபுல் ஹஸன். இவரும் உள்ளூர் போட்டிகளில் அதீத திறமையைக் காட்டியுள்ளதால் அணிக்குள் உள்வாங்கப்பட்டுள்ளார். இவர் டெஸ்ட் போட்டியில் விளையாடினால் அதுவே அவரது சர்வதேச முதலாவது டெஸ்ட் போட்டியாக இருக்கும்.



# காப்பாற்ற முடியுமா?

**டெ**ஸ்ட் கிரிக்கெட் போட்டிகளின் பிரபல்யத்தையும் முக்கியத்துவத்தையும் முதன்மைப்படுத்தும்விதமாக முன்வைக்கப்பட்ட ஒரு யோசனைதான் இரவுநேர டெஸ்ட் ஆட்டப் போட்டிகள். ஐ.சி.சி இரவு நேர டெஸ்ட் போட்டிகளுக்குப் பச்சைக்கொடி காட்டினாலும் அங்கத்துவ நாடுகளும் தமது சம்மதத்தைத் தெரிவிக்க வேண்டுமல்லவா? இந்தவகையில் பல நாடுகளைப் போலவே இலங்கையும் இந்த வகை ஆட்டங்களுக்கு விருப்பம் தெரிவித்திருந்தாலும் இந்த விடயம் பற்றிக் கருத்துக் கூறும் குமார் சங்கக்கார இந்த விடயம் தொடர்பில் சம்மதம் தெரிவிக்குமுன் மிகவும் கவனமாகப் பரிசீலிக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

மேலும், டெஸ்ட் போட்டிகளுக்குப் புத்துணர்ச்சி கொடுக்கும் வகையிலேயே இரவு நேர டெஸ்ட் ஆட்டங்கள் நடாத்த நடவடிக்கை எடுக்கப் படுவதாக உணரமுடிகிறது. ஆனால் பந்துகளின் வகை, அவற்றின் நிறம், அதோடு மைதானம் இரவு வேளையில் என்ன மாதிரி அமைந்திருக்கும் என்பதெல்லாம் மிகக் கவனமாக ஆராயவேண்டிய விடயங்கள் என்று கூறியுள்ளார்.

இதேவேளை இலங்கையில் ஒரு ஊடகம் மேற்கொண்ட கருத்துக்கணிப்பின்படி இரவுநேர டெஸ்ட் போட்டிகள் அமோகமான ரசிகர்களை மைதானத்துக்குக் கவர்ந்த இழுத்துவிடாது என்ற முடிவுக்கு வந்துள்ளார்கள். இதற்குக் காரணம் இரவு நேரம் என்பதல்ல. ஏனெனில் இருபதுக்கு இருபது, ஒரு நாள் போட்டிகள் என்பன இரவில் நடக்கின்றன. ஒரு சில மணித்தியாலங்களுக்குள் முடிவடைந்துவிடுகின்றன.

ஆனால் டெஸ்ட் போட்டிகள் ஐந்து நாட்களைக் கொண்ட நீண்ட பயணமாக இருப்பதே விரும்பாமைக்குக் காரணம். குறுகிய ஓவர் போட்டிகளிலேயே வீரர்கள் பூச்சிகளின் தொல்லைகளுக்குட்பட்டு கண்களைக் கசக்கிக் கொள்வதும், பந்துவீச்சாளர் ஒவ்வொரு பந்துவீசும்போது துணியைக் கொண்டு பந்தைத் துடைப்பதும், களத்தடுப்பாளர் மைதானத்தில் காணப்படும் பனி ஈரத்தால் பந்தைப் பிடித்துக்கொள்ள முடியாமல் நழுவவிடுவதும் வெறுப்பேற்றும் நிகழ்வுகளாகவே நடந்த கொண்டிருக்கின்றன. நிலைமை இப்படியிருக்க, ஐந்து நாளும் வீரர்களும், ரசிகர்களும் இப்படி ஒரு சங்கடத்துக்கு உட்பட வேண்டுமா என்பதும் நல்லதொரு கேள்விதான். டெஸ்ட் போட்டிகள் உன்னதமானவைதான். ஆனால் என்ன ஊக்கமருந்து கொடுத்தாலும் நிமிர்த்த முடியாமல் இருக்கிறதே. என்ன செய்ய?



விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்த அளுத்கமகேயிடம் விருது பெறுகிறார் நிஷாந்த பெர்ணான்டோ.

# இதுவே முதன்மையானது

**உலக** சாதனை புரிந்த விளையாட்டு வீரர்கள் வரிசையில் முதன் முதலாகப் பெயர் பதித்தவர் ஒலிம்பிக் வெள்ளிப்பதக்கம் வென்ற டங்கன்வைட். அடுத்த பிலியர்ட்ஸ் விளையாட்டில் உலக சம்பியனை எம்.ஜே.எம். லாபீரைக் குறிப்பிடலாம். மிக அண்மைக்கால சிறந்த உதாரணம் சுஸந்திக்கா ஜயசிங்ஹ.

இப்பொழுது இன்னொரு உலக சம்பியன் இலங்கையில் இருந்து உருவாகியுள்ளார். அவர் கரம் வீரர் நிஷாந்த பெர்ணான்டோ. இந்தியாவில் நடைபெற்ற பதினெட்டாவது கரம் சம்பியன்ஷிப் போட்டிகளில் இலங்கை ஒரு தங்கம், மூன்று வெள்ளி, இரண்டு வெண்கலம் என்று வென்றதுடன் மொத்தப்புள்ளி எண்ணிக்கையில் இரண்டாம் இடமும் பெற்றுக் கொண்டது.

நிஷாந்த முப்பத்து நான்கு வயதானவர். இரண்டு பிள்ளைகளின் தந்தை. பிரின்ஸ் ஒப்வேல்ஸ் கல்லூயின் பழைய மாணவன். இந்த தங்கம் வென்றவீரன் உண்மையில் நிரந்தரத் தொழில் எதுவும் இல்லாமல் வாழ்ந்துவருபவர்.


இப்போது அறியக்கூடிய மகிழ்ச்சியான செய்தி என்னவென்றால், இந்தக் கரம் சுற்றுப்போட்டியில் வெற்றிபெற்ற எல்லோரும் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்படவிருக்கிறார்கள். அதோடு நிஷாந்த வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் உடனடியாக வேலையொன்றினைப் பெற்றுக் கொள்ளப் போகிறார். அதோடு பத்து இலட்சம் ரூபா பணப்பரிசும் பெற்றுக் கொள்ளப்போகிறார். இந்த வகையில் அரசும், விளையாட்டுத் துறை அமைச்சும் எடுத்துள்ள முடிவு எவ்வளவு பாராட்டினாலும் பெருமைக்குரியதொன்றாகும். எல்லா விளையாட்டும் சமமே. திறமைக்கேற்ற பரிசு உடனே என்பது தொடரட்டும். நல்லதைச் செய்வோருக்கு நல்வாழ்த்துக்கள்.

# தீர்ப்புகள் மாறுகின்றன

**மு**ன்னாள் இந்திய கிரிக்கெட் அணியின் தலைவரும், சிறந்த துடுப்பாட்ட வீரருமான அசாருதீன், தன்மீது சுமத்தப்பட்ட கிரிக்கெட் விளையாடும் வாழ்நாள் தடையில் இருந்து விடுபடுவார் போலத் தோன்றுகிறது. இவர் மீது விதிக்கப்பட்ட வாழ்நாள் தடைக்கு எதிராக நீதிமன்றத்தை நாடிய அசாருதீன், இத்தகைய தடை சட்டவிரோதமானது என்று தீர்ப்பளிக்கப்பட்டதன்மூலம் வெற்றியடைந்துள்ளார்.

ஆனால் பி.சி.சி. ஐ இதனை ஏற்று இவர் மீதான தடையை உடனே நீக்குமா, அல்லது இன்னும் பல சட்டநுணுக்கங்களைத் தேடுமா என்று தெரியவில்லை. மேலும் முன்னதாக 2000ஆம் ஆண்டில் கிரிக்கெட் விளையாட வாழ்நாள் தடை விதிக்கப்பட்ட இவர் 2006இல் அதில் இருந்து விடுவிக்கப்பட்டிருந்தார்.

ஆனால் இத்தகைய விடயங்களில் நாடுகளின் கிரிக்கெட் சபைகள் அல்ல, ஐ.சி.சி.யே முடிவெடுக்க வேண்டுமென்று கூறிவிட்டதால் விடயம் இழுபறி நிலைக்கு உள்ளாகிவிட்டது. முள்ளில்போட்ட சேலையை மெதுவாகத்தான் எடுக்க வேண்டும் என்பதுபோல அஸாரின் விடயமும் மெதுமெதுவாகத்தான் தெளிவு பெறவெண்டும். இவரது தீர்ப்பு பி.சி.சி.யால் ஏற்கப்பட்டால், பல்வேறு கிரிக்கெட் வீரர்கள் பெற்றுக் கொண்ட ஊக்கத்தொகையொன்றையும் பெறும் உரித்துடையவர் ஆவார்.




அந்தத் தொகை இந்திய ரூபாயில் ஒன்றரைக் கோடியாகும். அதன்பின் கிரிக்கெட் துறையில் இவர் விரும்பும் ஏதாவது துறையில் பங்களிப்புச் செய்ய அனுமதி கிடைக்க வேண்டும். இது இவருக்கு ஆத்மதிருப்தி கொடுப்பதுடன், சுயவிம்பத்தை உயர்த்திக் கொள்ளவும் உதவும்.

அஸார் மட்டுமல்ல, இன்னும் பலரும் சூதாட்டப் புகாரில் சிக்கித் தண்டனை அனுபவித்தவர்கள்தான். உதாரணமாக அஜேய் ஜடேஜா, மனோஜ் பிரபாகர் ஐந்து வருடத் தடைக்கு உள்ளாகியவர்கள். அஜே சர்மா வாழ்நாள் தடைக்குட்பட்டவர். அதேபோல அஸாரும் வாழ்நாள் தடைக்குட்பட்டவர்தான். 49 வயதாகும் அஸார் தன் காலத்தில் கிரிக்கெட்டில் கலக்கியவர். 1985 –2000 க்கு இடைப்பட்ட காலத்தில் 99 டெஸ்ட் போட்டிகள், 334 ஒரு நாள் போட்டிகளில் விளையாடிவர். இதேவேளை தடையை எதிர்த்து வழக்காடிய அஜே ஜடேஜா, தண்டனைக் காலம் குறைக்கப்பட்டு பின்னர் உள்ளூர் அணிகளில் தொடர்ந்து விளையாடிவர் ஆவார். மனோஜ் பிரபாகர் தன் தண்டனைக்காலம் முடிந்ததும், கிரிக்கெட் பயிற்றுனராகத் தன் தொழிலைத் தொடர்ந்தார். ஏனோ அஜெய் சர்மா மட்டும் வழக்காடாமல் அப்படியே ஒதுங்கிக் கொண்டார்.

இங்கு சம்பந்தப்பட்ட தரப்புகளால் ஒரு கேள்வி முன்வைக்கப்படுகிறது. இவர் குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டாலும்கூட ஆயுள் காலத் தண்டனைதான் முடிந்த முடிவா? அல்லது அதற்குக் குறைந்த தண்டனைகள் ஏதும் பொருத்தமாக இருக்குமா என்பதுதான்.

அசாருதீன் பெற்றுள்ள வெற்றித் தீர்ப்பின்மூலம் வாழ்நாள் தடை என்பதைவிட குறைந்தளவு தண்டனை என்பது ஏற்கத்தக்கது என்பது போலத் தெரிகிறது.



ஒரு நாட்டின் மிக முக்கிய மான பாடலான தேசிய கீதத்தை எழுதும் கௌரவம் மிகச்சிறந்த கவிஞர்களுக்கு தான் வழங்கப்படும். அந்த கௌரவத்தைப் பெற்ற இரவீந் தரநாத் தாகூர் எழுதிக் கொடுத்த இந்திய தேசிய கீதம்தான் 'ஜன கண மண' இந்தியாவிற்கு மட்டுமல்ல வங்காள தேசத்திற்கும் அவர்தான் தேசியகீதத்தை எழுதிக் கொடுத்தார். உலக வர லாற்றில் இரண்டு நாடுகளின் தேசியகீதத்தை எழுதிய தனிப் பெருமை இரவீந்தரநாத் தாகூருக்கு மட்டுமே உண்டு.

# நம்மால் முடியாதது எது?

உலகத்தரம் வாய்ந்த அமர இலக்கியங்களை ஒவ்வொரு மொழியும் பல்வேறு காலகட்டங்களில் தந்துகொண்டு தான் இருக்கின்றன. அந்த இலக்கியங்களை உலகம் முழுவதும் படித்து ரசிக்க வேண்டு மென்றால் அவை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட வேண்டும். இல்லையென்றால் அவற்றை அந்தந்த மொழி பேசுபவர்களே ரசிக்க முடியும். தாய்மொழியில் எழுதப்படும் ஓர் இலக்கியம் ஆங்கிலத்திற்கோ அல்லது வேறொரு மொழிக்கோ மொழி பெயர்க்கப்படும்போது அதன் இயற்கை சுவையும், வீரியமும் குறைந்துவிடும் என்பது ஓரளவுக்கு உண்மைதான். அப்படிப்பட்ட நிலையிலும் ஆங்கில உலகத்தை கவரும் ஓர் வேற்று மொழி படைப்புத்தான் பிரசித்திப் பெற்ற நோபல் பரிசுக் குத் தகுதி பெறுகிறது. இந்திய இலக்கியத்தை பொறுத்தமட்டில் இதுவரை ஒரே ஒரு இலக்கியத் திற்குதான் அந்த கௌரவம் வழங்கப்பட்டிருக்கிறது. வங்காள மொழியில் எழுதப்பட்டு ஆங் கிலத்தில் மொழிப்பெயர்க்கப் பட்ட அந்த படைப்பு கீதாஞ்சலி. அதனைக் கொடுத்து இந்திய இலக்கிய உலகிற்கு அழியாப் புகழைப் பெற்றுக்கொடுத்த உன்னத கவிஞர் இரவீந்திரநாத் தாகூருக்கு வானம் வசப்பட்ட கதையைத் தெரிந்துகொள்வோம்.

1861-ஆம் ஆண்டு மே மாதம் 7-ஆம் நாள் கெல்கத்தாவில் உள்ள ஜோராசாங்கோ மாளிகை யில் பிறந்தார் தாகூர். குடும் பத்தில் பதின்னான்காவது பிள்ளை அவர். பெற்றோர் வசதிமிக்கவர் என்பதால் அனைவரும் செல்வ செழிப்பில் வளர்ந்தனர். இளம் பருவத்திலிருந்தே இலக்கியம், இசை, சமயம் ஆகியவற்றில் அதிக ஆர்வம் காட்டினார் தாகூர். வேதங்களையும் உபநிடதங்களையும் ஆர்வத் துடன் கற்றார். மொழியாற்றல் அவருக்கு இயற்கையாகவே இருந்தது. எனவே பனிரெண்டா வது வயதிலேயே கவிதைகள் புனையத் தொடங்கினார்.

தாகூரின் குடும்பம் வெளியிட்டு வந்த பாரதி என்ற பத்திரிகையில் அவரது ஆரம்பகால படைப்பு கள் இடம்பெற்றன. கவிதை கள் எழுதிய அதேநேரத்தில் வங்காள நாட்டுப்புறப் பாடல் களை பாரம்பரிய இசையோடு கலந்து இசைத்தொகுப்பாகவும் வெளியிட்டார். பிற்காலத்தில் அது இரவீந்தர சங்கீதம்' என்று அழைக்கப்பட்டது.

தாகூர் முறையாக பள்ளி செல்லவில்லை. அதற்கு காரணம் பள்ளிக்கூடத்தின் கட்டுப்பாடுகளிலும், சட்ட திட்டங்களிலும் அவருக்கு உடன்பாடு கிடையாது என்பதுதான். கல்வியாக இருந்தாலும் சரி, கவிதையாக இருந்தாலும் சரி, இசையாக இருந்தாலும் சரி எதிலுமே சுதந்திரத்தை விரும்பியவர் அவர். பள்ளிக்கு செல்லா விட்டாலும் சமஸ்கிருதம், வங்காளம், ஆங்கிலம் ஆகியவற்றில் வல்லவராக இருந்தார். தனிமையையும் கவிதையையும் விரும்பிப் போற்றிய தாகூர் தனது மிகச்சிறந்த படைப்புகளை தனிமையின் இனிமையில்தான் எழுதினார். அவரது இலக்கியப் பணி சுமார் அறுபது ஆண்டுகள் நீடித்தது. அந்தக்கால கட்டத்தில் அவர் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கவிதைகள், இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்கள்,

அவர் படைத்த அமர காவியமான கீதாஞ்சலி தான். அந்தக் கவிதைகள் உயரிய தத்துவங்களையும், ஆன்மீக சிந்தனைகளையும் அடிப்படையாகக் கொண்டவை. முதலில் தனது தாய்மொழி யான வங்காளத்தில் எழுதிய துடன் பின்னர் தாமே அவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த் தார் தாகூர். 1912-ஆம் ஆண்டு வெளியான கீதாஞ்சலியை உலகம் ஆங்கிலத்தில் படித்து வியந்தது. அதற்கு அடுத்த ஆண்டே 1913இல் அந்த இலக்கியத்திற்கு நோபல் பரிசை வழங்கி மகிழ்ந்தது நோபல் குழு. நோபல் பரிசுத் தொகை தாகூருக்கு மகிழ்ச் சியைத் தந்தது. அதனைக் கொண்டு சாந்தி நிகேதன் கல்வி நிலையத்தின் செலவு-களை பார்த்துக்கொள்ளலாம் என்று எண்ணினார். ஆனால் அவருக்கு ஒரு வருத்தமும் இருந்தது. மேல்நாட்டு உலகம் தன் படைப்பைப் பாராட்டிய பிறகுதான் சொந்த நாட்டு மக்களின் பாராட்டும், கவன-மும் தன் நூலுக்கு கிடைத்தது என்பது குறித்து வருந்தினார்.

தனக்கு கிடைத்த பரிசுத் தொகையை கல்கத்தாவில் உள்ள ஒரு வங்கியில் போட்டு வைத்தார். துரதிர்ஷ்டவசமாக அந்த வங்கி நொடித்துப் போனது. தாகூரின் இலக்கிய

இருபத்தைந்து நாடகங்கள், எட்டு சிறுகதைத் தொகுப்புகள் என எழுதிக் குவித்தார்.

இலக்கியம், ஆன்மீகம், சமூகம், அரசியல் ஆகியவைப் பற்றி விழிப்புணர்ட்டும் பல கட்டுரைகளையும் அவர் எழுதினார். இவையெல்லாம் தவிர்த்து அவருக்கு ஓவியம் வரையவும் நேரம் இருந்தது. சிறு வயதிலிருந்தே பள்ளிக் கூட பாடதிட்டங்களையும், ஆசிரியர் கற்பிக்கும் முறை களையும் விரும்பாத தாகூர் அந்தக்கால குருகுல முறைப் படி ஒரு கல்வி நிறுவனத்தைத் தொடங்கி அதில் நன்முறையில் கல்வி கற்பிக்க விரும்பினார். அதன் பயனாக அவர் 1901-ஆம் ஆண்டு தோற்றுவித்த ஒரு கலைக்கழகம்தான் சாந்தி நிகேதன். தன் செல்வத்தையும், எழுத்து மூலம் தான் ஈட்டிய பொருளையும் அந்தக் கல்வி நிலையத்திற்காக செலவிட்டார். அந்த கல்விக்கழகத்தில் மொழிகளும், கலைகளும் இயற்கைச் சூழலில் கற்பிக் கப்பட்டன. ஆசிரியர்களும் மாணவர்களும் அங்கேயே தங்கி கற்பித்தனர், கற்றனர்.

இந்தியாவிலிருந்து மட்டு மின்றி வெளிநாடுகளிலிருந்தும் மாணவர்கள் சாந்தி நிகேதனில் கல்வி கற்றனர். அன்னல் காந்தியடிகள் அந்தக் கல்வி நிலையத்திற்கு வருகை புரிந்தார். ஜவஹர்லால் நேரு அந்தக் கல்வி நிலையத்தின் மீது அதிக அக்கறை காட்டினார். இந்தியாவின் முன்னால் பிரதமர் இந்திராகாந்தி அந்த நிலையத்தில் கல்வி பயின்றவர் என்பது குறிப் பிடத்தக்கது. சாந்தி நிகேதன் கலைக்கழகம் சிறிது சிறிதாக வளர்ச்சி பெற்று பின்னர் விஷ்வ பாரதி பல்கலைக்கழகம் என்றானது. இன்றும் உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மாணவர்கள் அந்த பல்கலைக் கழத்தில் கல்வி பயின்றனர்.

இரவீந்தரநாத் தாகூருக்கு அழியாப் புகழை பெற்றுத் தந்தது 103 கவிதைகளின் தொகுப்பாய்

பங்களிப்பை பாராட்டும் வகையில் அப்போதைய பிரிட்டிஷ் அரசாங்கம் 1915-ஆம் ஆண்டு அவருக்கு ஹசர் பட்டம் வழங்கி சிறப் பித்தது. ஆனால் 1919-ஆம் ஆண்டு நடந்த பஞ்சாப் படு கொலைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும்வகையில் அந்த விருதை திருப்பி அனுப்பிவிட்டார் தாகூர். உலகம் போற்றும் அண்ணல் காந்தியடிகளை மகாத்மா என்று முதலில் அழைத்துப் போற்றியவர் தாகூர்தான் என்று வரலாற்றுக் குறிப்பு கூறுகிறது.

ஒருநாட்டின் மிக முக்கிய மான பாடலான தேசிய கீதத்தை எழுதும் கௌரவம் மிகச்சிறந்த கவிஞர்களுக்கு தான் வழங்கப்படும். அந்த கௌரவத்தைப் பெற்ற இரவீந் தரநாத் தாகூர் எழுதிக் கொடுத்த இந்திய தேசிய கீதம்தான் 'ஜன கண மண்' இந்தியாவிற்கு மட்டுமல்ல வங்காள தேசத்திற்கும் அவர்தான் தேசியகீதத்தை எழுதிக்கொடுத்தார். உலக வர லாற்றில் இரண்டு நாடுகளின் தேசியகீதத்தை எழுதிய தனிப் பெருமை இரவீந்தரநாத் தாகூருக்கு மட்டுமே உண்டு. இந்திய இலக்கிய உலகிற்கு அனைத்துலக பெருமையை பெற்றுக் கொடுத்த இரவீந்தரநாத் தாகூர் 1941-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 7-ஆம் நாள் தனது 80-ஆவது அகவையில் காலமானார்.

முறையாகக் கல்வி பயிலாமலும் கூட தாகூரால் நோபல் பரிசை வெல்ல முடிந்ததென்றால் நம்மால் சாதிக்க முடியாதது எது? என்ற கேள்வியை நாம் கேட்டுக்கொள்ள வேண்டும். ஓர் இலக்கை வகுத்துக் கொண்டு தன்னம்பிக்கையையும், விடா முயற்சியையும் உரமாக விதைத்து தைரியமாக முன்னேறினால் தாகூருக்கு வசப்பட்டதுபோல் நிச்சயம் நமக்கும் நாம் விரும்பும் வானம் வசப்படும்.

## முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே!
உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

### குறுக்கெழுத்துப் போட்டி - 496

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | |
| 7 | | 9 | | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | | 18 |
| 19 | 20 | | 22 | 23 | 24 |
| | | | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **26.11.2012** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்ப வேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல - 496
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.
சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

### குறுக்கெழுத்துப் போட்டி 494- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 பி | 2 ரே | 3 சி | 4 ல் | | 6 அ |
| 7 ர | | | 10 வ | 11 து | 12 றி |
| 13 ப | 14 டு | 15 க | | 17 தா | 18 வு |
| 19 ஞ் | | 21 ம் | | 23 கி | |
| 25 ச | 26 வ | 27 சி | 28 ன் | | 30 பா |
| 31 ம் | | 33 வா | 34 சி | 35 ப் | 36 பு |

**இடமிருந்து வலம்**

01. வள்ளல்.
10. தெய்வமகன்.
13. உள்ளக்கொதிப்பு (குழம்பியுள்ளது)
19. ஞானம் அல்லது ஓர் அசைச் சொல்.
22. சபித்தல் (குழம்பியுள்ளது)
28. சுகவீனம் அல்லது பாய்தல் (குழம்பியுள்ளது)
31. அழகிய உடல் அசைவுகளைக் கொண்ட நடனக் கலையைக் குறிப்பது.

**மேலிருந்து கீழ்**

01. காதல்.
03. நிறம் அல்லது ஊர் சூழ்ந்த சோலை. (குழம்பியுள்ளது)
05. மருத்துவக் குணமுடைய பானம் ஒன்று.(திரும்பியுள்ளது)
12. தற்செயலாக நடக்கும் சம்பவம். (குழம்பியுள்ளது)
14. கல் அல்லது வேலைப்பாடு.
16. திண்ணம். (குழம்பியுள்ளது)
23. சோறு.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.494 இற்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

ம.திருவருள், அட்டன் றோட், கினிகத்தேன.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. த. அங்கஜன், தெந்தகொல்ல வீதி, மாத்தளை.
02. எச். ஆர்.பாத்திமா, பீரிஸ் மாவத்தை, கஹபோவில.
03. எஸ். வேணுகா, மதியத்தலாவை, அம்பாறை.
04. ம. செல்வராஜா, சேனையூர் - 06, கட்டை பறிச்சான்.
05. எம். ஜேம்ஸ் வசந்தன், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
06. ஜே. றெம்சி, கன்டாவளை, கிளிநொச்சி.
07. ஆர். பதுறுதீன், 2ஆம் வட்டாரம், எருக்கலம்பிட்டி.
08. மு. பிரேமிளா, அநுராதபுரம் வீதி, புத்தளம்.
09. த. நவரத்தினம், ஹில் வீதி, கம்பளை.
10. ஆர். பிரனீதா,அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.

7

## இராமசாமி ரமேஷ், அளம்பில்

**ஆம்! வலிகளையும், சுமைகளையும் தோல்விகளையும், அவமானங்களையும் சுமந்து - கடந்து வெற்றிக்காகப் போராடும் எழுத்தாளன் ஒருவனின் எழுத்துலகப் பயணம் இங்கே தொடர்கிறது.**



# வலிகளின் சன்மானம்



"**பிள்ளை!** எடுத்துக் கொள்ளுங்கோம்மா! "புன்னகையை வீசியபடி, ஒரு குவளையை வாங்கிக் கொண்டாள். ஏழ்மை வீட்டில் குடித்தனம் நடத்தினாலும், இருப்பதைக்கொண்டு நிறைவு காணும் மனதிருந்தது நட்சத்திரனின் குடும்பத் திடம்! அடுத்தடுத்து வியப் புக்கள் இவளை விழிகளை விரியச்செய்து கொண்டிருந் தன. மௌனித்திருந்த நிலாவை, மறுபடியும் சீண்டினான் இவன்.

" தம்பி! இஞ்ச ஒருக்கா வந்துட்டுப் போப்பா..." மகேஸ்வரி அழைத்த போது, இருங்க... இதோ வந்திடுறேன்." என கண் சிமிட்டிவிட்டு தாயை நோக்கி நடந்துமறைந்தான் நட்சத்திரன். இந்த ஏழை களின் மாளிகையைப் பார்வையால் நோட்டமிட்ட நிலா. ஓலையாய் வேயப்பட்ட வீடு, பனைமட்டைகள் கொண்டு வரியப்பட்ட அறைகள். விறாந்தை என அழைக்கப்படும் முன் அறை. குளத்துக்களியினால் (குந்து) கட்டு செய்திருக் கிறார்கள். வருகிற வெளி யாட்கள் இருந்து சாவகாச மாகப் பேசுவதற்கு ஏற்றதாக அந்த முன்அறையை வலை களின் உதவியுடன் அழகாய் மறைப்புச் செய்திருந்தார்கள்.

நட்சத்திரனின் கை வண்ணங்கள் சுவர்களின் அலங்காரங்களாயிருந்தன. பூக்கள், நட்சத்திரனுக்குப் பிடித்த சினிமா நட்சத்திரம் அஜீத் ஓிரண்டு படங்களில் சிரித்துக் கொண்டிருந்தார். இன்னுமொரு இடத்தில் வடமாகாண ஆளுநரிடம் பரிசில் பெறுவதான படம் பெருப்பிக்கப்பட்டு பிரேம் போடப்பட்டிருந்தது.

அங்கே மறுபுறம்...

" அந்தப் பிள்ளைக்குச் சாப்பாடு மதியம் குடுக்க வேணும் தம்பி! அரிசி கிடக்கு.... கறிபுளிதான் இல்லையப்பா! என்ன செய்வதென்று நட்சத்திரனும் யோசித்தான். முதன் முதலாய் வந்தவளுக்கு, வாய்க்கு ருசியாய் ஏதாவது செய்துகொடுக்க வேணும். கையிருப்பில் பணம் இல்லை. எல்லாம் அம்மை போட்டதோடு அழிந்துவிட்டது. அப்பா விடமும் எதுவும் இருக்கு மென்றால், அவர் ஒரு அலுவலாக நாயாறு பாலம் வரைக்கும் போயிருந்தார். எப்போது வருவாரோ தெரி யாது. இவனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. ஏதாவது மரக்கறியும் செம் மலைக்குப் போனால், ஆத்து இறாலும் வாங்கி... நிலாவுக்கு சமைத்து சாப்பாடு கொடுக்கலாம். ஒரு ஐநூறு இருந்தால் சமாளிக்கலாம். எங்காவது கடனாய் தானும் கிடைச்சால் இப்போதையப் பிரச்சினை முடிஞ்சிடும். சிந்தித்துக் கொண்டிருந்தவனுக்கு சிந்தனைக்குள்ளே சிறு சலன மாய் சைக்கிள் கடை சின்னவன் அண்ணா வந்து நின்றார்.

சின்னவர் அண்ணன் இவனது எழுத்துக்களின் தீவிர ரசிகன். இவன் என்ன கேட்டாலும், செய்யத் தயாரான மனிதர் அவர்.

" சரி! இரண்டு நாளில திரும்பிக் கொடுத்திடலாம்..." எண்ணத்தை செயலில் நடைமுறைப்படுத்த முனைந்த வன், நிலாவிடம் வந்தான்.

" நீங்க மதியம் சாப்பிட்டுத் தான் இண்டைக்குப் போக வேணும். அம்மாவோட கதைச்சுக் கொண்டிருங்க... நான் கடைக்குப் போட்டு வாறன்..." சொல்லிவிட்டு தன்னை சரிசெய்து , புறப்பட்டான் நட்சத்திரன். வீட்டுக்கு வர்ற ஒருத்தருக்கு ஒழுங்கா... வாய்க்கு ருசியா சமைத்துப் போடக்கூட முடியாத நிலைமை. கஷ்டம் என்றது எங்களிடம் இருந்து எப்போது காணாமல் போகுமோ? வேதனையின் வெடிப்புக்கள் நட்சத்திரனின் இதயத்துக்குள் பீறிட்டுக் கொண்டிருந்தன. வாழ்க்கையே வெறுப்பது இப்படியான தர்ம சங்கடமான நிலைமைவரும் போதுதான்.

செம்மண் நிறைந்திருந்த வீதியில் நட்சத்திரனின் , சைக்கிள், சின்னவர் அண்ணனின் கடை நோக்கி விரைந்து கொண்டிருந்தது. அளம்பில் பக்கமிருந்து கொக்குகள் பறந்துவந்து இவனது தலைக்கு மேலாய் கடந்து கொண்டிருந்தன. மனதுக்குள் புரிந்தது. " கடல் மீன் தர தயாராகி றது..." எண்ணிக்கொண்டவன், "சூடை வலைகளை சீராக்க வேணும்." மனதுக்குள் பதித்துக்கொண்டான். எந்தச் செயலில் கிறங்கியிருந்தாலும் அடிக்கடி வலிகளின் சன்மானம் வந்து இவனுக்குள் ஊடுருவிக் கொண்டிருந்தது. சும்மாவா? இவனின் எத்தனை வருடத் தவம்? எவ்வளவு தியாகங் களின் முடிவு? கண்ட கனவு களுக்கான நிதர்சனம்கூட, வலிகளின் சன்மானம்தானே? அது மெய்ப்படப்போகும் அந்த நாள் என்று வரும், என்று எதிர்பார்ப்பதாகவே இவனது நாட்கள் கடந்து கொண்டிருந்தன. போனதும், சின்னவர் அண்ணனிடம் காசு கடனாய் மாறிக் கொண்டு போகவேணும்" ஏழைகளுக் கெல்லாம் எதிர்பார்ப்புகள், ஆசைகள் இருக்கக் கூடாதா தென்பது உண்மைதான்! ஒரு சின்ன எதிர்பார்ப்புக்கூட பூர்த்தியாக்கப்பட இயல வில்லை என்றால், வாழ் வாதாரம் எப்படியிருக்கும், வேதனை விம்மலாய் வெளிப் பட, சைக்கிளை வேகமாய் மிதித்தான் நட்சத்திரன்.

இரண்டோ மூன்றுபேர் சைக்கிள் கடையில் சின்னவர் அண்ணர் தம்முடைய சைக் கிளையும் கவனிப்பாரா எனக் காத்திருப்பது தெரிந்தது. இத்தனைபேர் மத்தியில் எப்படி சின்னவர் அண்ணரிடம் பணத்தைக் கேட்பது எனத் தர்மசங்கடமான நிலைமை இவனுக்குள் புகுந்துகொண்டது. சைக்கிளை மெதுவாகக் கடையை நோக்கி உருட்டினான். சற்றும் முற்றும் பார்த்தபடி, ஏதோ ஒரு சைக்கிள் சக்கரத்தோடு மல்லுக்கட்டிக் கொண்டிருந்த சின்னவர் அண்ணரின் நிமிர் தலுக்காய் இவனது காத்தி ருப்பு நீண்டது. கூப்பிடலாமா.... எனவும் யோசித்தான். "ச்சே ச்சே!! கடன் வாங்கப்போகும் நாம... அவரிடம் கூப்பிட்டு கேட்கிறது நல்லதில்லை..." மனச்சாட்சி இடைமறித்தது. இருமனதாய் தயக்கத்தோடு சைக்கிளின் பாரில் தன்னை இருத்தினான். நேரமும் கடந்து கொண்டிருந்தது. நிலாவும் போகவேண்டும் என அடம் பிடிக்கிறாள். என்னசெய்வது? எவ்வளவு நல்லவர் என்றாலும் தமது வறுமை, இப்படி அடுத்த வரின் பார்வைக்காய் ஏங்கச் செய்துவிட்டதே என்ற சோகத் தின் தூறல்கள் நட்சத்திரன் மனவெளியில் வலியோடு வீசிக்கொண்டிருந்தது.

இந்தநேரம் ஏதோ பொருளை எடுக்கத் திரும்பிய சின்னவரின் கண்ணில் நட்சத்திரன் பதிந் தான். "தம்பி! என்னடாப்பா கனநேரமாய் நிற்கிறியோ..." என்றபடி இவனிடத்தில் பார்வையைச் செலுத்தியபோது தான் ஒரு நிம்மதியானநிலைக்கு வந்தான் நட்சத்திரன்.

(வலிகள் தொடரும்...)

வாரமொரு சிறு கதை

# ஒரு பெருநாள்

"**உம்மா** வாப்பா உடுப்பு வாங்கிட்டு வருவாரா?" அந்த மூன்றுபிள்ளைகளும் மூவாயிரம் குழந்தைகளின் ஒட்டுமொத்த ஏக்கங்களையும் கொண்டதுபோல தாயிடம் வினவியதும், மீண்டும் அவளது கண்கள் துளிர்த்தன. மூன்றுவருட இடைவெளியில் பிறந்த அந்த மூன்று பிஞ்சுகளின் ஆசைகள் எப்போதுமே நிறைவேறியது கிடையாது.


நாளைய தினம் ஹஜ்ஜுப் பெருநாள் திருநாளாக விடியப்போகிறது. ஒவ்வொரு இஸ்லாமிய நெஞ்சங்களிலும் மகிழ்ச்சி ஊற் றெடுக்கும் ஓர் இனியநாளில், நசாரின் இந்த குடும்பம் மட்டும் ஏங்கிக்கொண்டுதான் இருந்தது. அவன் மனைவி பரீனாவினால் கட்டுப்பாடின்றி கண்களிலிருந்து நீரை சிந்த மட்டும்தான் முடிந்தது.

இடியப்பம் அவித்து விற்ற பணத்தில் கொஞ்சம் முறுக்கு மட்டும்தான் பலகாரம் என்று பெயர் சொல்ல இருந்தது. பக்கத்து வீட்டுப் பிள்ளைகள் எல்லாம் புத்தம் புது ஆடைகளுடன் வலம் வரும்போது, தன் பிள்ளைகள் மட்டும் இரண்டு வருடங்களுக்கு முன் எடுத்த அதே ஆடையை கடந்த பெரு நாட்களை போலவே நாளைய பெருநாளின் போதும் அணியவேண்டுமா? அணியத்தான் வேண்டும். புதிது என்றுசொல்ல அவர்களுக்கு வேறு எதுதான் இருக்கிறது?

பரீனாவின் அழுகை அந்தப் பிஞ்சுகளையும் கலங்கவைத்தது. தாயின் அழுகை, ஆடை கிடைக்காது என்றுதான் உணர்த்தியது!

"அழாதீங்கமா. உடுப்பு இல்லண்டாலும் பரவாயில்லை" பத்து வயதேயான மூத்தபெண் ஷிபாவின் வார்த்தைகள் இது. மூன்றுமே பெண் பிள்ளைகள்தான். அதனால்தானோ தாயின் மனதை புரிந்துகொண்டன போலும். மூன்றுபேரையும் இறுக்கி அணைத்துக்கொண் டாள். மணி 10.30 ஐத்தாண்டிக்கொண்டிருந்தது. குடும்பத் தலைவனின் வருகைக்காக நாலு பேரும் வாசலிலேயே காத்துக் கொண்டிருந் தார்கள். உறக்கம் வந்துவிட்ட போதும் பிள்ளை களின் விழிகள் உறங்க விரும்பவில்லை.

அக்கம் பக்கத்து வீடுகளில் வெடிச்சத்தமும் ஆரவாரங்களும் கேட்டுக்கொண்டேதான் இருந்தது. இங்கே அந்தக் குடும்பத்தின் தேவை யைக் கவனிக்க யாருமே இல்லையே. "ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமின் சகோதரனா வான். அவன் மற்றவருக்கு அநியாயம் செய்ய விடமாட்டான். அநியாயக்காரரிடம் அவரை ஒப்படைக்கவும்மாட்டான். யார் தனது சகோத ரனின் தேவையை கவனிக்கிறாரோ அவரின் தேவையை அல்லாஹ் கவனிக்கிறான்" என்று நபிகள் நாயகம் கூறியதை நாம் மறந்துவிட் டோமா? பிள்ளைகள் மூன்றும் அவள் மடியி லேயே உறங்கிவிட்டன. அவர்களின் விழியோரங் களில் காய்ந்துபோன கண்ணீர்ச்சுவடுகள்! மீண்டும் அழுகை! மூன்றுபிள்ளையும் அறைக் குள் தூக்கி சென்றுபடுக்க வைத்தாள் பரீனா. நள்ளிரவை நெருங்கிக்கொண்டிருந்தது கடிகார முள். தூக்கம் மறந்த சிவந்த விழிகளில் தென் பட்டது அவள் கணவன் நசாரின் உருவம். கையிலே இருந்த சிறிய பையும்தான். வீட்டை அடைந்தவனின் முகத்தில் அந்த நாலு மனங் களில் இருந்த அதே ஏக்கம்! கணவனின் பல பார்வைகளையும் அறிந்த அவளுக்கு அவனுடைய சோகம் உடனே தெரிந்தது. "பரீனா, கிடச்ச காசுல இதுதான் வாங்கமுடிஞ்சுது." கொண்டுவந்த பையை திறந்துகாட்டினான்.



H.நுஸ்ரா, வவுனியா.

இனிப்புப் பண்டங்கள் கொஞ்சம் கிடந்தன. "இதப்பார்த்தாவது அந்தப் பிள்ளைகள் கொஞ்சம் சந்தோஷப்படும்தானே, காசில்லண்டு யாரும் நம்ல கவனிக்கிறதுமும் இல்லை, யாரும் வாறதும் இல்ல, ஆனால் அல்லாஹ் நம்மளோட இருக்கான். இது கிடச்சதே பெரிய விஷயம் இன்ஷா அல்லாஹ் அடுத்த பெருநாளைக் காவது நம்மட பிள்ளைகளுக்கு உடுப்பு எடுத்துக்கொடுக்கணும்" அதைச்சொல்லும் போதே அவனுக்குத் தெம்பு வந்துவிட்டது. இறைவன் இருக்கான் என்ற தைரியம் அது.

"இன்ஷா அல்லாஹ், வாங்குவோம்" நீண்டநேர யோசனைக்கு பின் அவள் பதில் கொடுத்தாள்.

அதிகாலை தொழுகை அழைப்புக்காக, பாங்கு ஒலி கேட்டது. சுபஹ் தொழுகைக்கான நேரம் வந்துவிட்டது. எப்போதுமே இல்லாமல் புதிதான நாளாக, பெருநாளாக மலர்ந்தது அந்த நாள். பரீனாவுக்கு உறக்கம் மறைந்து விட்டது. கணவனையும் பிள்ளைகளையும் எழுப்பிவிட்டு காலைக்கடன்களை முடித்துக் கொள்ள புறப்பட்டாள். நசாரும் விரைவில் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு பள்ளி வாசலுக்கு புறப்பட்டு சென்றான். பரீனாவும் பிள்ளைகளும் வீட்டில் தொழுதுகொண்டார்கள். கணவன் கொண்டுவந்த இனிப்புப் பண்டங் களை பிள்ளைகளுக்குக் காட்டினாள் பரீனா. எத்தனை மலர்ச்சி, அந்தச் சின்னஞ்சிறு முகங்களில்!

பெண்களுக்கான தொழுகை இன்னும் கொஞ்சநேரத்தில் ஆரம்பமாக இருந்தது. எந்தச் சலனமுமே இல்லாமல் அந்தச் சிட்டுகள், அவர்களுக்கென இருந்த புதுஆடையை அணிந்து கொண்டார்கள்.

" உம்மா அந்தப் பிள்ளைட உடுப்பு வடிவா இருக்குதானே. அதே மாதிரி எனக்கும் எடுத்துத் தருவீங்களா?" நடுப்பிள்ளை றஸ்னாவின் கேள்வி இது. "எடுப்பம்டா இன்ஷா அல்லாஹ், அடுத்த பெருநாளுக்கு எடுப்பம்!" தாய் சொன்னது பெய்யோ பொய்யோ உடனே அந்த முகம் பூவாய் சிரித்தது.

தொழுகை முடிந்ததும் விசேடமான துஆ பிரார்த்தனை இருந்தது. அல்லாஹ்விடம் மட்டுமே கையேந்தி அழுதழுது தங்களின் தேவைகளை கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

துஆ முடிந்ததும் ஒருவருக்கொருவர் முகமன் கூறி அன்போடு அணைத்துக் கொண்டார்கள். பிரிந்திருந்த உறவுகள் ஒன்றுசேர்ந்தன. மனஸ்தாபங்கள் விலகி புதுஉறவாய் மாறின.

எல்லாம் முடிந்து வீட்டிற்கு வந்ததும் பிள்ளைகள் பசியே இல்லாமல் விளையாடிக் கொண்டிருந்தார்கள். நசார் தொழுதுவிட்டு வருவதற்குள் மறுபடியும் புட்டை சூடாக்கிக்கொண்டாள். அந்த நன்நாளிலாவது மத்தியானம் இறைச்சிக்கறி சமைக்க வேண்டும். இந்த காசுக்கு கால் கிலோ கூட வாங்கஇயலாது. தொழுகை முடித்து அவன் வந்ததும் பிள்ளைகளும் பெற்றோருமாய் உணவருந்தி முடித்தார்கள்.

அயல்வீட்டில் அல்லாஹ்வுக்கு பலியிடுவதற்காக ஒரு மாட்டை அறுத்துக்கொண்டிருந்தார்கள். ஹஜ்ஜின்போது வசதி படைத்தவர்கள் வறியவர்களுக்கு அல்லாஹ்வின் பெயரில் அறுத்து பலி யிடுவது. இதனால் பெறப்படும் இறைச்சியை 'உழ்ஹியா' என்பர்.

அயலான் என்பதால் நசார் வீட்டிற்கும் அந்த இறைச்சிவரும். அதனால்தான் பரீனா இறைச்சி வாங்க கணவனிடம் காசு கேட்கவில்லை. இன்னும் நிறைய நேரம் மீதியிருந்தது. பிள்ளைகள் பக்கத்து வீட்டிற்கு விளையாடச் சென்றுவிட்டார்கள். "பரீனா... பரீனா..." முன்வீட்டு பெண்மணி முஜீபாவின் குரல் அது. "வாங்க ராத்தா.. குசினிக்குள் நிண்டன்.." இன்முகத்துடனே அவளை வரவேற்றாள். எப்போதுமே அவளுக்காக வரும் முதல் பலகாரப்பொதி முஜீபாவிடம் இருந்துதான். இந்தா பரீனா, பிள்ளைகள் எல்லாம் வீட்டதான் நிக்குதுகள். அவங்க சாப்பிட்டாங்கம்மா, நீயும் நசாரும் சாப்புடுங்க. முறுக்கு மட்டும்தான் செஞ்சாண்டு றஸ்னா சொன்னிச்சு.. அதான் அவசரமா எடுத்துட்டு வந்தன்.

நீங்க இருங்க, நான் தேத்தண்ணி ஊத்துறன். அதெல்லாம் வேணாம்மா, நான் சாப்புட்டுத்தான் வாறன், போய்ச் சமைக்கணும், போயிட்டுவாறன்" என்று பலகாரப்பொதியை அவள் கையிலே திணித்துவிட்டு மறைந்தாள்.

கணவன் வெளியேசென்றதும் வீட்டு வேலைகள் எல்லாம் முடித்துவிட்டாலும் கூட மீண்டும் ஒருமுறை கவனித்தாள். "பரீனா ராத்தா.." வெளியே வந்தாள். இந்தாங்க உழ்ஹியா இறைச்சி. அலி ஹாஜியார் தந்துவிட்டார்" மனதில்பொங்கிய மகிழ்ச்சியை முகத்திலும் காட்டிக்கொண்டு "ஜஸா கல்லாஹ் தம்பி" என்று நன்றியுடன் அந்த சிறுவனை வழியனுப்பி வைத்தாள். அந்த இறைச்சிதான் இன்று அந்தக் குடும்பத்திற்கு விருந்து. இதற் காக அல்லாஹ்வுக்கு நன்றி சொல்ல அவள் மறக்கவில்லை. அவள் மதியத்திற்கு கணவனும் பிள்ளைகளும் வீடு வந்துசேர, உணவைப் பரிமாறினாள். எப்போதாவதுதான் அந்தக் குடும் பம் இப்படியான உணவை உண்டு மகிழும். இன்றும் அப்படித்தான். இந்த நன் நாளில் ஏதோ ஒருவகையில் அவர்களுக்கு மகிழ்ச் சியை இறைவன் கொடுக்கத் தவறவில்லை.

மாலைச் சூரியன் பொற்கதிர்களினால் பறையடித்துக் கொண்டிருந்தது. மீண்டும் அந்த முகங்களில் எல்லாம் ஒருவித சோகம். படுக்கும் முன்பு புதிய ஆடைகளாய் இருக்கும் அந்த ஆடைகளை கழற்றியாயிற்று. "றஸ்னா உடுப்பை எடுத்து கவனமாக வை... இப்படி வச்சு ஏதாவது நடந்தா அடுத்த பெருநாளுக்கு எதைப் போடுவா?" கல்வெட்டாய் பதிந்து போன எண்ணத்தினால் மூத்தமகளிடம் இருந்து அசாதாரணமாய் வந்த வார்த்தைகள் நசாரையும் பரீனாவையும் திகைக்க வைத்தது உண்மைதான்! இன்ஷா அல்லாஹ், அந்தப் பிள்ளைகளுக்கு அடுத்த பெருநாளுக்காவது உடுப்பு எடுத்து குடுக்கணும்" கண்கள் துளிர்த்தவாறே மனைவியைப் பார்த்தான். இன்ஷா அல்லாஹ் அவள் வாயிலும் அதே பதில். துளிர்த்த கண்களுடன் இரவும் பெரு நாளும் அவர்களைவிட்டு ஓடின! இவர்களைப் போன்றே எத்தனையோ குடும்பங்களும் இதே நம்பிக்கையில் திருப்தியடைந்தவாறே அடுத்த பெருநாளுக்காக காத்திருக்கின்றன.




**தருவது கே.வி. குணசேகரம்**

**"முலைக் கண்ணும் முத்தும் முழுமெய்யும் புல்லும் இலக்கணம் யாதும் அறியேன் – கலைக்கணம் வேங்கை வெரூஉம் நெறிசெலீய போலும் என் தீம்பாவை செய்த முறி"**

ஒரு தாய் தனது மகள் ஓர் ஆடவனைக் காதலிப்பதாக அறிகிறாள். ஊரார், அவர்களைப் பற்றி இகழ்வாகக் கதைக்கின்றனர். இது தாய்க்கு அவமானமாக இருக்கிறது. அவள் இரகசியமாக ஒரு பணக்கார வாலிபனைத் தனது மகளுக்குத் திருமணம் பேசுகிறாள். இதை அவளின் மகள் எப்படியோ அறிந்து விடுகிறாள். இருப்பினும், அவள் – தான் அதைத் தெரிந்து கொண்டதாகக் காட்டிக் கொள்ளவில்லை. மிகமிக மகிழ்வுடன் காணப்படுகிறாள். ஊரவர்களுடனும் இனத்தவர்களுட னும் உடன் பிறந்தவர்களுடனும் மிகவும் மகிழ்வாகவும் கலகலப்பாகவும் பேசுகிறாள். சகோதரர்களுடன் விளையாடுகிறாள். அவ்வப் போது ஓடி வந்து தாயை இறுக அணைத்து முத்தமிடுகிறாள். அவள் அணிந்திருந்த முத்துவடம் தாயின் நெஞ்சுப் பகுதியை இறுக்கமாக அழுத்துகிறது. அதனால் தாய் மூச்செடுக்க முடியாது அவதிப்படுகிறாள். மகள் ஓர் ஏழையைக் காதலிக்கிறாள் என்பதை அறிந்து துயரப்பட்ட தாய்க்கு மகளது அன்பான மகிழ்ச்சி பொங்கும் அணைப்பு எல்லை இல்லாத பேரின்பத்தைக் கொடுக்கிறது. அந்த இன்பத்தில் மனம் மகிழ்ந்து தன்னை மறந்து தூங்கி விடுகிறாள். மறுநாள் அவள், வயலில் வேலை இருந்ததால் நேரத்துடன் கணவனுடன் வயலுக்குச் சென்றுவிட்டாள். நன்றாகப் பொழுது விடிந்த பின்பு அவளது தாய் வயலுக்கு வந்து அவளது மகள் இரவு தனது காதலனுடன் சென்றதைச் சொல்கிறாள்.

அவளுக்கு எல்லாம் கனவு போல இருக்கிறது.

"நேற்று எனது மகள் மார்பும் முத்துவடமும் அழுத்தும்படி அணைத்து எனது கன்னத்தில் முத்தமிட்ட உண்மையை நான் சிறிதும் அறியாமற் போனேன். மான்கூட்டங்கள் வேங்கைகளுக்கு அஞ்சிச் சிதறியோடும். காட்டு வழியாகப் பிரிந்து செல்லப் போகிறேன் என்று அவள் குறிப்பால் உணர்த்தியதை நான் உணராமல் போய்விட்டேன்" என்று வருந்தினாள்.

இந்த அருமையான பாடல் நாலடியார் என்ற நூலில் உள்ளது. நாலடியார் பதினெண்கீழ்க் கணக்கு நூல்களில் முதலிடம் வகிப்பது. திருக்குறளைப் போலப் பெருமை பெற்று விளங்குவது. 400 வெண்பாக்களைக் கொண்டது. உவமைகளாலும், உலக



# பாவை செய்த குறி

நடைமுறைகளைக் கூறுதலாகவும், பழமொழிகளாலும், கதைகளாலும் உறுதிப் பொருட்களை உணர்த்துவதில் தனிச் சிறப்புடையது. திருக்குறள் போலப் பத்துப் பத்து வெண்பாக்களை அதிகமாகக் கொண்டுள்ள நாலடியார் 40 அதிகாரங்களைக் கொண்டது. குறளின் கருத்துக்கள் பலவும் இதில் உள்ளன. அதனால் இதைத் திருக்குறளோடு ஒட்டிப் பிறந்த குழந்தை என்று அறிஞர்கள் கூறுவார்கள்.

'நாலடி நானூறு' என்றொரு பெயரும் இந்நூலுக்கு உண்டு. இந்நூல் பல்வேறுபட்ட சமண சமயப் புலவர்கள் பாடிய தொகுப்பு நூலாகும். துறவை வலியுறுத்திக் கூறும் நாலடியார் பெண்கள் வன்மையாகக் கண்டிக்கிறது. பெண்களின் தொடர்பால் முக்தி தடைப்படுமென்று கூறிப் பெண்களையும் பெண்களால் கிடைக்கும் இன்பத்தையும் வெறுத்து உலக பந்தங்களிலிருந்து விடுபடுமாறு கோருகிறது. இருப்பினும், கற்புள்ள மகளின் பெருமையை விதந்து கூறவும் தவறவில்லை. நாலடியாரில் உள்ள பல பாடல்கள் பெண்களின் அழகை இழிந்த அழகென்று கூற, ஏனைய சமணப் புலவர்கள் பெண்களின் அழகை வேறு சமயப் புலவர்கள் வர்ணிப்பதை விடச் சிறப்பாக வர்ணிப்பதை காணமுடிகின்றது. ஏலாதி, சிறு பஞ்சமூலம், பழமொழி நானூறு போன்ற சமண நூல்கள் பெண்களின் அழகை உணர்பூர்வமாக வர்ணித்து அவர்களுக்கே நீதியை உபதேசிக்கின்றன. நாலடியார் பெண்களை இழிவாகக் கூறிய போதும், அவர்களின் அழகை விடப் பெருமைகளை இழிவுபடுத்தவில்லை. ஒவ்வொரு பாடலும் சுவையுடையதாக இருப்பதைப் போல நீதிகளை ஆணித்தரமாகக் கூறுகின்றன. அதனால் தான் நாலடியார் சமய வேறுபாட்டை இழந்து தமிழின் சிறப்பை மேம்படுத்திக் காட்டி இன்றும் சிறப்போடு விளங்குறது.

# கருத்துக் களம்

திவிநெகும சட்டமூலத்தில் தொடங்கிய சலசலப்புக்கள் 13 ஆவது திருத்தம், இல்லாதொழிப்பு, 19 ஆவது திருத்தச் சட்டமூலம் அங்கீகாரப் பரவலாக்கம் என்றெல்லாம் எங்கெங்கோ போய்க்கொண்டிருக்கிறது.

ஆனால் இவ்வாறான அதிகாராப் பரவலாக்கத்தை நீண்டகாலமாக எதிர்பார்த்து கோரிக்கைகளை முன்னின்று வலியுறுத்திய - வலியுறுத்திக்கொண்டிருக்கின்ற வடமாகாண மக்கள் இவை எதனையும் அனுபவிக்க முடியாத துர்ப்பாக்கியசாலிகளாக தொடர்ந்தும் இருந்து வருகின்றனர்.

குறிப்பாக 13 ஆவது திருத்தச் சட்டம் என்பது உருவாகுவதற்கு கிழக்கு மக்களைப் போன்றே வடக்கு மக்களின் அர்ப்பணிப்புக்கள் முக்கிய பங்காற்றி இருந்தன.

ஆனால் அதில் ஒரு துளியைக்கூட இதுவரை வடக்கு மக்கள் அனுபவித்திருக்கவில்லை. நிலைமை இவ்வாறு இருக்கையில் குறித்த திருத்தச் சட்டமானது பொருத்தமற்றது, நியாயமற்றது என்றெல்லாம் சம்மந்தமில்லாவர்கள் கூக்குரல் இடுவதும் அதை இல்லாதொழிக்க சபதம் எடுப்பதும் நியாயமாகத் தெரியவில்லை.

ஏ.ஜேசுபாலன்,
சிலாவத்தை.

கருத்துக்களம்,
தினமுரசு, வாரமலர்,
373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.


கைமேல் பலன் தரும் கண்கண்ட தெய்வம் ஸ்ரீ துர்க்கா தேவியே



SRI DURGADEVI MANTHIRIKA UTCHADA PEEDAM, NO.23, MAYFIELD ROAD, KOTAHENA, COLOMBO-13.


# சிந்தியா பதில்

**இசிந்தியா! திவிநெகும குறித்த உயர் நீதிமன்ற தீர்ப்பு நீதிக்கு கிடைத்த வெற்றி என்று விக்கிரமபாகு கருணாரட்ண கூறுகிறாரே...?**

*க.முசாங்கன், சங்கானை.*

எல்லாவற்றுக்கும் அவசரப்பட்டு அறிக்கை விடுகின்றவராக இருக்கின்றாரே தவிர, அவசரமாக முன்வந்து எவருக்கும் நீதி கிடைக்கச் செய்யவில்லை.

யாரோ நீதிக்காகப் போராடுவதும் அதைப் பாராட்டித் தனது பெயரை பிரபல்யப் படுத்திக் கொள்வதிலும் ஆர்வமாகவே இருக்கின்றார். இன்னும் நியாயம் கிடைக்க வேண்டிய பல பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை நினைவில் கொள்வது நல்லது.

**இசிந்தியா! புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள் தேசிய பாதுகாப்புப் பிரிவில் இணைத்துக் கொள்ளப்படுகின்றமை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**


*கே.சுதாகரன், கொழும்பு.*

ஆயுதத்தைப் பற்றி நன்கு தெரிந்தவர்கள் என்பதால் காவல் படையில் இணைத்துக் கொள்வதற்கு முயற்சிக்கப்படுகின்றது என்று நினைத்துவிடக்கூடாது.

முன்னர் எதிராக ஆயுதம் ஏந்தியவர்களிடம் சட்டரீதியாக ஆயுதங்களை வழங்குவதற்கு முற்படுவதானது பல உள் நோக்கங்கள் கொண்ட முயற்சியாகவே பார்க்கப்படுகின்றது.

இச் செயற்பாடானது மீண்டும் ஒரு ஆயுதக் கலாசாரம் தலைதூக்கி விடக்கூடாது என்பதற்காக அதாவது அதாவது "திருடனுக்கே விதானையார் வேலை கொடுப்பது" என்று ஊரில் சொல்வார்களே அது போலவும் இருக்கக் கூடும்.

யாரைக் கண்காணிக்க யாரிடம் துப்பாக்கிக் கொடுக்கிறார்கள் என்று சிந்திக்க வேண்டியுள்ளது.



**இ சிந்தியாவின் பார்வையில் புதிய வரவு செலவுத் திட்டம் எப்படி இருக்கிறது?**

*எஸ்.ராமச்சந்திரன், மன்னார்.*

விளையாட்டுக்காரர்களுக்கு வரி நீக்கம் செய்து மற்ற வாகனங்களுக்கு வரி அதிகரிப்பு செய்யப்பட்டிருப்பதைக் கூறுவதா? அல்லது உள் நாட்டில் காணிகள், அபரிக்கப்படுகின்றன என்கின்ற செய்திக்கு மேலதிகமாக வெளிநாட்டவர்களுக்குக் காணிகள் விற்கப் படக் கூடாது என்பதைக் கூறுவதா? வீடற்றோர் இன்னும் காடுகளுக்குள் துன்பம் அனுபவிக்கையில், படை வீரர்களுக்கு வீட்டு வசதி என்று அறிவிக்கப்பட்டிருப்பதைக் கூறுவதா, எதுவுமே தெரியவில்லை!!!

**இசிந்தியா! 19 ஆம் திருத்தச் சட்ட மூலம் அதிகார பரவலாக்கத்தை சீர் படுத்தப்படப் போகிறதாமே?**

*க.அசாந், திருகோணமலை.*

இருப்பதைவிட்டு விட்டு பறப்பதற்கு ஆசைப்படுகின்ற முட்டாள்தனங்களில் இதுவும் ஒன்று.

13 ஆவது திருத்தச் சட்டத்தையே முழுமையாக அனுபவிக்காத மக்களிடம் 19 ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்துதான் படையல் நடத்தப் படப் போகின்றது என்பது வேடிக்கையிலும் வேடிக்கை.

**இசிந்தியா! பாரிஸில் கொல்லப்பட்ட பரிதிக்கு கலைஞர் கருணாநிதி இரக்கம் தெரிவித்துள்ளாரே?**

*எம். பாலசுப்பிரமணியம், கண்டி.*

இறந்தவர்களுக்குக் கலைஞர் இரக்கம் தெரிவிப்பதும் இருக்கின்ற கலைஞருக்கு பரிதி போன்றவர்கள் இரங்கல் தெரிவிப்பதும் உளப்பூர்வமான தெரிவிப்புகள் அல்ல.

**இசிந்தியா! நல்ல விஷயங்களை தவறான கோணத்தில் பயன்படுத்துவோர் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்.**

*என்.கஜானி, வவுனியா.*

சராசரி மனிதர்கள் ஒன்றுக்கு ஒன்று விலையாகக் கொடுத்து உயரவும் முடியாமல், தாழ்ந்து போகவும் முடியாமல் தவிக்கின்ற ஜீவன்கள்.

**இசிந்தியா! ஆண்களின் பலம் என்னவோ?**

*எம்.எம்..அல்வின், கேகாலை.*

பலம் என்பதை எது என்று தீர்ப்பதிலேயே தங்கி இருக்கின்றது.

உடற்பலம், மன பலம், ஆன்மீக பலம், என்று பலவகையான பலம் உள்ளது.

**இசிந்தியா! தொடர்ந்தும் நமது எதிர் பார்ப்புக்கு மாறான விடயங்கள் நடக்கும் போது ஏற்படும் விரக்தியை தீர்க்க என்ன வழி?**

*ஏ.எச்.எம்.இர்ஷாத், புத்தளம்.*

விரக்தியா, ஏமாற்றமா என்பதைத் தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

நீங்கள் திட்டமிடுவதிலும், அந்த இலக்கு நோக்கி முன்னேறுவதிலும் உங்களை அறியாமல் எங்கேயோ தவறு நடக்கின்றது.

தயது செய்து எதிர்பார்ப்புகளை உங்களில் இருந்து வேறுபடுத்துங்கள். எதிர்பார்ப்புகளே ஏமாற்றங்களையும், தோல்விகளையும், விரக்திகளையும் மனிதனுக்குப் பரிசளிக்கின்றது.

**இசிந்தியா! நியூசிலாந்திற்கு எதிரான தொடரை இலங்கை அணி அபாரமாகக் கைப்பற்றி விட்டதே?**

*ஏ.சிந்துஜன், கொட்டகல.*

இலங்கையில் நடைபெற்ற நியூசிலாந்து அணிக்கு எதிரான ஒருநாள்தொடரை இலங்கை கைப்பற்றி விட்டது என்று நீங்கள் அறிந்த செய்தி நூறு வீதம் சரியானதோ.

ஆனால், குறித்த தொடரில் முழுவதிலும் இலங்கை அணியினருடன் சேர்ந்து 12 ஆவது வீரராக மழையும் களமிறங்கி இருந்தது அல்லவா? அதன் பலனாக பலருக்கும் புரியாத புதிராக இருக்கும் டக் வத் லூயிஸ் முறை ஊடாக இலங்கை அணி தொடர் வெற்றிகளைப் பெற்றுள்ளது என்ற மேலதிக தகவல் உங்களுக்கும் சுவரசியமாக இருக்கும் என் நம்புகிறேன்.

**இசிந்தியா! சம்பவங்கள் ஒன்றாக இருக்கும் போது ஒவ்வொருவரினதும் கண்ணோட்டம் வித்தியாசப்படுவது ஏன்?**

*ஏ.சிந்துஜன்.*

குறித்த சம்வங்கள் தொடர்பில் ஒவ்வொருவருக்கும் இருக்கின்ற அறிவும் அனுபவமும் வித்தியாசமானவை தானே...

[ 08 ஆம் பக்கத் தொடர்ச்சி...]

# கிழக்கு மாகாண...

கிழக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவராக த.தே.கூ.வின் சி.தண்டாயுதபாணி தெரி-வானார். அதே நேரம், கிழக்கு மாகாண அமைச்சர்களான 'ஷாபிஸ் நசீர் அமட் கல்வி அமைச்சர் விமலவீர திசாநாயக்கா, வீதி அபிவிருத்தி நீர்ப்பாசன அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை உள்ளிட்டோரும் பதவி ஏற்றிருந்தனர்.

அதனையடுத்து, 2ஆவது கிழக்கு மாகாண சபையின் கன்னியமர்வு ஒக்ரோபர் மாதம் முதலாம்திகதி நடைபெற்றது. இரண்டு நாட்கள் நடைபெற்றிருந்த இந்த அமர்வில், இதன் முதல் நிகழ்வாகசபை உறுப்பினர்களின் சத்தியப்பிரமாணம் நடைபெறும். இதனையடுத்து இச்சபையின் தவிசாளர் பிரதித் தவிசாளர் தெரிவுகள் இடம்பெற்றன. சபையின் தவிசாளராக ஆரியவதி கலப்பதி, உதவித் தவிசாளராக முன்னாள் மாகாணசபை அமைச்சர் எம்.எஸ்.சுபையிர் ஆகியோர் ஏகமனதாகத் தெரிவானார்கள்.

கிழக்கு மாகாணசபையின் இரண்டாம் நாள் அமர்வில், திவிநெகும சட்டமூலப் பிரேரணையை கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ.மஜீது முன்மொழிந்தார். வீதி, நீர்ப்பாசனம், வீடமைப்பு, கிராமிய மின்சார அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை இம்முன்மொழிவை வழிமொழிந்தார். தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் சிங்காரவேலு தண்டாயுதபாணி சட்டமூலம் பற்றியும் அதன் நோக்கங்கள் பற்றியும் கிழக்கு மாகாணசபை எதிர்நோக்கவுள்ள பிரச்சினைகள் பற்றியும் நீண்ட உரையை ஆற்றியிருந்தார்.

இவ்வாறு 2ஆவது கிழக்கு மாகாண சபையின் முதல் அமர்வு நிறைவடைந்ததை அடுத்து கிழக்கு மாகாணசபையின் அமைச்சரவைக் கூட்டம் கடந்த 17ஆம் திகதி கிழக்கு மாகாணசபை முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் தலைமையில் நடைபெற்று எடுக்கப்பட்ட தீர்மானங்களை – கிழக்கு மாகாணசபை அமைச்சரவையின் பேச்சாளரும், வீதி அபிவிருத்தி அமைச்சருமான எம்.எஸ். உதுமாலெப்பை ஒக்ரோபர் 19ஆம்திகதி வெளியிட்டிருந்தார்.

இதில் திருகோணமலை பொது வைத்தியசாலை அபிவிருத்தி, கிழக்கு மாகாணத்தில் உள்ள திரு கோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் யுத்தத்தினாலும், இயற்கை அனர்த்தத்தினாலும் பாதிக்கப்பட்டு, வறுமைக்கோட்டின் கீழ்வாழும் 14 கிராமங்களை இனங்கண்டு அவற்றை அபிவிருத்தி செய்து மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தல்,

அம்பாறை மாவட்டத்திலுள்ள மகாஓயா பிரதேசத்தில் காணப்படும் சுடுதண்ணீர் கிணறுகள் அமைந்துள்ள பிரதேசத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள், 2009ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டு கொடுப்பனவு வழங்கப்படாதுள்ள மிகுதிக் கொடுப்பனவை வழங்குதல் ஆகிய முக்கிய தீர்மானங்கள் அறிவிக்கப்பட்டிருந்தன.

இதற்குள் கிழக்கு மாகாணத்துக்கான விஜயத்தினை மேற்கொண்டிருந்த இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ. மஜீத்தை சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார். இந்தப் பேச்சுக்களில், மாகாணத்தின் பொருளாதார அபிவிருத்தி, சுற்றுலா மற்றும் ஆங்கில கல்வி அபிவிருத்தி உள்ளிட்ட மாகாணத்தின் எதிர்கால அபிவிருத்தி திட்டங்களுக்கு அமெரிக்கா வழங்கவுள்ள உதவிகள் மற்றும் ஒத்துழைப்பு குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில், கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கான இரண்டு நாள் செயலமர்வு திருகோணமலையில் 7ஆம் மற்றும் 8ஆம் திகதிகளில் திருகோணமலை நிலாவெளியிலுள்ள உல்லாச விடுதியில் இடம்பெற்றது.

நாட்டில் ஏற்பட்டிருந்த வடக்கு கிழக்கு சார் பிரச்சினைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்ட ஜன நாயக நடைமுறைகளுக்குள் நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் கிழக்கு மாகாண சபையானது மிகுந்த ஸ்த்திரத்தன்மை கொண்டதாகவும், சிறுபான்மை மக்களின் தேவைகள், உரிமைகளை நிறைவேற்றுவதாக அமைந்திருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியிலும் ஆரம்பித்திருக்கும் மாகாண சபையின் செயற்பாடுகள் அனைவராலும் கவனத்துடன் பார்க்கப்படுகிறது.

அந்த வகையில் தொடர்ந்து நடைபெறவுள்ள கிழக்கு மாகாண சபையின் ஆட்சியானது சிறப்புடன் செயற்பட வேண்டும் என்பதே எதிர்பார்ப்பாகும்.

[ 05 ஆம் பக்கத் தொடர்ச்சி...]

# பரிதியின்...

இனி தளபதி பரிதியின் மரணத்துக்கு வருவோம். பாரீஸில் உள்ள புலிகளின் சொத்துக்கள் (கடைகள், பில்டிங்குகள், வீடுகள் மற்றும் சில பண்ணைகள்) நெடியவன் குழுவின் கட்டுப்பாட்டில் இருக்கும் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு என்ற அமைப்பின் கீழ் உள்ளது.

இந்த அமைப்பின் பிரான்ஸ் பொறுப்பாளர், தற்போது கொல்லப்பட்டுள்ள பரிதி.

விநாயகம் குறூப் எடுத்துள்ள நிலைப்பாடு என்னவென்றால், புலிகளின் சொத்துக்கள் என்பது, ஈழவிடுதலை போராட்டத்துக்காக மக்கள் கொடுத்த பணம். அதை நெடியவன் குழு மட்டும் எடுத்துக் கொள்ள முடியாது. அதே போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமக்கும் (விநாயகம் குறூப்) அதில் பங்கு உள்ளது என்பது.

இந்தப் பணம் பற்றி கேள்வி கேட்க இப்போது யாரும் உயிருடன் இல்லாத நிலையில், நெடியவன் குறூப் எதற்காக அதில் மற்றைய அணிக்கு பங்கு கொடுக்க வேண்டும்? எனவே அவர்கள் பங்கு தரமறுக்கிறார்கள். இதுதான், தகராறு.

கடந்த சில வாரங்களாக, இரு குழுக்களுக்கும் இடையே, இரு விஷயங்களில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. ஒன்று, இந்த சொத்துப் பிரிக்கும் விவகாரம். மற்றையது, இம்மாத இறுதியில் வரப்போகும் மாவீரர் தினத்தை யார் நடத்துவது என்ற விவகாரம்.

பிரான்ஸில் உள்ள சொத்தில் கணிசமான பங்கை கேட்டது விநாயகம் அணி. அத்துடன், பாரீஸில் மாவீரர் தின நிகழ்ச்சியை நடத்தும் உரிமையை தமக்கு கொடுக்கும்படியும், அந்த டீலின் மறுபகுதியாக, பிரிட்டனில் நடக்கும் மாவீரர் தின நிகழ்வை நெடியவன் குறூப் நடத்திக் கொள்ளலாம் எனவும் பேசியது விநாயகம் அணி.

லண்டன் மாவீரர் தின நிகழ்ச்சியில், பாரிஸைவிட இலாபம் அதிகம் கிடைக்கும் என்பது ஒன்றும் இரகசியம் இல்லை.

நெடியவன் அணியின் சார்பில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட தளபதி பரிதி, இந்த இரண்டையுமே மறுத்துவிட்டார். "உங்களால் செய்ய முடிந்ததை, செய்து கொள்ளுங்கள்" என்று சொன்னதாக கேள்வி. விநாயகம் குறூப்பும் புறப்பட்டு சென்றுவிட்டது. பாரீஸில் மாவீரர் தின நிகழ்ச்சியை நடத்தும் ஏற்பாடுகளை பரிதியே முன்னின்று செய்து கொண்டிருந்தார்.

சுருக்கமாக சொன்னால், விநாயகம் அணி, பொட்டம்மானின் ஆட்கள். யுத்தத்தின்போது களத்தில் நின்றவர்கள்.

நெடியவன் அணி, காஸ்ட்ரோவின் ஆட்கள். வெளிநாடுகளில் உள்ள ஓய்வு பெற்ற போராளிகள் மற்றும், வீடியோவில் யுத்தம் பார்த்த வெளிநாட்டுப் புலிகள். இவர்களிடம் சொத்து உண்டு. அவர்களிடம் துடிதுடிப்பு உண்டு. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை முறிந்த இரண்டாவது நாள் இரவு, பரிதி சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளார்.

[ 17 ஆம் பக்கத் தொடர்ச்சி...]

# காலநிலை மாற்றமும்...

காலநிலை மாற்றத்தின் பிரச்சினைகளையும் சிக்கல்களையும் எதிர்கொள்வதற்கு எல்லோரிடமிருந்தும் பகிரப்பட்ட பொறுப்புகளுடன் ஒருங்கிணைந்த உறுதியான எதிர்கால இலட்சியம் இருப்பது அவசியமான ஒன்றாகும்.

தீர்மானங்களை மேற்கொள்ள விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்ட சாட்சியங்கள் இல்லாத போது முன்னெச்சரிக்கைத் தத்துவங்களைப் பின்பற்ற வேண்டும்.

காலநிலை மாற்றங்களினால் விவசாயத் துறை, விலங்கு வேளாண்மை மற்றும் மீன்பிடித் துறையில் ஏற்படும் பாதகமான விளைவுகளை எதிர்கொள்ளவும், உணவு உற்பத்தியிலும், உணவுப் பாதுகாப்பிலும் ஏற்படும் தாக்கங்களைக் குறைப்பதற்கும் சரியான நேரத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

உணவு உற்பத்தியில் பொருத்தமான பாரம்பரிய அறிவும், செயன்முறைகளும் அங்கீகரிக்கப்பட்டு, அவற்றின் நிலைபேறான பாவினை கருத்திற் கொள்ளப்படும் அதே வேளை, பொருத்தமான முறையில் காலநிலைக்கு உகந்த – சுற்றாடல் நேயமுள்ள புதிய தொழில் நுட்பங்களை ஊக்குவிக்க வேண்டும்.

காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் அதிகரித்த வெப்பநிலை மற்றும் கடல் நீர் மட்டம் உயர்வு போன்ற சீரற்ற மாற்றங்களினாலும் மாசடைவதினாலும் நீர் வளங்களில் ஏற்படும் தாக்கங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

நாட்டிற்குப் பொருத்தமான குறைந்தளவான தொழில்நுட்பங்களையும், பொருத்தமான இசைவாக்க உபாயங்களையும் மனித குடியேற்றத் திட்டங்களிலும், காணிப் பயன்பாட்டுத் திட்மிடலிலும், நகர அபிவிருத்தியிலும் கூட்டிணைத்தல் ஒரு சிறந்த முறையாகும்.

காலநிலை மாற்றங்களிலிருந்து மக்களின் ஆரோக்கியத்தினைப் பாதுகாக்கவும் காலநிலை மாற்றங்களின் பாதகமான தாக்கங்களைக் கவனமாகக் கண்காணிக்கவும், எல்லா மட்டங்களிலும் பொறி நுட்பமொன்று ஸ்தாபிக்கப்பட்டு, அது செயற்படுத்தப்பட வேண்டும்.

கழிவுகள் உருவாகுவதைத் தடுப்பதற்கு முன்னுரிமையளித்து, ஒருங்கிணைக்கப்பட்ட கழிவு முகாமைத்துவ முறைகளை ஊக்குவிப்பதோடு நாட்டிற்குப் பொருத்தமான குறைந்தளவான பசிய வீட்டு வாயுக்களை வெளிவிடும் தொழில் நுட்பங்கள் உட்பட ஒருங்கிணைந்த கழிவு முகாமைத்துவ செயன்முறைகளைப் பின்பற்றல் மிகச் சிறந்த பலாபலன்களைத் தரும்.

சுற்றாடல் நேயமுள்ள, சமூக ரீதியில் ஏற்றுக் கொள்ளக் கூடிய விவசாய, கால்நடை செயன்முறைகளை நிலைபேறான அபிவிருத்தி என்னும் கட்டமைப்பிற்குள் ஊக்குவிப்பதன் மூலம் சாதகமான புதிய தொழில் நுட்பங்களையும் உள்வாங்கி ஊக்குவிப்பதோடு பொருத்தமான பாரம்பரிய அறிவு முறைகளையும் பயன்படுத்தினால் அது இந்த நோக்கத்திற்கு வெற்றியளிக்கும்.

இயற்கை வளங்களில் ஏற்படக் கூடிய பாதகமான தாக்கங்களைக் கட்டுப்படுத்த, இயற்கை வளங்களை நிலைபேறாகப் பயன்படுத்துவதற்குச் சுற்றாடல் நேயமுள்ள உற்பத்திகள், செயன்முறைகள், தொழில் நுட்பங்கள் என்பன இனங் காணப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டு, அபிவிருத்தி செய்யப்பட்டு, அது பரவலாக்கப்பட வேண்டும்.

நிலைபேறான, அபிவிருத்திப் பாதையில் சுற்றாடல் நேயமுள்ள வாழ்க்கை முறைகளையும், செயன்முறைகளையும் பரவச் செய்வதற்காக குடும்ப மைய நிலைபேறான நுகர்வும், உற்பத்தியும் ஊக்குவிக்கப்படுவது அவசியமாகும். காலநிலை மாற்றத்தின் பன்முகத்தன்மையை எதிர்கொள்வதற்கு அனைத்து மட்டங்களிலும் உள்ள பங்காளிகளின் அறிவையும் நேரிய ஆக்கபூர்வ சிந்தனைகளையும், திறனையும் ஊக்குவிப்பதற்கான பல்திறன் அணுகு முறைகள் பின்பற்றப்படுவது நன்மை பயக்கும்.

பாடசாலைக் கல்வியின் ஊடாக நாட்டிற்குப் பொருத்தமான காலநிலை மாற்ற தூண்டற்பேறு கொண்ட நடத்தை மாற்றங்களை ஊக்குவிப்பதன் மூலம் காலநிலை மாற்றம் தொடர்பான விடயங்களை எதிர்கொள்வதற்கு முனைப்புடன் செயற்பட்டு பொறுப்பான பங்களிப்பினை நல்குவதற்கு ஆதரவளித்தல் மூலம் அதனை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

சம்பந்தப்பட்ட துறைகளின் கீழ் சட்டத் தேவைகளை ஒன்றிணைப்பதன் மூலம் காலநிலை மாற்றத்திற்கான சவால்களை எதிர்கொள்வவதற்கு வினைத்திறனான நடவடிக்கைகளை மேற்கொள்ள சட்ட, ஒழுங்கமைப்பு பொறிநுட்பங்களை வலுவூட்டி நேர்மையான முறையில் இந்த சட்ட ஏற்பாடுகள் அமுல் செய்யப்படுவதை உறுதி செய்து கொள்ள முடியும்.

காலநிலை மாற்றங்களினால் நாடு பாதிக்கப்படக் கூடிய தன்மை தொடர்பாக சமூகத்திற்கு காலத்திற்குக் காலம் விழிப்புணர்வூட்டலும் தணிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலும் மிக முக்கியமானது. மக்கள், அவர்களின் வாழ்வாதாரம், சூழற் தொகுதிகள் என்பனவற்றில் காலநிலை மாற்றத்தின் பாதகமான விளைவுகளைத் தவிர்ப்பதற்கு அல்லது குறைப்பதற்கான இசைவாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

நிலைபேறான அபிவிருத்திப் பாதையில் பசிய வீட்டு வாயுக்கள் வெளியேறுவதைக் கட்டுப்படுத்தல். காலநிலை மாற்றத்துடன் தொடர்புடைய பன்முகத் தன்மையுள்ள விடயங்களில் சமுதாயத்தின் அறிவை மேம்படுத்தும் மற்றும் தீர்மானங்களை மேற்கொள்ளும் போது புத்திசாலித்தனமான முடிவுகளை எட்டுவதற்கு அவர்களின் வல்லமையை உருவாக்கலும் வேண்டும்.

இவை எல்லாம் நடைமுறைக்கு வந்தால் நாம் மாறி வரும் காலநிலைக்கு ஓரளவு முகங்கொடுக்கத் தயாராய் இருக்கிறோம் என்று நிம்மதியடைய முடியும்.

[ 09 ஆம் பக்கத் தொடர்ச்சி...]

# விதியால் வந்தது...

ஒபாமாவுக்கு ஐ.நா. பொதுச் செயலாளர் பான்கிமூன் வாழ்த்து தெரிவித்து வெளியிட்ட அறிக்கையில், "சிரியா மற்றும் தட்பவெப்ப நிலை மாற்றம் உள்ளிட்ட உலகளாவிய சவால்களைச் சந்திப்பதில் ஒபாமாவுடன் தொடர்ந்து பாடுபடுவதை எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன" என்று குறிப்பிட்டுள்ளார்.

தாங்கள் அமெரிக்க அதிபராக வெற்றி பெற்றதற்கு நான் வாழ்த்தைத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி கொள்கிறேன். கடந்த நான்கு ஆண்டுகளாக நம்மிடையே சிறந்த நட்புறவு இருந்து வந்துள்ளது. தங்கள் மீது அமெரிக்க மக்கள் மீண்டும் வைத்துள்ள நம்பிக்கைக்கு தங்களது தலைமைப்பண்புகளே காரணம். நமது உறவுகள் மேலும் வலுவடைவதை எதிர்பார்க்கிறேன் என்று இந்திய பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், அமெரிக்காவை கடனிலிருந்து மீட்பேன் என இரண்டாவது முறையாக அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பராக் ஒபாமா கூறியுள்ளார். தேர்தல் முடிவுகள் வெளியாகிக் கொண்டிருந்தபோது, அமெரிக்க அதிபர் ஒபாமா, தனது பிரசார தலைமையகமான சிக்காகோவில் பேசியதாவது;

எனக்கு ஆதரவாக வாக்களித்து மீண்டும் அதிபராக தேர்ந்தெடுத்த அனைவருக்கும் முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வெற்றி விதியால் வந்தது அல்ல, எதிர்பாராமல் வந்ததும் அல்ல, மக்களாகிய நீங்கள் என் மீதான நம்பிக்கையால்தான் இந்த வெற்றியைத் தந்திருக்கிறீர்கள்.

மேலும் பகுதி பகுதியாக திட்டமிட்டு பிரசாரத்தில் ஈடுபட்ட அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு ஆதரவளித்த உங்களுக்கு மீதம் உள்ள எனது பதவிக் காலம் முழுவதும் மரியாதையுடையவனாக இருப்பேன். ஏற்கெனவே அளித்த வாக்குறுதிகளில் மீதம் உள்ள பணிகளைச் செய்து முடிப்பேன்.

பிரசாரத்தின்போது எனக்கு கடும் போட்டியைக் கொடுத்தமைக்காக குடியரசு கட்சி அதிபர் வேட்பாளர் மிட் ரோம்னி மற்றும் அக்கட்சியின் துணை அதி-பர் வேட்பாளர் பால் ரயனை தொலைபேசியில் தொடர்புகொண்டு வாழ்த்து தெரிவித்தேன். தேர்தல் பிரசாரத்தின்போது, ரோம்னியுடன் கடுமையாக போட்டி போட வேண்டி இருந்தது.

இருவருக்குமே நாட்டின் மீது அதிக பற்று இருந்ததே இந்தப் போட்டிக்குக் காரணம். அமெரிக்காவின் எதிர்காலத்தைப் பற்றி நாங்கள் அதிகம் கவலை கொள்கிறோம். நாட்டின் வளர்ச்சிக்காக பணியாற்ற ரோம்னியின் ஒத்துழைப்பும் அவசியம் தேவைப்படுகிறது.

இதுதொடர்பாக ரோம்னியுடன் மீண்டும் நேருக்கு நேர் உட்கார்ந்து பேச ஆவலாக உள்ளேன். அமெரிக்காவை கடனிலிருந்து மீட்பதற்காக அவருடன் இணைந்து பணியாற்றத் தயாராக உள்ளேன்.

நமது பாதை கடுமையாக இருந்தபோதும், பயணம் தூரமாக இருந்தபோதும், உங்களை மீண்டும் தேர்ந்தெடுத்துள்ளோம் என்பதை அமெரிக்க மக்கள் நினைவுபடுத்தி உள்ளனர். அமெரிக்கா சாதிக்க வேண்டியது இன்னும் ஏராளமாக உள்ளது என்பதை அறிவோம். அதை அடைவதற்காக அயராது செயல்படுவோம் என்றார் ஒபாமா.




# காதிலை பூ

## கந்தசாமி

வணக்கமுங்கோ! பாவம் சும்மா ஊருக்குள்ள கவனிக்கப்படாத புத்திஜீவிகளில் ஒருவராக சுத்திக் கொண்டு திரிஞ்ச நம்முடைய வாத்தியார் போனவாரம் திடீரென்று ஆசுபத்திரியில் அட்மிட் பண்ணிப் போட்டார் எண்ட செய்தியை கேட்டதுமே அதிர்ந்து போயிட்டனுங்கோ.

அவரின்ர போன் நம்பருக்கு அடிச்சால் அதுவும் வேலை செய்யவில்லை. எனக் கென்னவோ பயமாகப் போயிட்டுதுங்கோ. உந்த ஆள் கதைக்கிறதுகளை ஒரு கதை யெண்டு யாரும் சீரியசாக எடுத்துக்கொண்டு, ஆளை தூக்கிக் கொண்டுபோய் ஏதும் செய்து போட்டாங்களோ எண்டும் ஒரு பயமும் வந்திட்டுதுங்கோ.

சும்மாவே அந்தச் சந்தியில நாலு சடலம் கிடக்குது எண்டிறாங்கள், இந்தச் சந்தியில ரெண்டு சடலம் கிடக்குது எண்டிறாங்கள். அது மட்டுமே கடைக்குப்போன மனிசன் எங்கேயோ காட்டுக்குள்ள பிணமாகக் கிடக்குது எண்டுவேறை பீதியைக் கிளப்புறாங்கள்.

நாட்டின்ர கரன் சிட்டிவேஷன் உப்பிடித் தானுங்கோ போய்க் கொண்டிருக்குது. உந்த நிலைமையில வாத்தியும் வாயை வச்சுக் கொண்டு சும்மா இருக்கமாட்டார். ஏதோ உதுகளைப் பற்றிக் கதைக்காட்டில் தூக்கமே வராத ஆள் மாதிரி தடுமாறிப் போயிடுவார், எண்டிட்டு அவருடைய வீட்டுக்கே போனனுங்கோ. ஆளுக்கு உடம்புக்கு முடியல்லைதானுங்கோ. படுக்கையிலதான் இருந்தவர். என்னைக் கண்டதும் ஏதோ உஷார் வந்தவர் மாதிரி எழும்பி இருக்க முயற்சி செய்தாருங்கோ.

'என்ன வாத்தி என்ன ஆச்சுது ஆசுபத்தி ரியில அட்மிட் ஆகி இருக்கிறீங்கள் எண்டு சொன்னாங்களே எண்டனுங்கோ.

அட்மிட் ஆகி இருந்தது உண்மைதான். இண்டைக்கு காலையிலதான் டிக்கட் வெட்டி விட்டாங்கள். சும்மா தலை யைச் சுத்துமாப்போலை இருந்துச்சுது. பிள்ளையள் தான் பயந்து போயிட்டுது கள். நான் ரெஸ்ட்டாக இருக்கவேணுமெண்டு போனையும் வாங்கிப் போட்டுதுகள் எண்டாருங்கோ.

ஏன் எதையாவது கடுமையாக யோசிச்சுப் போட்டிங்களோ. பேரப்பிள்ளைகளைப் பார்க்க வேணும் எண்டால் கனடாவுக்கு ஒருக்கால் போய் பிள்ளைகளைப் பார்த்துக் கொண்டு வாங்கோவன் எண்டனுங்கோ.

அதெல்லாம் ஒண்டுமில்லை. இப்ப கனடாவுக்குப் போனால் குளிர் தாங்கமுடி யாமல் பெட்டியிலதான் நாடு திரும்பவேண்டி யிருக்கும். அதை விடுமப்பா, மனுசனுக்கு தலையைச் சுத்துறதுக்கு நாட்டில பிரச்சினையா இல்லை? உதுகளை யோசிச்சால் ஒருநாள் இல்லாட்டில் ஒரு நாள் ஹாட் அட்டேக் பண்ணும்போலை இருக்கும், நீங்கள் சும்மா வருத்தத்தைப் பற்றிக் கேட்காமல் நாட்டு நடப்பைப் பற்றிச் சொல்லுங்கோவன் எண்டாருங்கோ.

எதைச் சொல்லச் சொல்லுறியள், நீங்கள் ரெஸ்ட்டாக இருங்கோ. பிறகு நாங்கள் ஆறுதலாக பேசுவோம் எண்டனுங்கோ.

இஞ்ச கந்தசாமி அதென்னப்பா அரசாங்க அமைச்சர் ஒருவர் வடக்கு மாகாண சபைத் தேர்தலில தான்தான் முதலமைச்சர் வேட்பாளர் எண்டு சொல்லுறார். அதே அரசாங்கத்தில இருக்கிற ரெண்டு அமைச்சர்கள் வடமாகாண சபைத் தேர்தலை நடத்த விடமாட்டோம். அதையும் மீறி நடத்தினால் அதற்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுப்போம் எண்டினம். உவையள் மீறி நடத்தினால் எண்டு சொல்லுறதைப் பார்த்தால் நேரடியாகவே, நாமெல்லாம் பலம் பொருந்திய ஜனாதிபதி யெண்டு நினைச்சுக் கொண்டு இருக்கிற மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகவே இவை நடவடிக்கை எடுப்பினம் எண்ட மாதிரி யெல்லோ சொல்லி இருக்கினமே என்னப்பா நடக்குது எண்டு கேட்டாருங்கோ.

வாத்தியின்ர கேள்விக்கு என்ன பதில் சொல்லுறது எண்டு தெரியவில்லையுங்கோ. அவருடைய கடைசி மகளைக் கூப்பிட்டு பிள்ள அப்பாட போனை வாங்கிப் போட்டியள் உந்தத் ரிவி, ரேடியோவையும் கொஞ்சநாளைக்கு, இவருக்கு டிஸ்ரப் பண்ணாம ஓவ்வில வைச்சியள் எண்டால் நல்லம்போலை எண்டு சொல்லிப்போட்டு, வாத்தி ஓய்வா இருங்கோ நான் இன்னொரு நாளைக்கு வாறன் ஆறுதலாக இதுகளைப் பற்றிப் பேசுவோம் எண்டு வெளிக் கிட்டேனுங்கோ.

நான் வெளிக்கிடவும் வாத்தி எதையோ சொல்லுவதற்கு முண்டினாருங்கோ. நான் தெரியாத மாதிரியே நழுவிட்டேனுங்கோவ்.

**யாவும் கலப்படமற்ற பொய்**

# அச்சுக் கலையின் தந்தை






என் மனைவி தனக்கு எதுவுமே, ஒரு சின்ன நகைகூட வாங்கித் தரவில்லை என்று குறைபட்டுக் கொள்ளு கிறாள்.

நான் இவ்வளவு பொருளையும் எந்தக் காரியத்தில் கொண்டுபோய் முடக்கி இருக்கிறேன் என்பதைக்கூட அவளிடம் கூறாததில் அவளுக்கு ரொம்பக் கோபம்.

"உண்மைதான் கட்டன்பர்க்" என்று மற்றொரு கூட்டாளியும் ஆமோதித்தான். "நாம் இப்படி இரகசியமாகக் காரியங்கள் செய்வது மக்களுக்கு நம்மீது சந்தேகத்தை உண்டாக்கி இருக்கிறது. நாம் மந்திரவாதிகளோ, சூனியக்காரர்களோ என்று கட்டன் பர்க்குக்கும் இப்படிப்பட்ட வதந்திகள் உலவுவதைப் பற்றித் தெரியும். விருந்துகளிலும் மற்ற கூட்டங்களிலும் கட்டன்பர்க் கலந்துகொள்ளும்போது, அவரது நண்பர்கள் அவரை வினோதமாக நோக்குவார்கள். பாமர மக்கள் அவரை மந்திரக்காரர் என்றே கூறினார்கள். மந்திரவாதிகளுக்குக் கெட்ட ஆவிகளின் நட்பு இருக்கும். மக்கள் அப்படிப்பட்டவர்களை வெறுப்பார்கள்.

தன் கூட்டாளிகளின் வார்த்தைக்குக் கட்டன் பர்க், "முட்டாள்கள் அப்படித் தான் ஏதாவது கூறிக்கொண்டிருப்பார்கள். அதையெல்லாம் நாம் பொருட்படுத் தத் தேவையில்லை. நாம் மேற்கொண்டுள்ள இந்தக் காரியம் மக்களை அறியா மையிலிருந்து விடுவிக்கப் போகிறது. அச்சடிக்கப்பட்ட பைபிளின் பிரதிகளை மக்கள் தங்கள் கரங்களில் காணும்போது நாம் மந்திரவாதிகளல்ல, கெட்ட ஆவிகளின் தோழர்களல்ல என்பதை அவர்கள் உணருவார்கள்" என்றார்.

ஆனாலும் ஏதாவது மந்திரம் மாயம் நிகழவேண்டும் என்றும் விரும்பினார் ஜோன். எதற்காக? தான் மேற்கொண்ட காரியத்திற்கான பொருள் தேவைக்கு, முடிந்தவரை கடன் வாங்கிவிட்டார். எந்தவகையில் எத்தனை பணம் வந்தாலும் அத்தனையையும் தன் தயாரிப்புக்கான ஆயுதங்களும் உலோகமும் வாங்கவே செலவிட்டார். செலுத்த வேண்டிய வரிகளைக் கூடச் செலுத்தவில்லை. கூட்டாளிகள் பொறுமை இழந்து போனார்கள்.

(தொடரும்...)

# இந்தவாரம் உங்கள் பலன்

(15.11.2012 தொடக்கம் 21.11.2012 வரை)

### மேடம்

வெகுகாலமாக விட்டுப்போன பழைய உறவினர்களுடன் தொடர்புகள் ஏற்படும். காதல் விசயங்களில் எதிர்பார்த்து இருந்த நல்ல செய்திகள் வந்துசேரும். உடல் நிலையில் முதுகுமூலம் போன்ற தொல்லைகள் வந்துபோகும். செய்யாத குற்றங்களுக்காக வீண் பழிச்சொல் வர இருப்பதால் எந்த விசயத்திலும் மிகவும் கவனமுடன் நடந்து கொள் வது நல்லது. அண்டை அயல்வீட்டுக்காரர் களுடன் மிகவும் எச்சரிக்கையாய் பேசிப் பழக வும். வீடு, வாகனங்களை புதுப்பித்தலுக்காகப் புதிய கடன் வாங்குவதற்கு முயற்சிகளைச் செய்வீர்கள். மாணவர்கள் கல்வி மற்றும் விளையாட்டுக்களில் கவனமுடன் இருக்கவும். மஹான்களின் எதிர்பாராத தரிசனங்களால் மனநிம்மதி அடைவீர்கள்.

### இடபம்

புதிய வீடு மாற்றம் செய்வதற்கான முயற்சிகளில் நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். சுபகாரிய சம்பந்தமாக வடதிசையில் இருந்து நல்ல செய்திகள் வந்துசேரும் காலமாகும். புடைவைகள் எடுப்பதில் ஆர்வ மாக இருப்பீர்கள். கணவன், மனைவி உறவு களில் காரணமற்ற சச்சரவுகள் வந்துநீங்கும். மஹான்களின் எதிர்பாராத தரிசனங்களால் மனநிம்மதி அடைவீர்கள். வீடு மற்றும் வாகனங்களைப் பழுது பார்ப்பதன் மூலமாகப் புதிய செலவுகள் வந்துசேரும். தாயின் உடல்நிலையில் இருந்துவந்த பாதிப்புகள் சற்றுக் குறையும். நீண்ட தூர பயணங்களின் மூலம் எதிர்பார்த்திருந்த காரியங்கள் நிறைவேறுவதற்கு வாய்ப்புகள் உள்ளது.

### மிதுனம்

நிலபுலன்கள் வாங்குவோர் விற் போர்கள், கட்டட சம்பந்தமான தொழிற் செய் வோர்கள், கார், லொறி போன்ற வாகனத் தொழில் செய்வோர்கள், கலைத்துறை சார்ந்தவர்கள், சிற்றுண்டி உணவுப் பொருட்கள் மற்றும் நறுமணப் பொருள் வியாபாரிகள், ஆடம்பர அலங்காரப் பொருட்களின் வியாபாரிகள், ஆகியோர்கள் நற்பலன் அடைவீர்கள். மற்றவர்களின் விசயங்களில் தலையிட்டு மனநிம்மதி இழக்க வேண்டாம். பிள்ளைகளால் சிற்சில தொல்லைகள் ஏற்பட்டாலும் அவர்களால் பெயர் புகழ் அடைவீர்கள். குடும்பத்தில் தடைப் பட்டு வந்த சுபகாரிய நிகழ்ச்சிகளை நடத்து வதற்கான புதிய முயற்சிகளில் ஈடுபட்டு வெற்றிபெறுவீர்கள்.

### கடகம்

விளையாட்டுத் துறை சார்ந்தவர்கள் சற்று கவனமுடன் இருப்பது நல்லது. நாட் பட்ட பழைய பிரச்சினைகள் மீண்டும் தலை தூக்குவதன் மூலம் மனநிம்மதிக் குறைவு ஏற்படலாம். நண்பர்கள் வீட்டுச் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக நீண்ட தூரப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். பொருளாதாரத்தில் இருந்து வந்துள்ள நெருக்கடிகள் மாறி சற்று முன்னேற்றமான சூழ்நிலை காணப்படும். வெகுகாலமாக காணாமற்போன பொருட்கள் மற்றும் நபர்கள் திரும்ப வீடுவந்து சேரவாய்ப்பு உள்ளது. உடல்நிலையில் வயிறு மற்றும் மூல சம்பந்தமான உபாதைகள் வந்துபோகும்.

### சிங்கம்

தாய் உடல்நிலை பாதிப்பால் மருத் துவச் செலவுகள் உண்டாகலாம். குழந்தை களின் உடல்நிலையில் மிகவும் கவனமுடன் இருக்கவும். பொருளாதாரத்தில் நெருக்கடி யான சூழ்நிலை ஏற்பட்டாலும் மிக சிரமத் தின் பேரில் சரிசெய்வீர்கள். குலதெய்வ ஆலயத் திருப்பணிகளில் பங்குகொண்டு மனநிறைவடைவீர்கள். வங்கிகளின் மூலமாக நீண்டகாலமாக எதிர்பார்த்து இருந்த பணம் கிடைக்க இன்னும் சற்றுக்கால தாமதம் ஆகலாம். நண்பர்களால் வீண் பிரச்சினைகள் வர இருப்பதால் மிகக் கவனமுடன் இருக்கவும். உற்றார், உறவினர்களின் வரவுகளால் நன்மை அடைவீர்கள்.

### கன்னி

பணப் புழக்கத்தில் இருந்து வந்த நெருக்கடிகள் மாறி நல்ல முன்னேற்றம் காணப்படும். குடும்பத்தில் நடைபெற வேண்டிய சுபகாரிய நிகழ்ச்சிகளுக்காகப் புதிய கடன் வாங்குவீர்கள். தந்தை வழிச் சொந்தபந்தங்களால் எதிர்பாராத சில ஆதாயங் களை அடைவீர்கள். தாயின் உடல்நிலை பாதிப்புக்களால் சிற்சில மருத்துவச் செலவு கள் வந்துசேரும். தொலைதூரப் பயணங் களால் எதிர்பார்த்த காரியம் நிறைவேறும். அரசியல்வாதிகளிடம் இருந்து எதிர்பார்த்து இருந்த நல்ல தகவல்கள் வந்துசேரும். புதிய நண்பர்களிடம் சற்று எச்சரிக்கையுடன் பேசிப் பழகுதல் நல்லது.

### துலாம்

மின்சாரம் நெருப்பு சம்பந்தமான பொருட்களின் வியாபாரிகள், பொலிஸ் துறை சார்ந்தவர்கள், விளையாட்டுத் துறையைச் சேர்ந்தவர்கள், ஹோட்டல் தொழில் செய்வோர் கள், கேஸ் மற்றும் வெல்டிங் சம்பந்தமான பொருட்களின் வியாபாரிகள் ஆகியோர்கள் நற்பலன் அடைவீர்கள். பழைய நண்பர்களின் சந்திப்பால் ஒரு சிலருக்கு ஆதாயம் உண் டாகும். பிள்ளைகளுக்கு மருத்துவச் செலவுகள் உண்டாகும். தந்தை - மகன் உறவுகளில் இதுவரையில் இருந்துவந்த கருத்து வேறுபாடுகள் குறைந்து ஒற்றுமையாய் இருப்பார்கள். சகோதர சகோ தரிகளின் சுபகாரிய நிகழ்ச்சிகளுக்காகப் புதிய கடன்கள் வாங்குவதற்கு முயற்சிப்பீர்கள்.

### விருச்சிகம்

வேண்டாத விசங்களில் தலையிட்டு வீண் வம்புகளை விலைக்கு வாங்கா தீர்கள். இரும்பு, இயந்திரம் இரசாயனம் போன்ற தொழில் செய்வோர்கள், ஆலை அதிபர்கள், எண்ணெய் வியாபாரிகள், பலசரக்கு கடை நடத்துவோர்கள், பழைய பொருட்களை விற்பனை செய்வோர்கள், இன்சினியரிங்துறை சார்ந்தவர்கள் ஆகியோர்கள் நற்பலன் அடைவீர்கள். தந்தை, மகன் உறவுகளில் இருந்துவந்த கருத்து வேறுபாடுகள் குறைந்து ஒற்றுமையுடன் இருப்பார்கள். குழந்தைகளின் மனமகிழ்ச்சிக்காக உல்லாசப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். வெகு நாட்களாக வராத கடன் கொடுத்துள்ள பணம் திரும்பக் கிடைக்கும். பொருளாதாரத்தில் இருந்துவந்த நெருக்கடிகள் சற்றுக் குறைந்து காணப்படும்.

### தனுசு

மாணவர்களுக்கு கல்வியில் எதிர்பாராத சில தடைகள் வந்துபோக வாய்ப்பு உள்ள தால் மிக எச்சரிக்கையுடன் பயின்று வருதல் நல்லது. புதிய வீடு மற்றும் வாகனங்களை வாங்குவதற்கான முயற்சிகளில் சில பின்னடைவு கள் வந்துசேரும். உடம்பில் வாயு மற்றும் வயிறு சம்பந்தமான உபாதைகள் வந்து போகலாம். குடும்பத்தில் தடைப்பட்டு வந்த சுபகாரிய நிகழ்ச்சிகள் நடைபெற இன்னும் சற்றுக் காலதாமதம் ஆகலாம். வேலையில்லாத படித்த இளைஞர்களுக்குப் புதிய வேலை வாய்ப்புகள் வந்துசேரும் காலமாகும். உற்றார் உறவினர்களின் எதிர்பாராத வரவுகளால் பொருட்செலவுகள் ஏற்பட்டாலும் அவர்களால் சில ஆதாயங்களை அடைவீர்கள்.

### மகரம்

திருமணம் போன்ற சுபகாரிய சம்பந்த மான முயற்சிகளில் சில தடைகள் வந்து சேரும், நண்பர்களால் வீண்பொருட்செலவு களும் மனநிம்மதி இன்மையும் ஏற்படலாம். கணவன், மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். தீராத நாட்பட்ட நோய்கள் தீர் வதற்காகப் புதிய மருத்துவர்களின் உதவி கள் கிடைக்கும். விட்டுப்போன பழைய உறவு கள் மீண்டும் துலங்கும். உற்றார், உறவினர் களின் எதிர்பாராத திடீர் வரவுகளால் பொருட் செலவுகள் வந்துசேரும். வேலை இல்லாதவர் களுக்குப் புதிய வேலைவாய்ப்புகள் கிடைப் பதற்கு வாய்ப்பு உள்ளது. மற்றவர்களிடம் இருந்த எதிர்பார்த்த உதவிகள் கிடைக்க கூடிய காலமாகும்.

### கும்பம்

அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் மிகக் கவனமாகப் பேசிப் பழகுதல் நல்லது. பொருளாதாரத்தில் இதுவரையில் இருந்த நெருக்கடிகள் மாறி முன்னேற்றமான சூழ் நிலை காணப்படும். உத்தியோகம் பார்ப்பவர் களுக்கு உத்தியோக உயர்வுடன் கூடிய பணி மாற்றங்கள் ஏற்படலாம். வெகுகாலமாகப் பிரிந்துபோன கணவன், மனைவி இருவரும் ஒன்றுசேரும் காலமாகும். புதிய கடன் வாங்கிப் பழைய கடன்களை அடைப்பீர்கள். கணிதம் எழுத்துத்துறை சார்ந்தவர்கள், அச்சுத் தொழில் செய்வோர்கள், வழக்கறிஞர் கள், கவிஞர்கள், புகைப்படக் கலைஞர்கள், வங்கிப் பணியாளர்கள் ஆகியோர்கள் நற்பலன் அடைவீர்கள்.

### மீனம்

காதல் விசயங்களில் நண்பர்களின் உதவியால் நல்ல செய்திகளைப் பெறுவீர்கள். மாணவர்கள் கல்வியில் சில தடைகள்வர இருப்பதால் கவனமுடன் சென்றுவரவும். நீண்டகாலமாக எதிர்பார்த்து இருந்த புதிய தொழில்களை ஆரம்பம் செய்வதற்காகப் போட்ட திட்டங்களில் வெற்றிபெறுவீர்கள். வீடு, வாகனங்களைப் பழுது பார்ப்பதன் மூலமாகப் புதிய பொருட்செலவுகள் வந்து சேரலாம். கண், காதுகளில் சிற்சில உபாதை கள் வந்துபோகலாம். நீண்டகாலமாக தடைப்பட்டு வந்துள்ள குலதெய்வ ஆலய வழிபாடுகளைச் செய்துவர வாய்ப்பு உள்ள காலமாகும்.

## உண்மை!

**மனித** உடலை விதவிதமான கோணத்தில் வளைத்து மோட்டார் சைக்கிள் போன்று வடிவமைத்துள்ளார் அமெரிக்காவை சேர்ந்த ட்ரைனா என்ற பெண். இதற்காக பல பெண்களை இவர் பயன்படுத்துகின்றார். மோட்டார் சைக்கிள் போன்ற உருவத்துடன் மட்டுமின்றி அந்த மோட்டார் சைக்கிளில் சீறிப் பாய்வதைப் போன்றும் புகைப்படங்களுக்கு போஸ் கொடுக்கிறார் ட்ரைனா. மோட்டார் சைக்கிளின் வடிவத்திற்கேற்ப பல வர்ணங்கள் உடலில் பூசப்படுகின்றன. ஒரு தடவையில் 5-6 நிமிடங்கள் தொடர்ச்சியாக உடலைவளைத்து போஸ் கொடுப்பதுடன் முழுப்படப்பிடிக்கும் சுமார் 18 மணித்தியாலங்கள் வரை நேரம் எடுக்கும் எனத் தெரிவிக்கிறார். அச்சைக்கிள்களையும் காட்சிப்படுத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக ட்ரைனா மேரி தெரிவித்துள்ளார்.





## சர்ச்சை

**லண்டனை** சேர்ந்த கட்டடக்கலை நிபுணரான ஜேக் மன்றோ, அனைத்து வகையான செங்கற்களையும் கொண்டு கட்டடங்களை வடிவமைப்பதில் கைதேர்ந்தவர். கட்டுமானத்தில் அடிக்கடி புதுமையை புகுத்திவரும் இவர் தற்போது சர்ச்சைக்குரிய செங்கல்லை தயாரித்துள்ளார். 26 வயதான ஜேக் மன்றோ விலங்குகளை வெட்டி இறைச்சி தயாரிக்கும் தொழிற்கூடங்களில் இருந்து இரத்தத்தை ஒட்டுமொத்தமாக வாங்கியுள்ளார். இதனை மணலுடன் கலந்து செங்கல் போன்று தயாரித்து, அவற்றை மின் அடுப்பில் 70 டிகிரி வெப்பநிலையில் சுமார் ஒரு மணி நேரம் வேக வைத்து பதப்படுத்துகிறார். ஒவ்வொரு இரத்த செங்கல் தயாரிப்பதற்கும் அவர் 35 லீற்றர் இரத்தத்தை பயன்படுத்துகிறார்.

இதுபற்றி ஜேக் கூறுகையில், இந்த செங்கல் தண்ணீர் புகமுடியாத அளவுக்கு மிகவும் கெட்டியாக உள்ளது. இரும்பு கம்பிக்குப் பதில் இதனை பயன்படுத்த முடியும். மேலும் இந்த செங்கற்களைக் கொண்டு எகிப்தில் முன்மாதிரியான ஒரு கட்டுமானத்தை நிர்மாணிக்க திட்டமிட்டிருக்கிறேன்.

இருப்பினும் இந்த செங்கற்களை கொண்டு வீடு கட்டினால் அதில் மக்கள் வசிக்க விரும்புவார்களா? என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும் என்றார்.




## ஓவியம்


**வாகனப்** போக்குவரத்துக்கள் மலிந்து போயுள்ள இக்காலத்தில் விபத்துக்கள் என்பது நாளாந்த நிகழ்வுகளாக மாறிப்போய்விட்டது. தினமும் நூற்றுக்கணக்கான விபத்துகள் இந்தப் பூமிப்பந்தில் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. சீறிப் வழுக்கிச் செல்லும் தார் வீதிகளில் சீறிச்செல்லும் வாகனங்கள் நொடிப் பொழுதில் உருக்குலைந்து சின்னாபின்னமாகிப் போகின்ற சம்பவங்களை - செய்திகளைப் பார்த்துக் கேட்டு அதிர்ச்சியடைந்த அவுஸ்ரேலியாவைச் ஓவியக்கலைஞரான எமா ஹேக் என்பவர் ஆண்கள், பெண்கள் என மொத்தமாக 17 பேரை தெரிவுசெய்து 18 மணித்தியாலங்களை செலவழித்து உருவாக்கிய ஒரு விபத்துக்குள்ளான காரின் தோற்றங்களே இவையாகும்.



## தன்னம்பிக்கை!

**செயற்கை** காலுடன் 103 மாடிகள் ஏறி சாதனை படைத்த மனிதர் அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் உள்ள 103 மாடி கட்டடமான வில்லிஸ் டவரில் ஞாயிற்றுக்கிழமை பயோனிக் செயற்கைக் கால் உதவியுடன் ஏறிச் சாதனை படைத்த சாக் வாவ்டர். இவ்வகையான செயற்கைக் கால்கள், பொருத்தப்பட்டுள்ளவரின் சிந்தனைக்கு ஏற்ப செயற்படும். இவர் மோட்டார் சைக்கிள் விபத்தில் தனது வலது காலை இழந்தார். சிக்காக்கோ மறுவாழ்வு நிறுவன ஆய்வாளர்கள் இந்த செயற்கைக்காலினைப் பொருத்தினர்.





## அன்பு உள்ளம்!

**திருமணமாகி** 88 ஆண்டுகளுக்கு பின்பு சீனாவை சேர்ந்த தம்பதியர் புகைப்படம் எடுத்துக் கொண்டுள்ளனர். சீனாவின் சிசுவான் மாகாணத்தின் நான்சோங் நகரை சேர்ந்தவர் வூ சோங்கான்(வயது 101), இவரது மனைவி வூ சோன்ஷி (வயது 103).

இவர்களுக்கு கடந்த 1924ஆம் ஆண்டு திருமணம் நடந்தது. அந்த காலத்தில் கமெரா பற்றி தெரியாத காரணத்தால், இவர்கள் புகைப்படம் எடுத்துக் கொள்ளவில்லை.

இந்நிலையில் புகைப்படம் எடுத்துக்கொள்ள பேரப்பிள்ளைகள் ஏற்பாடு செய்தனர். இதனையடுத்து இருவரும் திருமண உடை அணிந்து கொண்டு புகைப்படம் எடுத்து கொண்டனர்.



